அடிமை விலங்கு

முனைவர் க.த.திருநாவுக்கரசு
M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

மணியகம்
3/30 , இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை 600085.
9444453737

அடிமை விலங்கு

முனைவர்
க. த. திருநாவுக்கரசு

வெளியீடு
மணியகம்
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை–600 085
9444453737

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	அடிமை விலங்கு
பொருள்	:	நாடகம்
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு –அக்டோபர் 2024 முதல் பதிப்பு ஜூலை 1979
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	x + 150 = 160
தாள்	:	80 GSM Maplitho
எழுத்துரு	:	Tau–Marutham, Pt.11
அச்சிட்டோர்	:	அரசு ஆர்ட்ஸ், 78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை –600 014 044 – 28351101, 28588056 E–mail : arasuarts@gmail.com www.arasuarts.com
வெளியீடு	:	மணியகம் பதிப்பகம் 3/30, இரண்டாவது பிரதான சாலை, கோட்டூர் தோட்டம், கோட்டூர்புரம், சென்னை – 600 085 9444453737, tambalavanan@gmail.com
உரிமை	:	பதிப்பகத்திற்கே
விலை	:	இலவச வெளியீடு
எண்ணிக்கை	:	25 புத்தகங்கள்
ISBN	:	978–93–48345–78–3

முதல் பதிப்பின் பதிப்புரை

ஆராய்ச்சி அறிஞராக விளங்கும் பேராசிரியர் க.த.திருநாவுக்கரசு அவர்கள் நாடகங்கள் பலவற்றை இயற்றியுள்ளார். பெரும்பாலும் அவர் பணியாற்றிய கல்லூரிகளின் ஆண்டு விழாக்களில், மாணவ நண்பர்களால் அவை அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் சில வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

இவ்வாறு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நடிக்கப் பெற்ற நாடகங்களுள் இரண்டு வரலாற்று நாடகங்களை. இந்நூல் வடிவில் உலகிற்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளோம். 'அடிமை விலங்கு'. 'இருளில் ஒளி' எனும் இவ்விரு நாடகங்களும் தமிழக வரலாற்றின் இரு காலக்கட்டங்களை ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுகின்றன. இவை இரண்டும் தமிழ்ப் பண்பாட்டின் நோக்கையும் போக்கையும் அறிய உதவுகின்றன.

படிப்பதற்கு மட்டும் அல்லாமல், நடிப்பதற்கும் ஏற்ற வகையில் இயற்றப்பட்டுள்ள இந்நாடக நூலினைப் போற்றி ஆதரிக்குமாறு தமிழுலகை வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்.

முதல் பதிப்பின் முன்னுரை

'அடிமை விலங்கு', 'இருளில் ஒளி' எனும் இரு வரலாற்று நாடகங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இரண்டிலும் வரலாற்று உணர்வு இழையோடிச் செல்லுகிறது.

ஏறக்குறைய முந்நூறு ஆண்டுக் கால இடைவெளியில், தமிழகம் எவ்வெவ்வாறு காட்சி அளித்தது என்பதை இந்த இரு நாடகங்களும் சித்திரிக்கின்றன. 'அடிமை விலங்கு' எனும் நாடகம், தமிழ் மக்கள் தனியுரிமையோடு வீரவாழ்வு வாழ்ந்த சங்கக் காலத்தின் கடைசி நாள்களை நினைவூட்டும் வகையில் இயற்றப்பட்டுள்ளது. நிலவளமும், நீர்வளமும், மக்கள் மனவளமும் நிறைந்திருந்த சங்கக் காலத் தமிழகத்தில், முடியுடை மூவேந்தர் 'ஒரு மொழி வைத்து உலகாளத்' துடித்தனர். அக்காலத்தில், தமிழ் மக்களிடையே 'பல்குழுவையும் பாழ்செய்யும் உட்பகையை'யும் சில தன்னல வெறியர் வளர்த்தனர். அதனால், போரும் பூசலும் உண்டாயின; பசியும் பஞ்சமும் தலைவிரித்து ஆடின; உண்மைக்கு உழைத்தவர்கள் ஓட்டாண்டிகளாயினர்; வந்தேறிகள் ஆட்சியாளரின் கருத்தினைச் சூழ்ச்சிகள் பலவற்றால் தம் பக்கம் இழுத்தனர்; பகட்டு ஆரவாரத்தால், பாராண்ட பாவலரையும் நாடாண்ட நாவலரையும் தங்கள் வலையில் வீழ்த்தினர்; பெருவாழ்வைப் பெற்றனர்; பொற்பல்லக்கில் அந்தப் 'போலிகள்' புனித யாத்திரை செய்தனர்.

இதன் விளைவாக, தமிழக வேந்தர் அரசியல் உரிமையை இழக்கத் தொடங்கினர்; தமிழ்ப் பண்பாடு ஒளிகுன்றி நலியத் தொடங்கியது. இத்தகைய இன்னல்கள் பண்டைத் தமிழகத்தின் அரசியல் வானில் கருமேகங்களாகத் திரண்டன. அதைக் கண்ட சான்றோர்கள், தமிழ்ப் பண்பாட்டின் தலையூற்றாக

இன்று விளங்கும் இலக்கியங்களைத் தொகுக்கத் தொடங்கினர். இவ்வரும்பணியைப் பேரறிவு படைத்த வேந்தர்கள் போற்றி ஆதரித்தனர்.

அதே சமயத்தில் இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளியும், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும், சேரமான் மாவண்கோவும் ஒருங்கு இருக்கக் கண்ட புலவர் பெருமாட்டியான ஔவையார், அவர்களை 'முத்தீ' போன்று ஒன்றுபட்டு விளங்குமாறு (புறம். 367) அறிவுரை வழங்கினார்.

இவை யாவற்றையும் கருத்திற் கொண்டு, இன்று வாழும் தமிழ் மகனுக்கு அன்றைய தமிழகத்தின் வீழ்ச்சி, நல்லதொரு பாடமாக அமைய வேண்டும் எனும் நோக்கத்தோடு அடிமை விலங்கு எனும் இவ்வரலாற்று நாடகம் படைக்கப்பட்டுள்ளது.

இந்நாடக மாந்தருள் உக்கிரப் பெருவழுதி, மாவண்கோ, நக்கீரர், உருத்திரசன்மர், மருதனிளநாகனார் ஆகியோரே தமிழக வரலாற்றில் இடம் பெற்ற மாந்தராவர். மற்றையோர் நாடகக்கதை நயமுறவும், சுவைநலம் பயக்கவும் படைத்துக் கொள்ளப்பட்ட மாந்தராவர். எனினும், நாடகத் தலைவனும் தலைவியும், தமிழக வரலாற்றில் வீறுடன் விளங்கும் மாபெருந் தலைவன், தலைவியர் பலருடைய பண்புகளை எதிரொளிக்கும் வகையில் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

'இருளில் ஒளி' எனும் இரண்டாவது நாடகம், 'இருண்ட காலத் தமிழக வரலாற்றில்' திருப்புமையமான ஒரு காலக் கட்டத்தைக் காட்டுவதாகும்.

'இத்தகைய வரலாற்று நாடகங்களைப் படிப்பதால், பார்ப்பதால் என்ன பயன்?" என வினவும் அன்பர்கள் என் மனக் கண் முன்னால் தோன்றுகின்றனர். அவர்களுக்கு, " வரலாறு என்பது ஓர் இருட்டறை! வரலாற்று நாடகம் அவ்வறையில் ஏற்றப்படும் மணிவிளக்கு! அம்மணிவிளக்கின் ஒளியைக் கொண்டு சாமானிய மக்களும், தங்கள் நாகரிகத்தின் சிறப்பினைப் பண்பாட்டின் பெருமையினைச் சிறிதளவேனும் அறிந்து மகிழ்வர்; பூரிப்பு அடைவர்! புத்துணர்ச்சி பெறுவர்!" எனும் உண்மையை உணர்த்த விரும்புகிறேன்.

சென்னை,
20-7-79 **ஆசிரியன்**

உள்ளடக்கம்

1.	அடிமை விலங்கு	1
2.	இருளில் ஒளி	83
3.	நூலாசிரியரின் நூல்கள்	130
4.	தமிழ்க் கட்டுரைகள்	133
5.	வாழ்க்கைக் குறிப்பு	149

நாடக மாந்தர்

1. உக்கிரப் பெருவழுதி – பாண்டிய வேந்தன்
2. அமுதவல்லி – பாண்டியன் மகள்
3. மாவண்கோ – சேர வேந்தன்
4. வில்லவன் கோதை – சேரநாட்டு இளவரசர்
5. நக்கீரர்,
6. உருத்திரசன்மர்,
7. மருதனிளநாகனார்

(5–7: சங்கப் புலவர்கள்)

8. அழகன்,
9. மங்கை

(8–9: ஒற்றர்கள்–கணவன் மனைவியர்)

10. கார்மேகன் – கதம்பர் குலத் தலைவன்

மற்றும் வீரர், ஏவலர், பொது மக்கள் முதலியோர்

(1)

அடிமை விலங்கு

காட்சி 1

இடம்: பாண்டிய நாட்டு அரண்மனையைச் சார்ந்த சோலை.

நேரம்: மாலை

மாந்தர் : பாண்டியன் உக்கிரப்பெருவழுதியின் மகள் இளவரசி **அமுதவல்லி**; **மங்கை**, அழகன் முதலிய பாணர்கள்; இளவரசியின் தோழிகள் முதலியோர்.

அரச வீதியில் பாணர்கள் பாடிச் செல்கின்றனர்:

தெளிவு வேண்டுமால் தெளிவு வேண்டுமால்
சமயம் ஒன்றில் அமைய நின்றும்
உலகச் சான்றோர் உணர்த்துவ எல்லாம்
கலங்கா உள்ளத்தின் கற்றுத் தேறித்
தம்குறை உணர்த்தும் பிறர்நிறை கண்டும்
பொய்ம்மை களைந்தே மெய்ம்மை சாரும்
தெளிவு வேண்டுமால் தேர்ந்துயும் பொருட்டே!

(இதைக் கேட்ட இளவரசி, தம்முடைய தோழிகளை அனுப்பி அவர்களைச் சோலைக்குள் அழைத்துவரச் சொல்லுகிறாள்.)

தோழி : யாரங்கே பாடிக்கொண்டு போவது? இங்கே வாங்க! இளவரசி உங்கள் பாட்டைக் கேட்க அழைக்கிறாங்க.

பாடினி : அம்மே வணக்கம்... எங்கே இருக்கிறாங்க இளவரசி!

(தோழியர் அருகில் கலைஞர்கள் வருகின்றனர்)

தோழி : இந்த வழியாக என்னுடன் வாங்க....! இளவரசியைக் காட்டுகிறேன். அதோ பூங்கொடியைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்களே ஓரம்மா...! அவங்கதான் இளவரசி..!

பாடினி : அம்மே வணக்கம்! (என்று சொல்லி இளவரசியை வணங்குகிறாள். உடன் வந்திருக்கும் ஆடவன் சற்றுத் தொலைவிலிருந்து இளவரசிக்குத் தனது வணக்கத்தைத் தெரிவிக்கிறாள்)

அமுதவல்லி : (கலைஞர்களை நோக்கி) நீங்கள் எந்த ஊர்? எங்கே வந்தீர்? யாருக்குத் தெளிவு வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?

பாடினி: தாயே! கலைஞர்களுக்கு ஊரென்று ஒன்று ஏதம்மா? எங்களுக்கு 'யாதும் ஊரே: யாவரும் கேளிர்!...' நான் ஒரு பாடினி.. ஓவியமும் தீட்டுவேன். (அழகனைக் காட்டி) இவர்தான் என் கணவர். கைதேர்ந்த சிற்பி. நாங்கள் பாட்டிசைக்கும் பாணர்கள்.

அமுதவல்லி : ஓ 'ஒப்பற்ற கலைஞர்கள்...!

பாடினி : என்ற நற்சான்று பத்திரத்தை நாடாத கலைஞர்கள் அம்மா நாங்கள்...!

அமுதவல்லி : நன்றாகப் பேசுகிறாய்? நான் கேட்டதற்கு விடை சொல்லவில்லையே!

பாடினி: என்னம்மா? பதில் சொல்லிக்கொண்டுதானே இருக்கிறேன். இதற்குள்ள ...!

அமுதவல்லி : 'தெளிவு வேண்டும்' என்று பாடினீர்களே! அது என்ன பாட்டு?

பாடினி: (ஏதோ நினைத்தவள்போல்) ஓ! அதைச் சொல் நீங்களா? அது ஒன்றுமில்லை அம்மா! நாட்டிலே உள்ள வர்களுக்குத் தெளிவு குறைந்துபோய் விட்டதாம். அதனால், யாரோ ஒரு புலவர் அப்படிப் பாடியிருக்கிறார்!

உம்... இதைப்பற்றி எல்லாம் எங்களுக்கு என்னம்மா தெரியும்...?

அமுதவல்லி: ஓ! ஓ! அதுதான் உங்களைப் பார்த்தாலே தெரிகிறதே! (தோழி அருகில் வந்து அவர்களிடத்து உள்ள ஓலைக் கூடைகளைச் சுட்டிக் காட்டுகிறாள்) ஆமாம் அந்தக் கூடைகளில் என்ன இருக்கிறது?

பாடினி : இந்தக் கூடையிலா? இதில் கலைப்பொருள்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

தோழி : உங்கள் கலைத்தேர்ச்சியை அறிவிக்கும் சித்திரங்கள் சிலைகள் ஏதேனும் உண்டோ?

பாடினி : உண்டு! உண்டு! நிறைய உண்டு!

அமுதவல்லி : (பாடினியை நோக்கி) கலைச்செல்வியே! உன் கணவர் பேசமாட்டாரோ?

பாடினி : பேசுவாரம்மா!... அவருடைய மொழி தெரிந்தவரிடத்தில்....!

அமுதவல்லி : எந்த மொழி, அவர் சொந்த மொழி?

பாடினி : சைகை மொழிமா!

அமுதவல்லி : ஆ ! (வியப்புடன்) அவர் ஊமையா?

பாடினி : ஆமாம்...!

அமுதவல்லி: நீ கணவனாக எப்படி ஏற்றுக்கொண்டாய்?

பாடினி : இசைக்கலை, சிற்பக்கலையை மணந்துகொண்டது. அவரவர்களுடைய கூடைகளிலிருந்து பொருள்களை வெளியே எடுத்துக் காட்டுகின்றனர்.) அம்மா! இவை கலைத்தாய் பெற்ற கவின்மிகு செல்வங்கள்!

(தோழிகள் பொருள்களைத் தொட்டுப் பார்க்க முயலுகின்றனர். அழகன், ஊமை மொழியில் தொடக்கூடாது என்கிறான்.)

பாடினி : தாயே! எங்கள் கலைப்பொருள்களைக் காண விரும்பினா, உங்க தோழிகளைச் சற்று விலகியிருக்கச் சொல்லுங்க...!

அமுதவல்லி : (தோழிகளைப் பார்த்து) நீங்கள் போய், பரிசுப் பொருள்களைக் கொண்டு வாருங்கள்.

(தோழிகள் சோலைக்கு வெளியே போவதுபோல் பாவனை செய்கின்றனர். பிறகு ஓவியங்களையும், சிற்பங்களையும் பாடினி எடுத்துக் காட்டுகிறாள்; இளவரசி வியந்து மகிழ்கிறாள்.)

பாடினி : தாயே! இதோ சிற்றால வடடம்! இது சந்தனத் தகட்டால் செய்யப்பட்டு, மயிற் பீலி இணைக்கப்பட்டுள்ளது. சித்திர வேலைகள் உங்களுக்குப் பிடிக்குதாம்மா?

அமுதவல்லி : (விசிறியை விசிறிப் பார்த்துக்கொண்டே) ஆகா! நறுமணங் கமழ்கிறதே! இலேசாகவும் இருக்கிறது.

பாடினி : இதுதான் 'நீலப்பூவாடை'! 'சித்திரச்சேலை' என்றும் சொல்லுவாங்க... அம்மா! இதை அணிந்து பாருங்க! அழகா இருக்கும்.

அமுதவல்லி (சோலையில் உள்ள சித்திர மண்டபத்திற்குச் சென்று, அதனை உடலில் போர்த்திக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டே) பாடினி! சோலையிலுள்ள மலரனைத்தும் கொய்து மாலையாகத் தொடுத்ததுபோல் இருக்கிறதே இந்தச் சேலை! இந்தத் திறமெல்லாம்....

பாடினி: (அருகில் சென்று) நீரில் தோய்க்கத் தோய்க்க, அன்றலர்ந்த மலர்போலத் தோன்றும் அம்மே!

அமுதவல்லி : நீல வானத்து வண்ணப்பூக்களைப் பொறித்தது போன்றிருக்கிறதே! (சேலையைத் திருப்பித் திருப்பிப் போர்த்துப் பார்க்கிறாள்.)

பாடினி : இந்த ஓவியத்தைப் பாருங்க...! (ஓவியம் ஒன்றை நீட்டுகிறாள்.)

அமுதவல்லி : (அருகில் வைத்துப் பார்க்கிறாள்) ஆகா! அழகிய மலர்க்கொடி! மலர்கள் கதிரவனின் ஒளிபட்டுப் பொன்துகள் தூவியதுபோல் ஒளிர்கின்றன.

பாடினி: இதையே தொலைவில் வைத்துப் பாருங்க...!

அமுதவல்லி : (தொலையில் வைத்துப் பார்த்து) இது என்ன விந்தை! நாணிக் கோணிப் பொன் நகை யணிந்து, புன்னகையோடு தோன்றுகிறாளே ஒரு பெண்! என்ன அழகாக இருக்கிறது! இது ஓவியம்தானா? புதுமை மிகுந்த இச் சித்திரம் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டதே! அம்மா! கலை மடந்தையே! உனக்குப் பாடத்தான் தெரியும் என்று நினைத்தேன்! உங்கள் இனிய பாட்டைக் கேட்டு, முதலில் மயங்கினேன். உங்களை நேரில் கண்ட பிறகு, நான் கலையுலகையே என் கண்முன்னால் காண்கிறேன். முதலில், நான் தப்புக் கணக்கல்லவா போட்டு விட்டேன்!

பாடினி: பரவாயில்லை..! அது இயற்கை...! கலை சீரும் சிறப்புமாக வாழ்ந்தாபோதும்!

(மண்டபத்தை விட்டு வெளியே வருகின்றனர். அழகன் தன் சிற்பங்களைக் காட்டுகிறான். அந்தச் சிற்பங்களின் சிறப்பை விளக்குகிறாள் பாடினி.)

பாடினி : இளவரசி! கல், மண், மரம், பளிங்கு, பவளம், தந்தம், சங்கெல்லாம் எங்கள் அத்தானின் கைகளில் அகப்பட்டால், அழகிய சிற்பங்களாகிவிடும்.

அமுதவல்லி : ஊம்!... எதோ காட்டு?

பாடினி : இதோ பாருங்க! இது கடல் சங்கினால் செய்யப்பட்ட வளையல்! இது பொன்னாலும், முத்தாலும் செய்யப் பட்ட சூடாமணி! இது வைரம் இழைக்கப்படவேண்டிய குழை! இதுதான் பெருமுத்து! இது நுரைப்பாறையால் செய்யப்பட்ட மணிக்குவளை!

அமுதவல்லி : இவற்றை விலைக்குத் தருவீர்களா?

பாடினி: ஐயோ! கலைக்குப் பேரிழுக்கு! கலைக்கு விலையுண்டா தாயே? விலை மதிக்க முடியாதது அல்லவா கலைப் பொருள்கள்! (மௌனம்) என்னம்மா பேசாமல் உற்றுப் பார்க்கிறீங்க! உங்களுக்கு எங்கள் அன்புப் பரிசாக வேண்டுமானால் இவற்றைத் தருகிறோம். உம்...! கலைஞரை விலைஞராயும், விலைஞரை விற்பன்னராயும் கருதும் பொல்லாத காலம் அம்மா இது...! பொல்லாத காலம் இது!

(அழகள் ஓர் அழகிய தந்தச் சிலையை வெளியே எடுக்க. அதைச் சீலையால் பாடினி மூடி மறைக்கிறாள் .)

அமுதவல்லி : ஏன் மறைக்கிறாய்? நான் பார்க்கக் கூடாதா?

பாடினி: பார்க்கக் கூடாதது ஒன்றுமில்லை'மா! எங்கள் அத்தானின் கலைப் படைப்பில் தலைசிறந்த இச் சிற்பத்தை. உங்களுக்குக் காட்டாமல் விடுவேனா? (சுற்று முற்றும் பயந்தபடி பார்க்கிறாள்.)

அமுதவல்லி : ஏன் இப்படி அஞ்சுகிறாய்?

பாடினி: எங்களுக்குத் தீமை செய்வதில்லை என்று நீங்கள் ஆண்டவன்மேல் ஆணையிட்டுச் சொன்னாதான், நான் அந்தச் சிலையைக் காட்டுவேன்!

அமுதவல்லி : உங்களுக்கு எத்தகைய துன்பமும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். பயப்படாதே பெண்ணே! இது என்னுடைய அரண்மனை! இங்கு என்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் வரமாட்டார்கள்!

பாடினி: (பட்டுச் சீலையை நீக்கித் தந்தச் சிலையைக் காட்டுகிறாள்) கண்குளிரப் பாருங்க...! குன்றுகளைப் போன்று திரண்ட தோள்களைப்படைத்த **வீரன்** இவன்; தடமார்பன்; தறுகணாளன்; வீரத்திற்குச் சான்றாய் விளங்கும் வில்லேருழவன். இவன் கண்ணிமைப்பைக்

கட்டளையாக ஏற்று, நாட்டைக் காக்க வீரர்கள் நாடெங்கும் ஆயிரக் கணக்காகக் காத்துக் கிடக்கின்றனர். இவனைப் பகைத்து மாண்டோர் எண்ணில் அடங்கார். இவன் எளியவரின் தோழன்; தலைக்கனம் பிடித்தோரின் பகைவன்!

அமுதவல்லி : யார் இந்த மாவீரன்?

பாடினி : ஓர் இளவரசன்! பொன்போல் பொலியும் அவன் முகத்தையும் அரும்பு மீசையையும் பார்த்த பாவையர் மதிமயங்காமல்...

அமுதவல்வி : ஏன் இழுக்கிறாய்...? போதும் நிறுத்து...!

பாடினி : இல்லை தாயே! ஒன்றும்... தவறாகச் சொல்ல மாட்டேன்! அவன் விரலசைத்தால் படைவீரர்கள் பம்பர மாகச் சுழல்வர்; கலையைப் போற்றும் காவலன் அவன்! தன் தாய் மொழியில் பாவலன்; அவன் நடையிலே ஏறு; வீரர்களிலே ஒரு மா**வீரன்**. அக்காளையின் கட்டழகைத் தந்தச் சிலையாக்கித் தந்துள்ள பாங்கினைப் பாருங்க இளவரசி!

அமுதவல்லி : அப்பப்பா! என்ன அழகிய தோற்றம்!

பாடினி: பார்த்தீங்களா? உங்கள் உள்ளத்தைத் தொட்டது அழகுத் தோற்றந்தானே? என் அன்பரின் அருங்கலைத் திறனை மறந்துவிட்டீரே!

அமுதவல்லி : இரண்டும்தான் சுவர்கின்றன. கலையும் கவினும் இரண்டறக் கலந்து கிடக்கும் இணையற்ற காட்சி இது! இவர் எந்த நாட்டு இளவரசர் என்பதை...

பாடினி : பிறகு சமயம் வாய்க்கின்றபொழுது சொல்லு'றேன். நாங்கள் பிறகு வர'ம்மா! (தோழியர் முத்துமாலையைக் கொண்டு வருகின்றனர்.)

அமுதவல்லி : உன் பெயரைச் சொல்லாமல் போகிறாயே?

பாடினி : என் பெயர் **மங்கை** அம்மா!

(மங்கையிடம் அமுதவல்லி பரிசாக முத்துமாலை ஒன்றைக் கொடுத்து அனுப்புகிறாள்.)

காட்சி 2

இடம்: பாண்டிய நாட்டில் ஒரு மறைவிடம்.

நேரம்: காலை

மாந்தர்: சேரநாட்டு ஒற்றர் குழுவினராகிய கலைஞர்கள்.

மங்கை: அன்பரே ! உங்கள் ஊமையன் நடிப்பு, என்னை மலைக்கச் செய்துவிட்டது.

அழகன்: அது ஒன்றும் எனக்குக் கடினமாக இல்லை. நீதான் பொழிந்து தள்ளிவிட்டாயே!

மங்கை : இந்த இளவரசியின் எழிலைப் பார்த்தீரா?

அழகன்: அச் சேல்விழியாளை விரைவில் சிலையாகச் செதுக்க வேண்டும்.

மங்கை: வேண்டாம் ! **அமுதவல்லி**யை அப்படியே மனத்தி லிருத்தி, நான் ஓவியம் ஒன்றை வரைந்திருக்கிறேன். அதை, நம் நாட்டிற்கு அனுப்பி, அரண்மனை முகப்பில் அழகோவியமாக அலங்கரிக்கச் செய்யலாம்.

(வீரன் ஒருவன் ஒற்றர்களை நோக்கி வருகிறான்.)

அழகன்: வா தம்பி ! நம் நாடெல்லாம்...

வீரன்: செழிப்பாகத்தான் இருக்கிறது. அயல்நாடு சென்றிருந்த நம் மன்னர் **மாவண்கோ** தாயகம் திரும்பிவிட்டார்.

அழகன், மங்கை : (இருவரும் சேர்ந்து) மன்னர் மாண்புற்று விளங்குவாராக! மக்கள் எல்லாரும் நலந்தானே?

வீரன்: மக்களுடைய மகிழ்ச்சிக்கு என்ன குறை ? மன்னர் பெருமானுக்கு மக்கள் தந்த வரவேற்பினையும், எடுத்த விழாவினையும் இதற்கு முன்பு நான் கண்டதே இல்லை !

மக்களுடைய எழுச்சி மிக்க வரவேற்பினைக் கண்டு மகிழ்ச்சியுற்றார் வேந்தர். அயல்நாட்டுச் சுற்றுப் பயணத்தின்பொழுது, பல்வேறு நாட்டு அரசர்கள் தமக்கு அன்பளிப்பாகக் கொடுத்த பரிசுப் பொருள்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார். அவற்றை மக்கள் கண்டுகளிக்க வேண்டுமெனக் கருதி, அவற்றைக் காட்சிப் பொருள்களாக வைத்துக் காப்பதற்காக, அவர் 'கலை மன்றம்' ஒன்றை அழகுற அமைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

அழகன்: மகிழ்ச்சி! இதோ, இந்த ஓவியத்திற்கு விளிம்பு கட்டி, கலை மன்றத்தில் எல்லாருடைய கண்களையும் கவரக்கூடிய இடத்தில் வைக்க ஏற்பாடு செய்க! ....வேறு செய்தியாதாகிலும் உண்டா?

வீரன்: மறந்துவிட்டேன். யவன வணிகர்கள் மேலைக் கடற் கரைப் பகுதியில் பெரிய மரக்கலங்களோடு வந்தனர் . அவர்களுடைய மரக்கலங்களைக் கதம்பர்கள் கொள்ளை அடித்துவிட்டனர்.

அழகன்: வடக்கிலோ களப்பிரர் இடையிடையே சலசலப்புச் செய்து கொண்டிருக்கின்றனர். நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

வீரன்: 'நமக்குப் புது நாடு வேண்டாம். நம் பொன்னாட்டை ஒழுங்காகப் போற்றிக் காப்பதே நமது கடமையாக இருக்க வேண்டும்' என்கிறார் நமது வேந்தர்.

அழகன்: களப்பிரருடைய ஊடுருவலுக்கு, நம்மில் சிலர் ஆதரவு தருவதாகத் தெரிகிறது. மற்றும் சிலர், தம் தாய்த் திருநாட்டில் அயலார் அடியெடுத்து வைக்காமல் தடுத்து, நிறுத்த வேங்கடத்திற்கு வடக்கே இரவும் பகலும், ஓயாது காவல் புரிந்து வருகின்றனர்.

வீரன்: மானக்கேடான நிலை! நமக்குத் துணைபுரியாவிட்டாலும் பரவாயில்லை. நம் துணையை வெறுக்கின்றார்கள் சில மன்னர்கள். இறுதியில், தமிழினம் அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கப்போகிறது!

அழகன்: ஆம்! தங்களுக்கு இடையே உண்டான பதவிப் போட்டியாலும், போலித் தன்மானத்தாலுமே தமிழினம் அயலாருக்கு அடிமையாகப் போகிறது...! அது உறுதி. அதற்குரிய அறிகுறிகள், இன்றைய தமிழக அரசியல் வானில் மின்னல் போல் தோன்றி, மறைந்து கொண்டிருக்கின்றன.

வீரன்: உண்மை...! உண்மை...! நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை...! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது அண்ணா......! சரி! நான் அரசரிடம் கூற வேண்டி செய் திகள் யாதேனும் உண்டோ!

அழகன்: தம்பி! விரைவில் நான் தலைநகருக்கு வருகிறேன் ; சென்று வா!

காட்சி 3

இடம் : சேரநாட்டுத் தலைநகரில் புதியதாக அமைக்கப்பட்ட கலை மன்றம்.

நேரம் : பிற்பகல்.

மாந்தர்: அரசர் **மாவண்கோ**; இளவரசர் வில்லவன் கோதை; மன்றப் பொறுப்பாளர்

மாவண்கோ: (முகப்பில் வைக்கப்பட்டிருக்கும் ஓவியத்தைப் பார்த்து) இந்த ஓவியம் மிக அழகாயிருக்கிறதே! யார் இந்த ஓவியப் பாவை? உடையணிகளைப் பார்த்தால், பாண்டிய நாட்டுப் பாவை போலல்லவா தோன்றுகிறது!

மன்றப் பொறுப்பாளர்: இவள் பாண்டிய நாட்டு இளவரசி ! பாண்டியர்தம் குலக்கொடி; **அமுதவல்லி** எனும் **மங்கை** நல்லாள்.

மாவண்கோ : அமுதவல்லி! தன் மகளுக்கு வாள்போர் பயிற்றுவிக்க,ஆசான் ஒருவன் தேவை என்று பாண்டிய மன்னன் சில ஆண்டுகளுக்கு முன்னர் முடங்கல் ஒன்று அனுப்பி இருந்தார். அது இவளுக்காகத்தானா......?

ம.பொறுப்பாளர்: ஆம் அரசே! வழுதிக்கு ஒரே மகள்தானே...! அறிவிலும் அழகிலும் மேம்பட்டவள். இவளை மணக்க தமிழக மன்னர் மட்டுமல்லாமல், வட புலத்து அரசர்களும் போட்டியிடுகின்றனர். ஆனால், அவளோ, தன்னை மணக்கும் தகுதி படைத்தவன் இவ்வுலகில் இன்னும்

பிறக்கவில்லை என்று கூறுகிறாளாம்...!

இளவரசர்: தலைக்கனம் பிடித்தவளோ?

மாவண்கோ : இருக்காது! வீராங்கனை வீரனைத்தான் விரும்புவாள். அவள் விரும்பும் இலட்சிய**வீரன்** ஒருவன், இந்த மண்ணில் இதுவரையில் பிறக்கவே இல்லை என்று யாராகிலும், அவளிடத்து உளறி இருப்பார்கள். அதை, அவள் உண்மை யென்று நம்பிவிட்டு இருப்பாள். அதனால், அவளுடைய இளமைத் துடிப்புமிக்க வீர உள்ளம் தமிழினத்து அரசர்களைப்பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விட்டதுபோலும்!

இளவரசர்: ஆளைப் பார்க்காமலேயே முடிவுக்கு வந்து விட்டீர்களே....!

மாவண்கோ : அவளுடைய முகத்தில் அறிவொளி வீசுவதைப் பார்த்தாலே தெரிகிறதே! சிறந்த உள்ளம் படைத்த வீரர் பரம்பரையில் வந்தவள் என்பது நாடறிந்த உண்மை யல்லவா?

இளவரசர்: (சிறிது புன்முறுவலுடன்) அறிவு உடையவள் என்பதனால்தான், அவளுக்குத் தலைக்கனம் உண்டாகியிருக்கிறது! இல்லையென்றால்...

மாவண்கோ : வில்லவா! உனக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்! நமது நாட்டில் தோன்றிய மறக்குடி மங்கையரின் வீர வரலாற்றை மறந்துவிடாதே! பாண்டிய நாடு, தமிழகத்தின் பண்பாட்டைப் பேணிக் காக்கும் பழைமையான நாடு, அந்த நாட்டினைப் 'பண்டைய நாடு' என்று நம்முடைய முன்னோர்கள் போற்றினர்! இன்றைக்குப் 'பாண்டிய நாடு' என்று நாம் குறிப்பிடுகிறோம்! முடிவாதத் தொல்பழங்காலத்தில் தோன்றியது என்பது நம்முடைய சான்றோர்கள் கூறிவரும் செய்தியாகும்.

இளவரசர்: அரசே ! அதனால் நமக்கென்ன ஆதாயம்?

மாவண்கோ : நமக்கென்னவா? மூவேந்தர்குடியில் முதன்மையானது, பழமையானது பாண்டியர் குடியென்றால். தமிழினத்தவர்களாகிய நமக்கு அது சிறப்பல்லவா? நம்முடைய சேரர் குடியும், சோழர் குடியும் காலத்தால் பிற்பட்டவை என்பதனால் நமக்கு இழுக்கொன்றும் இல்லையே!

இளவரசர்: இழுக்கென்று நான் கருதவில்லை...! ஆனால், அந்தப் பெண்ணிற்கு இவ்வளவு ஆணவம் கூடாது என்பதைத்தான் நான் கூற விரும்புகிறேன்.

மாவண்கோ : பாண்டிய வேந்தருக்கு வேறு பிள்ளைகள் கிடையாது. அதனால் தம்முடைய மகளை, வீரம் மிக்க வீராங்கனையாக விளங்குமாறு அவர் வளர்த்து வருகிறார். எனவேதான், அவள் துள்ளித் திரியும் பருவத்திலேயே, மாண்புமிக்க மறக்குடி **மங்கை**யென்பதை உலகறியச் செய்திருக்கிறாள்.

இளவரசர்: நன்று! நன்று! தாங்கள் ஏதோ அவளைப் பெற் றெடுத்த தந்தையைப்போல், அவளுக்காகப் பரிந்து பேசுகின்றீர்...!

மாவண்கோ : சுற்றி வளைத்துப் பேசுவதாக நினைக்க வேண்டா...! கடந்த பதினைந்து ஆண்டுகளாகத்தான் பாண்டியர் குடியும், நமது சேரர் குடியும் நட்புறவு கொண்டுள்ளன. அந்நட்பு நீடிக்கவேண்டும் என்பது என் அவா! அந்நட்பு, இன்றைய அரசியல் சூழ்நிலையில் நீடித்தால் மட்டும் போதாது. அதைத் 'திருமணம்' என்னும் உரமிட்டு, அன்பெனும் நீரைப் பாய்ச்சி, பேராற்றல் உடைய 'உறவாக வளர்க்கவேண்டும்.

இளவரசர் : அதனால்...!

மாவண்கோ : அப்படி வளர்த்தால் தமிழகத்தில் ஒன்றுபட்ட ஒரு பேரரசை ஆற்றல்மிக்க நல்லதொரு பேரரசை நிறுவ வாய்ப்புக் கிடைக்கும். இன்று தமிழகத்தின் வடக்கு வாயிலைக்,களப்பிரர் என்னும் கொள்ளைக் கூட்டத்தினர் தாக்கிக் கொண்டு இருக்கின்றனர். தெற்கே, சிங்கள அரசு என்றைக்குத் தமிழரின் மேலாதிக்கத்தை உதறித் தள்ளலாம் என்று தக்கவாய்ப்பினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது! இதற்கிடையில் மேலைக் கடற்பகுதியில் கதம்பர்கள் கொள்ளையடிப்பதையே பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர் தமிழினத்தையும், தமிழ்ப் பண்பாட்டை யும் போற்றிக் காக்க... இந்நிலையில் ஆற்றல்மிக்க ஒரு பேரரசு நமக்குத் தேவைப்படுகிறது...!

இளவரசர் : அதற்காகப் பாண்டியன்மீது படையெடுத்துச் சென்று,பாண்டிய நாட்டைக் கைப்பற்றி ஒரு பேரரசை நிறுவலாமே!

மாவண்கோ : வேங்கடத்தின் வடக்கே ஆட்சி புரிந்த திரையன் மாற்றாரால் கொலை செய்யப்பட்டான். தொண்டை நாட்டில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அரசு கட்டிலேறிய தொண்டைமான் ஆற்றல்மிக்க அரச னாக இல்லை. சோழநாட்டிலோ, இயற்கையின் சீற்றத்தால் பூம்புகார் கடலுக்கு இரையாகிவிட்டது. சோழ மன்னனோ, தன் மகன் கொலை செய்யப்பட்ட துன்பத்தினைத் தாங்க முடியாமல் மாண்டுவிட்டான். அவனுடைய தாயத்தார்களுக்கு இடையே போட்டியும் பூசலும் தோன்றியதன் விளைவாக, அத்தாடு அல்லோல கல்லோலப்படுகிறது.!

இந்தகைய இக்கட்டான நிலையில் நம்மை தாமே தற்கொலை செய்துகொண்டு மாளவேண்டும் என்று அல்லவா நீ சொல்லுகிறாய்..?

இளவரசர்: எதற்காகத் தற்கொலை செய்துகொண்டு மாள வேண்டும்? நான் ஆற்றல்மிக்க ஒரு பேரரசை நிறுவுவதற் குரிய வழியைச் சொன்னேன்...

மாவண்கோ: உன்னுடைய வழியைத்தான், நான் தற்கொலைக்குச் சமம் என்று சொல்லுகிறேன், வழுதியின்மீது படையெடுத்துச்சென்று, அவர் நாட்டைக் கைப்பற்றுவது என்பது, நம்முடைய ஒற்றுமையை – தமிழகத்து மக்களுடைய ஒன்றுபட்ட ஆற்றலை–நாமே குலைக்க–அழிக்க முயல்வதாகும். அதற்காகத்தான், நம்மிடையே நிலயும் நட்புறவினை வலுவுடையதாக்கிக் கொள்ள, வேறொரு வழியினை நாடவேண்டும் என நான் கருதுகின்றேன்.

இளவரசர்: நீங்கள் நாடும் வழிதான் என்ன என்பதைத் தெளிவாகக் கூறுமாறு வேண்டுகிறேன்.

மாவண்கோ: எனக்குப் பிறகு, இந்த நாட்டினை, ஏன், தமிழ்கூறும் நல்லுலகத்தையே, கட்டிக் காக்கும் பொறுப்பு உன்னையே சாரப் போகிறது! அப்பொழுது நீ தமிழ்ச் சமுதாயத்தின் மாபெரும் தலைவனாக விளங்க வேண்டும் என்றால், அதற்குள் நீ இந்த நாட்டு மக்களின் உள்ளக் கோயில்களில் இடம் பெற வேண்டாமா? உனக்கும் பேராற்றல் வாய்ந்தத் துணைவர்கள் தேவைப்படுவார்கள் அல்லவா?

அதனால்தான் வீராங்கனையாக விளங்கும் பாண்டியன் பாவையை உனக்கு மணம் முடித்து வைக்க விரும்புகிறேன். அம்மணம் நடைபெறுமானால், என்னுடைய பணி–ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்கும் அரும்பணி – பேரளவிற்கு வெற்றி பெற்றுவிட்டது என்று கூறுவேன்.

இளவரசர்: ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்க வேண்டுமா? அது என்ன அவ்வளவு எளிய செயலா? சேரரும்,

பாண்டியரும் மணவுறவு கொண்டுவிட்டால், தமிழகம் ஒன்றுபட்டுவிடுமா அப்பா? மலையமானும், அதியமானும் தீராப் பகைமை கொண்டு, தமிழகத்தின் ஒரு பகுதியை இரத்தக் காடாக்கிக் கொண்டிருக்கின்றனர். கிள்ளிகளும் வளவர்களும் அரசுரிமைப் போரொன்றை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இவற்றுக்கிடையே தொண்டைமான் மரபினர் சோழ நாட்டைத் தாக்கி, அரியணையைக் கைப்பற்ற வட நாட்டு மன்னர்களைத் துணைக்கு அழைக்கின்றனர். இத்தகைய சீர்கேடான நிலையில், ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்கும் கனவைக் காண்கிறீர்...? அது வெறுங்கனவாகிவிடக் கூடாதே என நான் அஞ்சு... கி... றே...ன்!

மாவண்கோ : வில்லவா! வீணாக மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே! குணவாயில் கோட்டத்து அரசு துறந்து இருந்த நம் முன்னவர், தம்முடைய காப்பியத்தில் காட்டிய ஒன்றுபட்ட தமிழகத்தை, நாம் உருவாக்கவில்லையென்றால்,'நம் மினம்''நமது பண்பாடு' 'நமது நாடு' பூண்டோடு அழிந்துவிடும் என்பதை உனக்கு எடுத்தியம்ப விரும்புகிறேன். அது வெறுங் கனவல்ல......! நனவாக... வேண்டிய கனவு!

இளவரசர் : நல்ல கனவுதான்!

மாவண்கோ ; வருங்காலத்தில் 'தமிழன்' என்றொரு இனமிருக்க வேண்டுமானால், நாம் எப்பாடு பட்டாகிலும் செயலாற்றித் தீரவேண்டிய பணி அது! அவ்வரும்பெரும் முயற்சிக்கு நமது நாட்டு மக்களனைவரும், ஏன் குறுநிலமன்னர்களும் கூட, உற்ற துணையாக இருப்பார்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்து வருகிறது.

இளவரசர்: வெற்றிவேந்தே! தங்கள் உள்ளக் கருத்தைப் புரிந்துகொள்ளாமல், நான் ஏதோ உரைத்துவிட்டேன்;

பொறுத்தருள்க! தங்கள் கனவை, நினைவாக்க விரைவில் கால்கோள் விழா நடத்துகிறேன்!

மாவண்கோ: மகிழ்ச்சி மகனே! மகிழ்ச்சி! நம்முடைய அம் மாபெரும் திட்டத்தின் முதற்படிதான், பாண்டிய மன்னரோடு மணவுறவு கொள்ளுவது...! அதற்குரிய வழியினைக் காண்போம்.

இளவரசர்: நீங்கள் நினைப்பதைப் போன்று அம்முயற்சி எளிதல்ல.

மாவண்கோ : ஏன்? முயன்றால் முடியாதது உண்டோ?

இளவரசர்: அப்பெண்ணின் மனத்தை மாற்ற திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாலும் முடியாதாம்... !'

மாவண்கோ: உம்...! முயலவேண்டிய முறையையும் வழியையும் ஆராய்ந்து, காலம் கனியும்போது அதற்குரிய நெறியில் செல்லுவோம்....

("வாழ்க வேந்தர்!" எனும் ஒலி கேட்கிறது; அரசரும் இளவரசரும் கலை மன்றத்திற்குள்ளே நுழைகின்றனர்)

காட்சி 4

இடம்: பாண்டிய நாட்டு அரண்மனை

நேரம்: மாலை

மாந்தர்: உக்கிரப் பெருவழுதி; சேர நாட்டுத் தூதுவன்; இளவரசி **அமுதவல்லி**.

(சேர நாட்டுத் தூதுவன். சுருள்மடலைப் பாண்டியனிடம் பணிவோடு கொடுத்துவிட்டு, விடை பெறுகிறான். உடன் இருந்த இளவரசி, அரசர் அம்முடங்கலைப் படிப்பதைக் கூர்ந்து கவனிக்கின்றாள்.)

வழுதி: (மகிழ்ச்சியுடன்) நல்ல செய்தியைக் கொண்டு வந்தான் சேரநாட்டுத் தூதுவன்...!

அமுதவல்லி : நல்ல... செய்தி...! நல்ல செய்தி! என்னப்பா அது! நம்முடைய நட்புறவு முறிந்து, போர் மூண்டுவிட்டதா?

வழுதி: இல்லையம்மா! நான் இருக்கும் வரையில் அப்படியெல்லாம் நடைபெறாது. **மாவண்கோவும்** சிறந்த குறிக்கோளையுடைவர். எனவே, அந்த அச்சத்திற்கே இனி இடம் கிடையாது. இதோ! இந்தத் திருமுகத்தைப் பார்!

அமுதவல்லி: (சலிப்போடு பெற்று, படிக்கிறாள்) 'அப்பா! எந்தச் சோளக்கொல்லை பொம்மைக்குப் பெண் கேட்டிருக்கிறார்கள்?

வழுதி: (மகிழ்ச்சியும், வியப்பும் கலந்து தோன்ற) சோளக் கொல்லை பொம்மையா? சேர நாட்டு இளவரசன், பேரழகன் என்பதை நீ கேட்டதில்லையா?

அமுதவல்லி: பேரழகன் என்றால், நீங்கள் எடுக்கும் தமிழ்ச் சங்கத்து மண்டபத்தின் வாயிலில் காவல் வையுங்கள் ; மிக அழகாயிருக்கும்.

வழுதி: வல்லி! அவன் சேரர் குடியில் தோன்றிய மாவீரன் அம்மா..! வருங்காலத் தமிழகப் பேரரசின் முடிசூடா மன்னன் அவன்....!

அமுதவல்லி: அதற்காக நீங்கள் உங்கள் மகளைச் சேரனுக்கு...!

வழுதி: திருமணம் செய்து தரலாம் என்றே நினைக்கிறேன். ஐந்தாறு மாதங்களுக்கு முன்பே, நான் இவ்வாறு நினைத்தேன். ஆனால், இன்று சேர வேந்தரே திருமுகம் அனுப்பியிருக்கிறார்.

(அமுதவல்லி மெல்ல நகர்ந்து வெளியே செல்லுகிறாள் .)

ஏன் அம்மா! போய்விடுகிறாய்? உனக்கு ஏன் சேரன் மீது வெறுப்பு?

அமுதவல்லி: எனக்கு வெறுப்பு யார் மீதும் கிடையாது...! ஆனால், ஏனோ தமிழக வேந்தர்கள் யாரையுமே எனக்குப் பிடிக்கவில்லை.

வழுதி : ஏன் அப்படிச் சொல்கிறாய்! 'பெற்ற தாயினும் பிறந்த பொன்னாடு நற்றவ வானினும் நனி சிறந்த'தம்மா!

அமுதவல்லி: (சீற்றத்துடன்) அப்பா! தாய்த்திருநாட்டைப் பழிக்க நான் யார்? என்னை ஈன்றெடுத்து, இன்னமுதூட்டி வளர்த்துப் போற்றும் அருமைத் தாயகத்தை நான் பழிக்க வில்லை! அத்தாயகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பேற்றுள்ள அரசர்களைத்தான் பழிக்கிறேன்...!

வழுதி: என்ன செய்துவிட்டார்கள் அம்மா! நமது குடியும்.

அந்த அரசர் குடியில் ஒன்றல்லவா? வீணாக வெறுப்புக் கொள்ளுதல் கூடாதம்மா!

அமுதவல்லி: ஒற்றுமையே சற்றுமற்ற தமிழக வேந்தர்களைப்புகழ்ந்து பேசினால், என் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதைப்போல் இருக்கிறது அப்பா...! நீங்கள் மட்டும் ஏனோ விதிவிலக்காய் விளங்குகின்றீர்! தம்மையும் காத்துக்கொள்ளத் தெரியாது; தம் குடை நிழலில் தங்கிய குடிகளையும் காக்கத் தெரியாது இந்தத் தமிழக மன்னர்களுக்கு! கோழையை மணந்து கொள்வதைவிட, ஏழையை மணந்து வாழ்வது மேல், அவன் வீரனாக இருந்தால்...! தமிழகத்தின் தற்கொல்லிகளை மணப்பதைவிட பிணக்குழிதோண்டி, கனல்மூட்டிக் கன்னியாகவே நான் தீக்குளிக்கலாம்...! (பெருமூச்சு விடுகிறாள்)

வழுதி: குலக்கொழுந்தே! ஏன் இந்த விபரீத முடிவு?

அமுதவல்லி: நம் வீட்டுப் பொன்விளக்கு என்பதால் முத்தமிட்டு மகிழ முடியுமா அப்பா?

வழுதி: குறையில்லாத மக்களினம் ஏதம்மா? குறை நீக்கி, நெடும் புகழ் பெறலாமே நீ! உன் அறிவும், ஆற்றலும் அதற்குப் பயன்பட்டால் உன்னை வீராங்கனையாக போற்றுவரே நம் மக்கள்!

அமுதவல்லி: பெண் என்றால் பேதை என்னும் புதுமைக் கருத்தில் மயங்கிப் போனவர்களிடத்தில், ஆற்ற முடியாத செயலைக் கூறுகிறீர்கள்! உடல் முற்றிலும் நாகத்தின் நஞ்சேறிய பிறகு, மருந்து கொடுத்துப் பிழைக்க வைக்க முடியுமா? வெள்ளம் தலைக்குமேல் ஓடுகிறபொழுது, மூழ்குவோரை மீட்க நீரில் குதிப்போர் நிலை என்னவாகும்? விழலுக்கு நீர் இறைத்து, வீணர்களுக்காக என் வாழ்வைப் பாழாக்க நான் விரும்பவில்லை அப்பா...!

வழுதி: (வருத்தத்துடன்) உன் பளிங்கு போன்ற தூய உள்ளத்தில், யாரம்மா நஞ்சைக் கலந்துவிட்டனர்?

அமுதவல்லி: நஞ்சை யாரும் கலக்கவில்லை அப்பா! நாடாண்ட காவலர்களின் களங்கத்தையும், கையாலாகாத பண்பையும் பாவலர்கள் பாமாலை பாடி வைத்திருக் கிறார்களே...! அது போதுமே அப்பா! இந்த இனத்திலே பிறந்ததற்காக வெட்கப்படுகிறேன்! வேதனைப்படுகிறேன்!

வழுதி: பாவலர்கள், பாராண்ட காவலர்களின் புகழ்மிக்க வாழ்வையும், வரலாற்றையும் அல்லவா பாராட்டிப் பாடியிருக்கிறார்கள்?

அமுதவல்லி: ஆமாம்! புலவர்கள் தொங்கவிட்ட துலாக்கோலின் தாழ்ந்த தட்டில்தான் தமிழர்கள் நிற்கிறார்கள்.

வழுதி: பிறவியிலேயே தமிழர்கள் மாபெரும் வீரர்கள்! அவர்கள் மண்ணகத்தை விண்ணகமாக்கும் வெற்றிவீரர்கள்! அவர்களுடைய புகழ் வேங்கடத்திற்கு அப்பால்; விந்தியத்தின் விளிம்பிலே, இமயத்தின் சிகரத்திலே ஏதிரொலிக்கிறது அம்மா!

அமுதவல்லி: மண்ணக வாழ்வினை மாண்புடையதாக்கிக் கொள்ளத் தெரியாதவர்கள், விண்ணக வாழ்வை மண்ணகத்தில் கொண்டுவரப் போகிறார்களா? ஐயோ பாவம்...! அவர்களுடைய புகழ் வேறு, திக்கெட்டும் எதிரொலிக்கிறதே?

வழுதி: ஏன் எதிரொலிக்கவில்லை? நீயே கேட்டு மகிழப்போகிறாய்...!

அமுதவல்லி: உம்...! தென்னகத்தை ஆட்சிபுரிந்த முடியுடை மூவேந்தர்கள் போட்டியும், பொறாமையும், போலி மானமும் கொண்டு, நாட்டில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடச் செய்தது உங்களுக்குத் தெரியாதா? தாயின் வயிற்றிலிருந்தபொழுதே, தந்தையை இழந்த

திருமாவளவனைத் தீயிட்டுப் பொசுக்க முயன்றது யார்? அன்று 'இளையன் இவன் என உலையக் கூறிச், சிறு சொல் சொல்லிச், சிறுவன் நெடுஞ்செழியனை என் பாட்டனை – தலையாலங்கானத்துப் போர்க்களத்துக்கு அழைத்தார்களே? அவர்கள் யார்? மௌரியர்களா? சாதவாகனர்களா? யவனர்களா? எல்லாரும் தமிழர்கள் தாமே ...?

ஆலங் கானத்து அகன் தலை சிவப்பச்
சேரல், செம்பியன், சினம்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நார் அரி நறவின் எருமை யூரன்
தேம்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன்

(அகம். 36.)

[எனும் பெயர்கள் எல்லாம் தமிழருடைய பெயர்கள் தாமே...?

வழுதி: இதில் என்ன ஐயம்?

அமுதவல்லி : இவர்கள் அன்று எதற்காகப் 'பால் மணம்மாறாத பசுங்குழவி என்று புலவர்களால் போற்றப்பட்ட உங்கள் தந்தையைப் போருக்கு அழைத்தார்கள்? இவர்கள் எல்லாம், இந்தத் தமிழ் மண்ணிலே தோன்றியவர்கள் அல்லர் என்று யாராவது மறுக்க இயலுமா? பூசலாலும் ஏசலாலும் வேற்றுமையை வளர்த்து, மாற்றாருக்கு இடமளித்து, வேரோடு சாய்ந்து கொண்டிருக்கும் மரபுதானே இது! வருங்காலத்தினர் அறியவொட்டாமல் நாம் இதை மறைத்துவிட முடியுமா? தமிழனத்தின் சீரழிவினையும், தமிழக அரசுகளின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் வரலாறு எடுத்துரைக்கத்தான் போகிறது...! மானக்கேடான செயல்' தமிழினத்திற்கு இது ஒரு மாபெரும் களங்கம்!

வழுதி : நடந்ததைப் பற்றிக் கவலைப்படுவதனால், இனி என்ன பயன் உண்டாகப் போகிறது...? 'சென்றது இனி மீளாது மூடரே' என்பது பழமொழி. எனவே, நாமாகிலும் இந்தத் தவற்றைச் செய்யாமல் இருக்க முயல வேண்டும்... அல்லவா...?

அமுதவல்லி: முயலுவோம்...! முயலுவோம்...! வெறும் சொற்கள் வேண்டா...! செயல்புரிவோம்...!

வழுதி: "வித்தகம் பேசவேண்டா! பணி செய வாரும்" குழந்தாய்!

அமுதவல்லி: மகிழ்ச்சி தந்தையே! பாண்டிய மரபுக்கேனும் அப்பேறு கிடைக்கட்டும்...! ஏவலன் வருகிறான் ... நான் பிறகு வருகிறேன் அப்பா...!

(ஏவலன் உள்ளே நுழைகிறான்; அமுதவல்லி தன்னுடைய கன்னிமாடத்துக்குச் செல்லுகிறாள்.)

காட்சி 5

இடம்: கன்னிமாடத்துக்குப் பக்கத்தில் உள்ள சோலை.

நேரம் : பிற்பகல்

மாந்தர் : இளவரசி, தோழிகள், **மங்கை** முதலியோர்.

(அமுதவல்லி சிந்தித்தவண்ணம் வானத்தை முணுமுணுக்கிறாள். அருகிலுள்ள தோழிகள் சிரிக்கின்றனர்.

அமுதவல்லி: (பதற்றத்துடன்) என்னடி சிரிப்பு?

முதல் தோழி : உங்களுடைய இதழ்கள் உதிர்த்த சொற்களைக் கேட்டதும் எங்களுக்குச் சிரிப்பு வந்தது அம்மா!

அமுதவல்லி: (நாணத்துடன்) போதும்! போதும்!

இரண்டாம் தோழி: அம்மாவுக்கு மனம் சரியில்லை... போடி!

அமுதவல்லி: (கோபித்துக் கொள்ளும் பாவனையில்) சரி...! சரி...! நீங்கள் இருவருமே இந்த இடத்தை விட்டுப் போய்விடுங்கள்!

(தோழிகள் தயக்கத்துடன் செல்லுகின்றனர்.)

அமுதவல்லி:(பெருமுச்சுடன்)எங்குப்போனாலும்நிழல்போலத் தொடர்ந்து வருகிறார்கள் ! மனம் விட்டுப் பேசத்தான் முடிகிறதா? தனிமையில் இருந்து ஏதாவது சிந்திக் கத்தான் விடுகிறார்களா? அப்பப்பா, போதும் இவர்கள் தொல்லை...!

(மெல்லிய குரலில் பாடுகிறாள்)

"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்
மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்"

(அமுதவல்லி மெல்லிய குரலில், திரும்பத் திரும்ப இதனைப் பாடுகிறாள். அப்பொழுது பின்புறத்திலிருந்து மங்கை கைகளைத் தட்டுகிறாள் .)

அமுதவல்லி: (திரும்பிப் பார்க்கிறாள்) ஓ! **மங்கை**யா! நீயா கைகளைத் தட்டினாய்? நேராக வராமல் ஏன் பதுங்கிப் பதுங்கிப் பின்பக்கமாக வருகிறாய்?

மங்கை: (கலகலவென்று சிரித்த வண்ணம்) அம்மா கோபமாக இருப்பதாக உங்கள் தோழிகள் சொன்னாங்க. ஆனால், அம்மா மெய்ம்மறந்து மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டிருக்கிறதைப் பார்த்தேன். எனக்கு ஒரே வியப்பு! அதனால்தான், நேராக உங்களிடம் வராமல், சற்றுத் தொலைவில் இருந்தே, பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தேன் 'மா!

அமுதவல்லி: குறும்புக்காரி! ஏதோ அடுக்கிக்கொண்டே போகிறாயே ...!...எங்கே நீ மட்டும் தனியே இந்தப் பக்கம் வந்துவிட்டாய்?

மங்கை: ஓ'எங்கள் அத்தான் எங்கேயென்று கேட்கிறீங்களா? அவர் சிலை சமைக்கிறார்! கேட்கிறீங்களா? அவர் சிலை சமைக்கிறார்!

அமுதவல்லி: (மெல்லிய குரலில்) **மங்கை** ! நீ காட்டிய தந்தச் சிலை என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டதடி! என்னால் அதை மறக்கவே முடியலில்லை!

மங்கை: (குத்தலாக) ஏ'மா! சிலையா உங்கள் உள்ளத்தைக் கவர்ந்தது? பொய் சொல்லா... தீங்க...'ம்மா! அந்தச் சிலையில் உள்ள ஆணழகனைத்தானே உங்களால் மறக்க முடிய'லை!

அமுதவல்லி: என்னடி கேலி செய்கிறாய்! சொல்வதைக் கேளடி...!

மங்கை: (புன் முறுவலுடன்) நீங்கள் சொல்வதைக் கேட்கத் தானே வந்திருக்கிறேன்... உண்மை எப்பொழுதும் கசப்பா கத்தான் இருக்கும்...!

அமுதவல்லி: (சிரித்தவண்ணம்) அந்தச் சிலை என் மனத்தை விட்டு நீங்கவே இல்லை. அவ்வளவு அழகாயிருக்கிறது. அதனால்..! அதை மீண்டும் ஒரு முறை பார்க்கவேண்டும் போல்... தோன்றுகிறது...!

மங்கை: நல்லா இருக்கம்மா! ஒரு முறை பார்த்ததே தவறு! அதுவே என்னமோ பண்ணுவதாகச் சொல்'றீங்க! இன்னும் ஒரு முறை பார்த்தீங்கனா, அப்புறம் என்ன சொல்வீங்களோ...? எனக்குத் தெரியாது...!

அமுதவல்லி : ஏய்! இங்கே வா! சொல்லுவதைக் கேள்! அந்தச் சிலை என்னைப் படாதபாடு படுத்திவிட்டதடி...!

மங்கை: (இடைமறித்து) என்ன செய்தது? உயிர்பெற்று வந்துவிட்டதா?

அமுதவல்லி : இல்லை! இல்லை! ஊமையாய் இருக்கும்போதே என்னுள்ளத்தை உருக்கிவிட்டது! உயிர்பெற்றிருந்தால்...?

மங்கை: அதனால்தான் சிலையைக் காட்ட முதலில் தயங்கினேன்.

அமுதவல்லி : **மங்கை**! அவர் பேரென்ன? அவருடைய நாடு எது?

மங்கை: அவர் எந்த நாடு? எந்த ஊர் என்றெல்லாம் சொல்லவில்லையே என்ற குறையா'மா உங்களுக்கு? உள்ளதைச் சொன்னால்...!

அமுதவல்லி: என் ஆவல் தீரும்!

மங்கை: அவ்வளவுதானே!

அமுதவல்லி: என் பொறுமையைச் சோதிக்க வேண்டா! சிலையாக்கப்பட்ட சீலர் யார்? சொல்ல...மாட்டாயா?

மங்கை: அவர் சிறப்புமிக்க சேர நாட்டின் இளவரசர்! வில்லவன்கோதை என்றதும் பகைவர்கள் நடுங்கி ஓடுவர். இந்த வயதிற்குள், தமது மார்பகத்தில் இருபதுக்கு மேற்பட்ட விழுப்புண்களைப் பெற்ற மாபெரும் வீரர்! சேரநாட்டின் தளபதியும் அவரே!

அமுதவல்லி: (வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த குரலில்) இளவரசர் வில்லவன் கோதையா இவர்? இவருடைய வீரதீரச்செயல்கள் பலவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்... அவருக்குத் திருமணமாகிவிட்டதா...?

மங்கை: இல்லை!

அமுதவல்லி: (அன்றொரு நாள் சேர அரசரிடமிருந்து, தன் தந்தைக்கு வந்த திருமுகத்தைப்பற்றி எண்ணிப் பெருமூச்சுவிட்ட வண்ணம்) அந்த மாபெரும் வீரரை மணப்பதற்கு எந்தப் பேரழகி பிறந்திருக்கிறாளோ?

மங்கை: ஏன் அம்மா அந்த ஐயம்? உங்களைக் காட்டிலும் சிறந்த அழகி யாரம்மா இந்த உலகில் இருக்கப் போகிறாங்க?

அமுதவல்லி: (புன்முறுவலுடன்) கள்ளி! நான் எதையோ சொன்னால்...!

மங்கை: (இடைமறித்து) உங்கள் மனத்தில் இருப்பதைத் தானே சொன்னீங்க...! உங்கள் உள்ளம்தான் துடிக்குதே..! "கள்ள மனம் துள்ளும்"னு சொல்லுவாங்க...! இல்லை யாம்மா? (சிரிக்கிறாள்)

அமுதவல்லி: போடி... பசப்புமொழி பேசாதே...!' எப்படியாவது உண்மையை வாயிலிருந்து வரவழைத்துவிடுவாய் போலிருக்கே!

மங்கை: ஒரு பெண்ணின் மனம் மற்றொரு பெண்ணுக்குத் தெரியாம போய்விடுமா? ஏன் அம்மா மூடி...மறைக்கிறீங்க! உண்மையைச் சொல்லுங்கள்...!

அமுதவல்லி' மங்கை உன்னிடத்தில் மனம்விட்டுச் சில சொற்கள் சொல்ல வேண்டுமடி!

மங்கை: நன்றாகச் சொல்லுங்க...! ஏன் அம்மா தயக்கம்? நானும் பெண்தானே...?

அமுதவல்லி: (மெல்லிய குரலில் நாணத்துடன்) அந்தச் சிலையைக்கண்டதுமுதல், அவர்புகழைக்கேட்டதுமுதல் ஓர் இனமறியா ஆவலும், குறுகுறுப்பும் ஏற்பட்டுவிட்டது. அவருடைய திரண்ட தோள்களும் அகன்ற மார்பும்.

மங்கை: உங்களைப் போன்ற ஓவியப் பாவைக்கு, அவர் மிகவும் பொருத்தமானவர்...!

அமுதவல்லி: கனவிலும், நினைவிலும் கண்ணிமையிலே தங்கிக் காட்சியளிக்கிறார்...! உம்... காணாமலேயே...என் உள்ளத்தைக்...

மங்கை: சுவர்ந்துவிட்டாரம்மா! அவரை என்னவென்று நினைத்தீங்க! மிகவும் பொல்லாதவர்...!

அமுதவல்லி: ஏண்டி அவரைப் பொல்லாதவர் என்று சொல்லுகிறாய்? அவர் என்னடி கொடுமை செய்தார்?

மங்கை: ஓ' பரவாயில்லையே! ஒருபடி முன்னேறிட்டீங்க! நான் ஒன்றும் அறியாத பிள்ளைனு நினைத்துக் கொண்டிருந்தேன்...!

அமுதவல்லி: போதுமடி உன் குறும்பு! (என்று கூறிச் செல்லமாக **மங்கை**யின் கன்னத்தைத் தட்டுகிறாள்.)

மங்கை: (அதிர்ச்சியுற்றவளைப் போன்று) அப்பாடி! என்னம்மா இது?

அமுதவல்லி (பெருமூச்சுடன்) வாய்இனிக்கப் பேசும்வாய்ப்பு: இல்லையென்றாலும் மெய்குளிர அவர் தோள்களைத் தழுவாவிட்டாலும், கண்குளிர அவரை ஒரு முறை கண்டுவிட்டால் போதும்! அம் மாவீரனை என்றைக்குக் காண்பேனோ..

மங்கை: ஏன் அம்மா இந்த ஏக்கம்? தங்களை மணம் பேசுவதற்குச் சேரவேந்தர் திருமுகம் அனுப்பியபொழுது, நீங்கள் அவரை இழித்தும்,பழித்தும் பேசித் தமிழகத்து அரசர்களை மணக்கப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறிட்டீங்களாமே...! இப்போது "என்று காண்பேனோ என் காதலரை" என்று ஏங்குகிறீங்க...! விந்தையாக இருக்கு ..!

(மௌனத்துடன் அமுதவல்லி கண்கலங்குகிறாள்.)

மங்கை: அம்மா! என்னை மன்னிக்கவும்! உங்க... மனம் வருந்தும்படி பேசிவிட்டேன். இனி மறந்தும் அப்படிப் பேசமாட்டே"ம்மா!

அமுதவல்லி : (மெல்ல கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) உன்மீது ஒன்றும் குற்றமில்லை! தவறு செய்தவள் நான் தான்! அதற்குரிய தண்டனையை நான் இப்பொழுது அனுபவிக்கின்றேன்..! (விம்முகின்றாள்)

மங்கை: ஐயோ...! ஆண்டவனே இது என்ன சோதனை...!

அமுதவல்லி: (ஏக்கத்தோடு) அவரைக் காணவே முடியாதா?

மங்கை : தாயே நீங்க பாண்டிய நாட்டு இளவரசி..! நீங்க காதல் கொண்டுள்ளவரோ சேரநாட்டு இளவரசர். சேர மன்னரோ, மணம் பேச வழுதிக்குத் திருமுகம் அனுப்பினார். அதற்கு மறுமொழி அளிக்காமல், வழுதியோ வாளா இருந்துவிட்டார்.

அமுதவல்லி அதனாலென்ன..? அதற்காக என் உள்ளங்கவர்ந்தவர் யார் என்பதை அறியாமல் 'சேர அரசர் மகன்' என்றவுடன், நான் 'உம்' கொட்டிவிட வேண்டுமா?

நீ காட்டிய அந்தச் சிலை யாருடையது என்பதை அறிவதற்கு முன்பே, அந்தத் திருமுகம் வந்தது. நான் என்ன செய்வது? எல்லாம் உன்னால் வந்த வினை!

மங்கை : சேர அரசரின் மகன் என்பதற்காக அல்லவா நீங்கள் சீற்றங்கொண்டதாகச் சொன்னாங்க....!

அமுதவல்லி : என் இதயம் இனங்கடந்தது! ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதே எனது வாழ்வின் இலட்சியம்! அந்த இலட்சியத்தை அடை வதற்கு என்னுடைய உடல், பொருள். ஆவி மூன்றையும் வழங்கத் தயாராக இருக்கிறேன்....!

மங்கை: தினைமாவும் தேனும் ஒன்றாகச் சேர்ந்தால்..

அமுதவல்லி: சுவையாகத்தான் இருக்கும்! ஆமாம், நான் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தால் இடையில், நீ ஏதோ கரடி விடுகிறாயே!

மங்கை : (சிரித்துக்கொண்டே) எங்கள் நாட்டில் கரடி கிடையாதம்மா! வேழம்தான் உண்டு...

அமுதவல்லி: (சிறிது கடுப்புடன்) எல்லாம் எனக்குத் தெரியும்... நான் கேட்டதற்குப் பதில் சொல்!

மங்கை: (முணுமுணுத்துக் கொண்டே) 'வேழமுடைத்து மலை நாடு' என்று சொல்லுவாங்க...! அதைச் சொன்னம்மா! நீங்கள் பேசவேண்டாமென்றால்... (வாயைப் பொத்திக் கொள்ளுகிறாள்)

அமுதவல்லி:போதும்உன்குறும்பு!தேனையும்தினைமாவையும் இங்கு எதற்காகக் கொண்டு வந்தாய்? அதைச் சொல்லடி என்றால், என்னமோ கதையளக்கிறாயே!

மங்கை: (சிறிது தயக்கத்துடன்) நீங்க ஏதோ இலட்சியம் பற்றிப் பேசினீங்களே! அதைப் பற்றி எங்கள் தளபதி கூறக் கேட்டதுண்டு. அவருக்கு ஒரு பேரரசை நிறுவ வேண்டும்

என்பதில், அவ்வளவு ஆர்வம் கிடையாது. ஒன்றுபட்ட தமிழகத்தை – வேங்கடம் முதல் குமரிவரை ஒரே இன உணர்ச்சியை உடைய தமிழகத்தை உருவாக்கணும்னு அவர் அடிக்கடி சொல்லுவார்! இதே கருத்துடைய நீங்களும் அவரும் 'இருதலைப் புள்ளின் ஓருயிர்" போல இணைவீர்களானால், தேனும் தினைமாவும் ஒன்றாகச் சேர்ந்ததைப்போல் இருக்கும்னு சொல்ல வாயெடுத்தேன். அதற்குள் ...!

அமுதவல்லி: போதும்! சொல்ல வந்ததைச் சுற்றி வளைக்காமல் உனக்குப் பேசத் தெரியாதா? உன் சொற்களைக் கேட்பதற்குள் என்னுடைய உயிர்... போய் ... விடு...ம்.

மங்கை: அம்மா தாயே! எனக்கு அந்தப் பட்டம் வேண்டாம். இதோ... இப்பொழுதே ... இந்த இடத்தை விட்டு நான் போய்... விடுகிறேன் ...! எனக்கு ஏன் இந்தப் பழி...? (மெல்ல நடக்கிறாள்)

அமுதவல்லி : போகாதே! நில்! என்னமோ 'பட்டம்' வேண்டாமென்று போகிறாயே! அதென்ன பட்டம்?

மங்கை:(சென்றவள் சிறிது தூரம் திரும்பி வந்து) அம்மா உண்மையைச் சொல்லட்டுமா? அல்லது...

(அமுதவல்லி மனச்சோர்வுடன் பக்கத்திலுள்ள மரத்தின்மீது சாய்ந்து கொள்ளுகிறாள்]

மங்கை: உங்கள் மனம் மகிழுமாறு பேசட்டுமா?

அமுதவல்லி: எனக்கு உண்மைதான் தேவை!

மங்கை: (புன்முறுவலுடன்) 'கொலைகாரிப் பட்டம் 'எனக்கு வேண்டாம்'மா!

அமுதவல்லி என் வேதனையை உணராமல் வீண்பேச்சு பேசுகிறாய்...! போ!

மங்கை: (அருகில் வந்து இளவரசியின் கைகளைப் பற்றிக்

கொண்டு) என்னம்மா என்மீது இவ்வளவு கோபம்? உங்கள் துன்பத்தை மாற்றவே நான் இப்படி பாவனை செய்தேன்! நீங்கள் என்னைப் 'போ' என்று மனமாரச் சொன்னால், இந்தக் கணமே, நான் இந்த இடத்தை விட்டுப் போகிறே'ம்மா!

அமுதவல்லி: (சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு) மதியொளி பெற்றால் அல்லி மலர்வதும், கதிரொளி பெற்றால் தாமரை செவ்விதழ் விரிப்பதும்...!

மங்கை: இயற்கை அன்னையின் திருவிளையாடல்...!

அமுதவல்லி: அப்போது என்னுடைய ஆவலும் விந்தையானதுதானா?

மங்கை: ஆமாம்! நீங்க விரும்புற போது, உங்கள் சிந்தையைக் குளிர்விக்க எனக்குச் செப்பிடு வித்தைகள் தெரியாதேம்மா!

அமுதவல்லி: இதற்குச் செப்பிடு வித்தைகள் தேவையில்லை. அறிவில் சிறந்த உன்னுடைய ஒத்துழைப்பு இருந்தால் போதும். என் உள்ளத்தில் தளிர்விட்டுத் தழைக்கும் ஆவல் நேர்மையானது. அந்த ஆவல் நிறைவேறினால்...!

மங்கை: நிறைவேறாவிட்டால்...!

அமுதவல்லி: அப்போது சொல்கிறேன் என் திட்டத்தை! நிறைவேறுவதற்குரிய வழியைக் காண முதலில் நீ உதவி செய்!

மங்கை: மற்றவற்றை நீங்களே... கவனித்துக் கொள்ளுவீங்க இல்லையாமா. ?

அமுதவல்லி: நீ மிகவும் குறும்புக்காரி...!

மங்கை: நான் சொல்லுவதைப் போல் செய்யுங்க...! (அமுதவல்லியின் காதில் ஏதோ மெல்ல **மங்கை** சொல்லுகிறாள்.)

காட்சி 6

இடம்: சேரநாட்டுக்குப் போகும் காட்டு வழி

நேரம்: முற்பகல்.

மாந்தர் : அழகன், **மங்கை, அமுதவல்லி**.

(மூவரும் மாறுவேடத்தில் செல்லுகின்றனர்)

அமுதவல்லி: என் வேடம் எப்படி?

மங்கை: மிகப் பொருத்தமாய் அமைந்துவிட்டது! அசல் கழைக்கூத்திதான். எதற்கும் எச்சரிக்கையாய் இருக்கணும்...!

அமுதவல்லி:(இடையில்கட்டிவைத்திருக்கும்உடைவாளைக் காட்டி) உடலில் உறுதியும், "எதையும் தாங்கும் இதயமும்" இருக்கின்றவரையில்,நான்யாருக்காக அஞ்சவேண்டும்?

மங்கை:சேரநாட்டு எல்லைக்குவந்துட்டோம்.செங்குன்றத்தின் சாரலில், போரில் மாண்ட எங்கள் வீரர்களுக்கு விழா நடக்கிறது. உங்க உள்ளத்தைக் கவர்ந்த மாவீரரை, நீங்க விரும்பினா இங்குக் காணலாம்...!

அமுதவல்லி: அதோ அந்த மலைமுகட்டினைப் பார்! முகிலும் முகிலும் முத்தமிடும் காட்சி கொள்ளையழகு! கொள்ளையழகு!

மங்கை : அழகு இருக்கும் இடத்தில் அமைதியும் இருக்கு...! ஆனால்...!

அமுதவல்லி: ஆபத்து இருக்கிறதே!

மங்கை: அழகும் அமைதியும் மட்டுமிருந்தா எவ்வளவோ நல்லா இருக்கும்?

அமுதவல்லி: ஆண்டவன் படைப்பில் காணப்படும் அதிசயமே இதுதான்!

மங்கை : ஆனால், ஆண்டவன் இந்த வகையில் பெண்களை வஞ்சித்துவிட்டார். பெண்களின் அழகு அவர்களுக்கு ஆட்கொல்லியாகி விட்டது...!

அமுதவல்லி: எப்படி?

மங்கை : வைரத்தாலிழைத்தது போன்று காணப்படும் பாம்பு எவ்வளவு அழகாய் இருக்கு?

அமுதவல்லி: ஆனால், அருகில் வருவாரைக் கடித்துக் கொல்லும் நஞ்சினையும் அது பெற்றிருக்கிறது.

மங்கை: ஒளிரும் முத்துகள்...

அமுதவல்லி:ஆளை விழுங்கும் திமிங்கிலங்களும், கொடிய சுரு மீன்களும் வாழும் ஆழ்கடவின் அடியில்..!

மங்கை: ஆனால், அழகாப் பிறந்த ஓர் ஏழைப் பெண்ணின் கதி...! உங்களைப் போன்ற அழகிகள் கதி...! அரசர் குடியில் பிறந்து விட்டதால் நீங்க தப்பிவிட்டீங்க!

அமுதவல்லி: அங்கும் ஆபத்து இல்லாமல் இல்லை! அதை, எங்களைப் போன்ற மன்னர் குலத்தில் தோன்றியவர்கள் மட்டுமே, உணர முடியும். உன்னைப் போன்ற குடிமக்களுக்கு உள்ள உரிமை. அரச குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு ஏது?

மங்கை: இளவரசி! தொலைவில் யாரோ வருவது போல் தோன்றுகிறது. நாங்கள் சிறிது மறைந்து கொள்கிறோம். யாரென்று அறிந்த பின்னர் வருகிறோம்.

(அழகனும், மங்கையும் மறைந்து கொள்ளுகின்றனர். குதிரைமீது சேரநாட்டு வீரன் ஒருவன் அமுதவல்லியின் அருகில் வருகிறான்.)

வீரன்: அம்மையே! நீ யார்?

அமுதவல்லி: (ஏளனச் சிரிப்புடன்) கன்னிப்பெண்ணை அம்மையே என்று அழைப்பது உங்கள் நாட்டு வழக்கமோ? புதுமையாக இருக்கிறதே !

வீரன்: 'ஏன் கன்னியைக் கனியே!' என அழைப்பதுதான் உங்கள் நாட்டு வழக்கமோ? தாய்க் குலத்தைச் சேர்ந்த அனைவரையும் மதித்துப் போற்றுவதில், எங்கள் நாட்டவர் எவருக்கும் பிற்பட்டவர் ஆகார். பெண்களைத் தெய்வமாகப் போற்றும் நாடு எங்கள் நாடு. கற்புக்கரசி கண்ணகிக்குக் கற்கோயிலும், கலைக்கோயிலும் கட்டியவர்கள் நாங்கள்! முன்பின் அறியாதவரை நாகரிகக் குறைவாய் அழைக்கும் வழக்கம், எங்கள் நாட்டில் என்றும் கிடையாது...சரி! சரி! நீ யார்? நீ ஏன் இங்கு வந்தாய்?

[**அமுதவல்லி**: கழைக்கூத்து ஆடிப்பிழைக்கும் கூத்தர் கூட்டத்தைச் சேர்ந்தவள் நான். வேங்கடத்துக்கு அருகே. ஒரு சிற்றூரில் பிறந்தேன். குமரி வரையில் சென்று என் கலைத்திறமையைக் காட்ட, எங்கள் கூட்டத்தாரோடு புறப்பட்டு வந்தேன். அப்படியே சேர நாட்டைக் காணப் புறப்பட்டேன். உங்கள் நாட்டில் எங்களுக்கு ஆதரவு கிடைக்குமா?

வீரன்: நீயா கூத்தாடி? உன் இடையிலே உள்ள உடைவாள் கண்ணைப் பறிக்கிறதே! வீராங்கனை போல், வாள் வீசி ஆடும் நடனமும், உன் கூத்துகளில் ஒன்றா?

அமுதவல்லி: (கலகலவென்று ஏளனமாகச் சிரித்துக் கொண்டே) கேள்வியைக் கேட்டவரே. அதற்குப் பதிலும் அளித்துவிட்டாரே! வாள்போர் தெரியும் என்று கூறி, உங்களை வம்புக்கு அழைத்துவிடுவேனோ என்றுதானே அஞ்சுகிறீர்?

வீரன்: (சிறிது பதற்றத்துடன்) என்ன சொன்னாய்? நான் வாள்போருக்கு அஞ்சுகின்றேனா? நன்றாக இருக்கிறதே உனது சொற்கள்! **அமுதவல்லி**: (சிரித்துக்கொண்டு) அஞ்சாநெஞ்சம் படைத்த வீராதி வீரரே! வல்லமையை அறிய விரும்பினால், வாரும் ஐயா போருக்கு!

வீரன்: (அனல் கக்கும் கண்களுடன்) உனக்குப் பாடம் புகட்டுகின்றேன் பார்! வா போருக்கு!

(இருவரும் வாள்போர் புரிகின்றனர். வெற்றி தோல்வி இன்றிப் போர் நீடிக்கிறது. அழகனும், மங்கையும் மறைவிடத்திலிருந்து கொண்டே போர் நடைபெறுவதைப் பார்க்கின்றனர். சிறிது நேரத்திற்குப் பிறகு மங்கை, இரு குவளைகளில் நீரினை எடுத்துக்கொண்டு போர் புரிவோரிடம் செல்லுகிறாள்.)

மங்கை: போதும்! நிறுத்துங்கள்! நீரினை அருந்துங்கள்: களைப்பு நீங்கும்!

(இருவரும் வாள்களை வீசியெறிந்துவிட்டு, குவளைகளை வாங்கி நீரைக் குடிக்கின்றனர்)

வீரன்: (குடித்துக் கொண்டே) நீ பாண்டி நாட்டில் நடனம் ஆடியிருக்கிறாயா?

அமுதவல்லி: வேங்கடத்திற்குத் தெற்கே என் கால் சதங்கை ஒலிக்காத அரங்கே இல்லை!

வீரன்: (உடனே) பாண்டிய நாட்டு இளவரசியைப் பார்த்திருக்கிறாயா?

அமுதவல்லி: (அச்சமும் வியப்பும் தோன்ற) பார்வேந்தன் பாவையைப் பல முறை பார்த்திருக்கிறேன். ஏன் இந்தக் கேள்வி? அவளைப் பற்றி யாதாகிலும் தெரிந்துகொள்ள வேண்டுமா?

(அழகனும், **மங்கை**யும் மெல்ல அவ்விடத்தை விட்டு நழுவி விடுகின்றனர்.)

வீரன்: அவள் பேரழகியாமே! எங்கள் இளவரசர் வில்லவன் கோதை, அவளையே மணம் செய்துகொள்ள வேண்டும் என ஒரு காலில் நிற்கிறார்!

அமுதவல்லி: ஐயோ பாவம்! போயும் போயும் அந்தப் பேயையா, உங்கள் இளவரசர் மணக்க விரும்புகிறார்?

வீரன்: (காதைப் பொத்திக் கொள்ளுகிறான்) என்ன பிதற்று கிறாய்? நீ யாரைப் பார்த்துவிட்டு இப்படிப் பேசுகிறாய்? 'மாசற்றபொன்;வலம்புரி முத்து;'அன்றலர்ந்த செந்தாமரை என்றல்லவா அவளைப் புகழ்கிறார்கள்? எல்லாம் வெறும் விளம்பரம்தானா?

அமுதவல்லி: அரச குடும்பத்தில் பிறந்துவிட்டால், விளம் பரத்திற்கு என்ன குறைவு?

வீரன் : வாள்போரில் அவள் வல்லவளாமே!

அமுதவல்லி: கோலை எடுத்தாலே குலை நடுங்கும் அவளுக்கு! சரி! சரி! அவள் பாண்டியனின் மகளாயிற்றே! உங்கள் இளவரசர் அவளை எப்படி மணக்க விரும்புவார்?

வீரன்: அவருக்கு என்னவோ விருப்பம் இல்லையாம். தம் தந்தையின் விருப்பத்தைத் தட்டக்கூடாதே என்றுதான் தயங்குகிறார்.

(இருவர் உள்ளத்திலும் கவலை குடி கொள்ளுகிறது.)

அமுதவல்லி: நீங்கள் யார் என்பதைச் சொல்லவில்லையே!

வீரன்: நான் இளவரசரின்... மெய் காப்பாளன் ... வருகிறேன்!

(உடனே **வீரன்** குதிரையின்மீது ஏறிப் புறப்பட்டு விடுகிறான்.)

அமுதவல்லி: (தனக்குத்தானே பேசிக் கொள்ளுகிறாள்) பெண்புத்தி பின்புத்தி என்பது சரியாகத்தானே போய் விட்டது! நானாகவே ஏன் நச்சுப் பொய்கையிலே விழவேண்டும்? விளையாட்டு வினையாகிவிட்டதே! '**அமுதவல்லி**யை இளவரசர் மணம் செய்துகொள்ள விரும்புகிறார்' என்னும் சொற்களைக் கேட்டதும், என் உள்ளத்தில் அமுத மழையல்லவா பெய்தது? ஆயினும் நாவைக் காவாமல் விட்டுவிட்டேனே! அவ்**வீரன்** யார்? அவன் ஏன் சேர நாட்டின் தளபதி... இல்லை ! இளவரசர் வில்லவன் கோதையாக இருக்கக்கூடாது?... ஒருகால்... அவரே தான்... என்னைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பினாரா?... யார் அந்த **வீரன்**?...எங்கே **மங்கை**யைக் காணோமே! அவளுக்குத் தெரிந்து இருக்கலாம் அல்லவா?

(அழகனும் **மங்கை**யும் மறைந்து இருந்த இடத்தை நோக்கி **அமுதவல்லி** போகிறாள்.)

(தலைநகரை நோக்கிச் செல்லுகின்ற **வீரன்**, மனம் கலங்கிய நிலையில்)

வீரன்: ஏமாற்றம்! பெருத்தஏமாற்றம்! எப்படி அவளை அழகரசி என்றனர்? பொன் பாண்டமெனக் கருத, மண்பாண்டமாக அல்லவா ஆகிவிட்டது? (சிறிது நேரம் அமைதி) உம்... அந்தக் கழைக்கூத்தியின் சொற்களை உண்மை யென்று நான் எப்படி நம்புவது? ஒரு பெண்ணின் அழகை, மற்றொரு பெண் உள்ளவாறே கூறுவது அரிதாயிற்றே! பொன்னைப் பொன்னொடு உரசினால் மாற்றுத் தெரியுமா? உரைகல்தான் உண்மையைச் சொல்லும்! அழகன் அனுப்பிய ஒவியப்பாவை அல்லவா இளவரசி? இந்தப் பெண், உண்மையைச் சொல்லவில்லை!... அழகும் அறிவும் ஒரே உருவில் குடிபுகுவது அரிதுதான்! அதுவும் அரண்மனையில் கிடைப்பது அரிது... (சிந்தனை செய்கிறான்) ஏன் அந்தக் கழைக்கூத்தி

தன்னைக் 'கன்னிப்பெண்' என்று கூறினாள்? அவளுடைய பேச்சும் செயலும் புதிராக இருக்கிறதே! கழைக் கூத்தியின் வேடத்தில் ஒருகால் பாண்டியனின் பாவை வந்திருக்கிறாளோ! அந்த ஓவியத்தில் கண்ட காரிகையைப் போன்றே இந்தக் கழைக் கூத்தி காணப்படுகிறாள்? சே! ஏன் இந்த வீண் குழப்பம்?

காட்சி 7

இடம்: சேர நாட்டின் எல்லைப்புறம்.

நேரம் :மாலை

மாந்தர் அமுதவல்லி, அழகன், **மங்கை**,சேர நாட்டு வீரர் சிலர்.

(அமுதவல்லி தங்கியிருக்கும் இடத்திற்குச் சேர நாட்டு வீரர் சிலர் வருகின்றனர்.)

வீரன்: இளவரசரின் மெய்காப்பாளரோடு வாள்போர் புரிந்த மங்கை நீர்தானே?

அமுதவல்லி: ஆமாம்!

(உடனே அவன் ஒரு மூட்டையைக் கொடுத்து)

வீரன்: இதிலுள்ள ஆடை அணிகளை அணிந்து கொண்டு வாருங்கள்!

அமுதவல்லி: (ஏளனமாக) கருதியதைத் தரும் கற்பகத்தரு என்றும், விரும்பியதை விரும்பியவர்களுக்கு விரும்பிய வாறு அளிக்கும் காமதேனு என்றும்...

வீரன்: கதைகளில் படித்து இருப்பீர்கள்! நீங்கள் அடைய விரும்பிய வாழ்க்கைக்குரிய வாய்ப்புக் கிட்டுகிறது. அதைத் தட்டாதீர்!

அமுதவல்லி: காரணமின்றி எதையும், யாரிடமிருந்தும் பெற்றுக் கொள்ள நான் விரும்புவதில்லை..!

வீரன்: நீங்கள் சிறந்த அழகரசி. அதுமட்டுமல்ல! ஆடலழகி என்றும் எங்கள் இளவரசர் சொன்னார். எங்கள் அரசவையில், நீங்கள் ஆட விரும்புவதாகவும் எங்கள் தளபதி கூறி னார் . அதன் விளைவுதான் இது. விரைவில் அழைத்து வரச் சொன்னார்கள். புறப்படுங்கள் போகலாம்!

மங்கை: சரி புறப்படுவோம்! கவலை வேண்டாம்மா!

(ஆடை அணிகளை அணிந்துகொண்டு அமுதவல்லி. மங்கை. அழகன் அனைவரும் புறப்படுகின்றனர். அப்பொழுது திரையிடப்பட்ட வண்டி ஒன்று வருகிறது.)

வீரன்: மகளிர் இருவரும் இந்தவண்டியில் ஏறிக்கொள்ளலாம் உங்களை அழைத்துச் செல்லத்தான் அரண்மனையில் இருந்து இந்த வண்டி வந்திருக்கிறது.

அமுதவல்லி: அரண்மனை வண்டியா? மூடியிருக்கிறதே...!

வீரன்: தயக்கம் வேண்டாம். ஊருக்குப் புதிதாக வந்திருக்கின்ற உங்களை, மூடியிட்ட வண்டியில் அழைத்துச் செல்லுவதே நல்லது என்று நினைத்துதான், இந்த வண்டியை இளவரசர் அனுப்பியிருக்கிறார். உங்கள் வண்டிக்கு முன்னும் பின்னும் வீரர்களாகிய நாங்கள் காவலாக வருவோம். எத்தகைய இடையூறும் உங்களுக்கு உண்டாகாமல். நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம்; கவலை வேண்டாம்.

அமுதவல்லி நம்பிக்கைதான் மனிதனை வாழத் தூண்டுகிறது. உன்னுடைய சொற்களை நம்புகின்றேன். (**மங்கை**யைப் பார்த்து) என்னடி பேசாமல் இருக்கிறாய்? வண்டியில் ஏறிக்கொள்ளலாமா?

மங்கை: அப்படியே செய்வோம்!

(வழியில் ஒரு சோலையில் சிறிது நேரம் களைப்பாறுகிறார்கள்)

அமுதவல்லி : கட்டுக்கடங்காத என் ஆசையால் என்ன நேருமோ? தெரியவில்லை'

மங்கை: துணிந்தவர்களுக்கு ஆழ்கடலும் முழங்கால் அளவு துணிவுமிகுந்த உங்களுக்கு ஏன் இந்த அச்சம்?

அமுதவல்லி: நாம் நினைத்தபடியே நடந்துவிட்டால் பரவாயில்லை. அதற்கு நேர்மாறாக நடைபெற்றால் நம்முடைய திட்டம் பாழாவதோடு...!

மங்கை: மானமும் போய்விடுமே என்று அஞ்சுகிறீர்களா? அந்த அச்சம் வேண்டாம். மூச்சடக்கி முத்துக்குளிக்க முயன்றோம். இப்பொழுது முத்துகளே உங்கள் முன்னிலையில் குவியப் போகின்றன. உங்கள் உள்ளமும் குளிரப் போகின்றது.

அமுதவல்லி: என்னுடல் என்னையறியாமலே நடுங்குகிறது.

மங்கை! அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாமைதான் பேதைமை என்று சொல்லுவாங்க' நீங்கள் செய்யத்தகாத செயல் ஒன்றும் செய்யவில்லையே!...மாற்றார் கண்டு அஞ்சுமாறு, ஆட்சிபுரியும் மாட்சிபெற்ற உங்களுக்கு அச்சம் எதற்கு?

அமுதவல்லி: கலைச்செல்வி! இளவரசர் வந்தால் நான் என்ன செய்வது? நான் யாரென்பதை அவர் அறிந்துகொண்டால் ...... !

மங்கை: மீன் குஞ்சுக்கு நீச்சல் கற்றுக்கொடுக்க வேண்டுமா? 'இளவரசரைக் காணாத கண் என்ன கண்ணோ?" என்று இத்தனை நாள்களாகத் தவம் புரிந்தீங்க? இன்றைக்கு வாய்ப்பு தெருங்கிட்டது. இப்போ ஏன் கலக்கம்? கலங்காமல் என்ன நடக்குது'னு பார்ப்போம்?

அமுதவல்லி: கழைக்கூத்தி வேடத்தில் அல்லவா நான் வந்திருக்கிறேன் !

மங்கை: இப்போது பட்டத்தரசி போல அழகா இருக்கிறீங்க! முன்னிலும் இப்போது முன்னேற்றந்தான்....

அமுதவல்லி: புறத்தோற்றத்தில்தான் முன்னேற்றம்... உள்ளமோ... கலங்குகிறது!

மங்கை: உரம் ஏறுமுன் உருகினால்தான் நல்லது. தணலில் உருக்கிய இரும்பே இறுக்கமான வேலாகவும், வாளாகவும் வடிக்கப்படுவது உங்களுக்குத் தெரியாதா?

அமுதவல்லி: நடனம் ஆடச் சொல்வார்களே!

மங்கை: ஆடச் சொன்னால் ஆடுவது...!

அமுதவல்லி: பலர் முன்னிலையில் ஆடுவதென்றால் ..!

மங்கை: அச்சமாக இருக்கிறதா? அல்லது வெட்கமாக இருக்கிறதா?

அமுதவல்லி:பாம்பறியும் பாம்பின் கால் என்பார்களே! உன்னால் என்னிலையை......

மங்கை: அறியமுடியவில்லையே என்கிறீர்...! புறத்தோற்றத்தில் என்னால் அறிய முடிந்த அளவுக்கு, உங்களுக்கு உதவிபுரியத்தானே உங்களை என்னுடன் அழைத்து வந்திருக்கிறேன் ... உங்கள் உள்ளத்தின் ஆழத்தை அளக்க யாரால் முடியும்!

ஓகோ! மறந்து விட்டேன். ஆளப் பிறந்தவர்களை ஆடச்சொன்னால், எப்படி ஆடுவது என்றுதானே தயங்கிறீங்க? ஆற்றில் குதித்த பிறகு, உயிர் பிழைக்க வேண்டுமென்றால் நீந்தாமல் இருக்க முடியுமோ?

அமுதவல்லி: மெல்லப் பேசு தாயே! இப்பொழுதே என் குட்டை வெளிப்படுத்திவிடாதே!

(எல்லாரும் புறப்படுகின்றனர்.)

காட்சி 8

இடம்: சேரநாட்டுத் தலைநகரான வஞ்சிமா நகரின் அரண்மனையில் ஒரு தனியறை.

நேரம்: மாலை

மாந்தர்: அமுதவல்லியும், வழியிலே அவளைச் சந்தித்த மெய் காப்பாளன் எனப்படும் வீரனும்.

(அமுதவல்லியின் அறைக்குள் அந்த மெய்காப்பாளன் நுழைகிறான்.)

வீரன்: (அமுதவல்லியைப் பார்த்து, வேண்டுமென்றே) அந்த ஆடலழகி எங்கே?

அமுதவல்லி : நான் தான் ...... என்னைத் தெரியவில்லையா....? மெய்காப்பாளரே!

வீரன்: ஓகோ நீயா? அரசிளங்குமரி என்று அல்லவா உம்மை நினைத்தேன். உம்மை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையே!...இளவரசர் இன்னும் சிறிது நேரத்தில், தங்களைத் தரிசிக்க வருவார். உம் எழிலைப்பற்றி, உம் கலையைப் பற்றி, உம் திறனைப்பற்றி, உம் மொழியைப்பற்றி, உம் விழியைப்பற்றி..

அமுதவல்லி : போதும்! போதும்!

வீரன் : விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லியிருக்கிறேன்.

அமுதவல்லி: (நாணத்துடன்) போதும்...! மிக்க நன்றி!

வீரன் : நீ அழகாக நடனமாடுவாய் என்று சொன்னேன்!

அமுதவல்லி: என்ன சொன்னார்?

வீரன்: உன்னை அரசவையின் தலைமை நடன மாதாக்கித் "தலைக்கோலி'ப்பட்டம் கொடுத்துப்,பாராட்டப் போவதாகச் சொன்னார்.

அமுதவல்லி: (பதற்றத்துடன்) ஐயோ! என்னுடைய ஒப்புதல் இல்லாமலா?

வீரன்: ஏன் பலர் முன் ஆட விருப்பமில்லையா?

அமுதவல்லி : இல்லை...! விருப்பமில்லை...!

வீரன்: இளவரசருக்கு நடனக்கலை என்றாலே உயிர்! அவரை மட்டும் மகிழ்வித்தால் போதும்!

அமுதவல்லி: முடியாது...!

வீரன்; ஏன் திடீர் மாற்றம்? நடனமாட ஒரு வாய்ப்பினை அளிக்குமாறு அன்று நீ வேண்டவில்லையா? அறிமுகம் செய்து வைத்த என்னையும், ஆணையிட்ட இளவரசரையும் அவமதிக்கும் குற்றத்திற்கு நீ ஆளாகிறாய்!

அமுதவல்லி: காரணத்தைக் கூறுவதற்கு இல்லை! உங்களுக்குத் தொல்லை கொடுத்தமைக்கு வருந்துகிறேன்; என்னை மன்னிக்கவும்.

வீரன்: முடியாது! உன் நன்றியற்ற செயலுக்கு நல்ல பாடம் கற்பிக்கப் போகிறேன்!

அமுதவல்லி: எனக்குப் பாடம் கற்பிக்க உன்னால் முடியாது! வாதியைக் கேட்பதைவிட, நீதிபதியையே கேட்டுவிடுகிறேன்! எங்கே உங்கள் இளவரசர்? நான் அவரைக் காணவிரும்புகிறேன்!

வீரன்: உன்னை நான் அழைத்துச் செல்லமாட்டேன்! வேண்டுமானால், நீயே போய் முறையிட்டுக் கொள்!

(அமுதவல்லி சீற்றத்தோடு அறையை விட்டு வெளியே செல்லுகிறாள். மெய்காப்பாளன் தன்னுடைய மாறுவேடத்தைக் களைந்துவிட்டு இளவரசரின் கோலத்தோடு வெளியே வருகிறான் .)

இளவரசன்: அமுதா!

(சலிப்புடன் வெளியே சென்ற இளவரசி, தன்னைப் பெயரிட்டு அழைப்பதைக் கேட்டுத் திகைப்புடன் திரும்பிப் பார்க்கிறாள்.)

நீங்கள் தானே அமுதா!

(அச்சமயத்தில் ஓர் **வீரன்** வருகிறான்.)

வீரன்: வாழ்க எங்கோ! அயல்நாட்டில் இருந்து வணிகர்கள், வந்துள்ளனர்; தங்களைச் சந்திக்க வேண்டுமாம். தங்கள் மாளிகையின் வாயிலில் காத்துக் கொண்டிருக்கின்றனர்!

இளவரசன்: (புன் முறுவலுடன்) நல்லது! விருந்தினர் மாளிகையில் அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்! நாளைக்குக் காலையில், அவர்களை நான் கண்டு பேசுகிறேன்!

(உடனே **வீரன்** திரும்பிச் செல்லுகிறான்.)

அமுதவல்லி: நீ என்னை ஏமாற்றிவிட்டாய்!

அமுதவல்லி: நீங்கள்தான் என்னை ஏமாற்றிவிட்டீர்

இளவரசன்: உன்னை அளவுக்கு மீறிச் சோதித்துவிட்டேன்! இல்லையா?

அமுதவல்லி: நான்தான் சீற்றத்தோடு உங்களைக் கடிந்து பேசிவிட்டேன்!'

(மெல்ல இருவரும் பக்கத்தில் உள்ள சோலைக்குள் செல்லுகின்றனர்)

இளவரசன்: வீராங்கனையே! நீயேன் மாறுவேடம் புனைந்தாய்?

அமுதவல்லி: நீங்கள் ஏன் மாறுவேடத்தில் எங்கள் நாட்டு எல்லைப் புறத்திற்கு வந்தீர்கள்?

இளவரசன்: உங்களுடைய நாட்டிற்கு மட்டும் அது எல்லைப் புறமன்று! எங்களுடைய நாட்டின் எல்லைப்புறமும் அதுதானே ! அங்கே உருக்கரத்து உளவறியச் சென்றிருந்தேன்.

அமுதவல்லி: உங்களுக்குப் பாண்டியரிடம் பகையா? ஏன் பாண்டியநாட்டு எல்லைப் புறத்தில் உளவறிய வேண்டும்?

இளவரசன்: (சிரித்துக்கொண்டே) பாண்டிய மன்னரின் பாவைதான் எனக்குக் பகையே ஒழிய, பாண்டியநாடு எனக்குப் பகையன்று!

அமுதவல்லி: (புன்முறுவலுடன்)சுற்றி வளைத்துப் பேசவேண்டாம் இளவரசரே! நான் செய்த தவற்றை நேரடியாகச் சுட்டிக் காட்டுங்கள். பாண்டிய மன்னரின் பாவை உடனடியாகத் திருமணத்திற்கு இசையவில்லை என்பதுதானே உங்கள் குற்றச்சாட்டு?

இளவரசன்: நான் பழி சுமத்தவில்லையே! நாட்டில் உள்ளோர் சுமத்துகின்றனர்! அதற்கு...

அமுதவல்லி: நீங்கள் வருந்தவேண்டாம்! என்னைப் பற்றிதான், எல்லைப்புறத்தில் உளவறிந்துகொண்டு இருந்தீரோ.

இளவரசன்: உன்னைப் பற்றி மட்டும்தானா?

அமுதவல்லி: அப்படியானால்...!

இளவரசன்: வேங்கடத்தைக் கடந்து வெற்றியுடன் முன்னேறிவரும் களப்பிரர்களைப் பற்றிதான் என்னுடைய கவலை!

அமுதவல்லி:களப்பிரர்கள் முன்னேறத் தொடங்கிவிட்டார்களா? **தொண்டைமான்** தடுத்து நிறுத்துவார் என்ற நம்பிக்கையுடன் அல்லவா இருந்துவந்தேன்!

இளவரசன்: பாவம்! அவர் என்ன செய்வார்? பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் அவருடைய ஆட்சியை ஆட்டங் கொடுக்கச் செய்துவிட்டன.

அமுதவல்லி:(பதைபதைத்து விடுகிறாள்) என்ன? தமிழகத்தின் வடக்குவாயில் திறந்து விடப்பட்டதா?

(கலங்குகிறாள்)

இளவரசன்: கண்கலங்குவதில் பயனில்லை! ஒன்று நாம் நாட்டைக் காக்க வேண்டும்; அல்லது போரிட்டுச் செத்து மடியவேண்டும்

அமுதவல்லி: செத்து மடியவேண்டும்... நன்றாகச் சொன்னீர்கள்! செத்து மடிவதற்கு முன்பு களப்பிரர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியாகவேண்டும்...! என்னுடைய தந்தையை நான் உடனடியாகக் காணவேண்டும்...!

இளவரசன் : பாண்டிமாதேவியே உங்கள் கடமையுணர்ச்சியைக் கண்டு, பெருமிதம் அடைகிறேன். ஆனால், உங்களுக்கு இருக்கும் வீரம். உங்கள் தந்தைக்கு இல்லையே!

அமுதவல்லி: (பதற்றத்துடன்) என்ன சொன்னீர்? ஏன். என் தந்தையைப் பழிக்கிறீர்?

இளவரசன்: பழிக்கவில்லை! உண்மையைச் சொல்லுகிறேன். நாடு அல்லோல கல்லோலப்படுகிறது. ஆனால், அவர் சங்கத்தைக்கூட்டி நூல்களைத் தொகுக்குமாறு புலவர் பெருமக்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல! ஊர் ஊராக, நாடு நாடாக, எங்கெங்கு நெடுங்காலமாகப் புலவர்கள் வாழ்ந்தனரோ, வாழ்ந்து வருகின்றனரோ அங்கெல்லாம் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், தம்முடைய தூதர்களை அனுப்பி, ஏட்டுச் சுவடிகளைச் சேகரிப்பதில் அவர் கருத்தைச் செலுத்தி வருகிறார். இதற்குச் செலவழிக்கும் நேரத்தில் சிறிதளவேனும், படைகளைத் திரட்டிப் பயிற்சி கொடுப்பதில் பயன்படுத்தினால்...!

அமுதவல்லி: நாட்டைப் பகைவருடைய தாக்குதலிலிருந்து காக்கலாம் என்பது உங்கள் கருத்து. ஆனால்...!

இளவரசன்: ஆனால்..! என்று ஏன் இழுக்கிறாய்? தேவியாருடைய கருத்து... இல்லை! பாண்டிய நாட்டு வருங்காலப் பேரரசியாருடைய கருத்து என்ன என்பதைத் தெரிவிப்பதில் தயக்கம் எதற்கு?

அமுதவல்லி: விளையாட்டு வேண்டாம் இளவரசரே! நாட்டின் வட எல்லையைக் காவல் புரிய எங்கள் சேனைத்தலைவர் செழியன் சேந்தன், ஆறு மாதங்களுக்கு முன்பே ஆற்றல் மிக்க படையொன்றைத் திரட்டி வெள்ளாற்றங்கரைக்கு அனுப்பியிருக்கிறார்! அதுமட்டுமல்லாமல், வழுதியின் ஆணைப்படி புதிதாகப் பத்தாயிரம் வீரர்களுக்குப் படைக் கலப் பயிற்சியை அவர் அளித்து வருகிறார்!

இளவரசன்: உண்மையாகவா?

அமுதவல்லி: ஏன் வியப்படைகிறீர்? சேரநாட்டு ஒற்றர்கள். 'இது வரையில் தங்களுக்குச் சொல்லாத செய்தியாக இருக்கிறதே என வியப்படைகிறீரா? பாண்டிய மன்னர் பெரு வழுதி திட்டமிட்டுச் செயலாற்றுவதில் ஈடு இணையற்றவர். அவர் ஏட்டுச்சுவடிகளைச் சேகரிப்பதை, ஏதோ ஏளனமாகக் கருதிவிட்டீர்! நம்முடைய மூதாதையர் போற்றி வளர்த்த தமிழ்மொழியின் சீரும் சிறப்பும், அறிவும் ஆற்றலும் அழிந்துவிடாதவாறு – ஏன் மாற்றாரால் அழிக் கப்படாதவாறு – போற்றிக் காக்க முயலுகிறார் என் தந்தை! உலகம் உள்ளளவும் அவை நிலைபெற்று வாழுமாறு செய்வதற்கும், வருங்காலத் தமிழர்களிடத்தில் அவற்றை ஒப்படைப்பதற்கும் உரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றர் வழுதி. இது தவறா?

இளவரசன்: தவறு என்று சொல்லவில்லை தாயே! இதைவிட முக்கியமான செயல்களைச் செய்யவேண்டிய நேரத்தில் !

அமுதவல்லி: புரிகிறது! இதைவிட முக்கியமான செயல் எது அரசே! படையெடுப்பாளர்கள் வருவார்கள்! போவார்கள்! பேரரசுகள் பல இன்று தோன்றும்! நாளை மறைந்துவிடும்! ஆனால், நம்முடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் போற்றிக் காத்து, உலக வரலாற்றில் தமிழினத்திற்குப் பொன்றாப் புகழைத் தேடித் தரப்போகின்றவை, நம்முடைய கலைச்செல்வங்களே! அவற்றுள்ளும் நம்முடைய இலக்கியச் செல்வம், தமிழினத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஒப்பற்ற கருவூலமாயிற்றே! அவை அழிந்துஒழியாதவாறு,போற்றிக்காக்கவேண்டியது காவலனுடைய கடமையல்லவா?

இளவரசன்: கடமைதான்...! நான் மறுக்கவில்லை! சங்க மெனும் தொட்டிலில் தமிழை வளர்த்து, பாண்டிய மன்னர்கள் தங்கள் குடிக்குத் தனிப்பெரும் சிறப்பைத் தேடிக்கொண்டார்கள். உன்னுடைய மொழிப்பற்றையும், நமது பண்பாட்டைப் போற்றிக் காப்பதில் கொண்டுள்ள ஆர்வத்தையும் அறிவதற்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன் !

அமுதவல்லி: உங்கள் நாட்டில் வாழும் புலவர்களைக் கொண்டு நீங்களும் இலக்கியங்களைத் தொகுக்கலாமே!

இளவரசன்: இதுவரையில் அதைப்பற்றி நாங்கள் சிந்திக்கவில்லை.

அமுதவல்லி: என் தந்தைகூட சில திங்களாகத்தான் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். 'வள்ளுவர்' என்னும் சான்றோருடைய நூல், பல மாதங்களுக்கு முன்பு அரங்கேற்றம் செய்யப்பட்டது. அந்நிகழ்ச்சியே, என் தந்தைக்கு இந்தப் பணியில் ஈடுபடுமாறு ஆர்வத்தை அளித்தது. என்னுடைய தந்தை அந்த நூலினைக் கற்று வருகிறார். அதை, அவ்வப்போது என்னுடைய ஆசான் எனக்குக் கற்பித்தும் வருகிறார்!

இளவரசன்: அண்மையில் சிறந்த நூலொன்று, தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டதாகக் கூடலூர்கிழார் தெரிவித்தார். உடனே, அத்நூலினைப் படியெடுத்து வருமாறு, சேர வேந்தர் புலவர் குழு ஒன்றினை மதுரைக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் இன்னும் திரும்பிவரவில்லை என்று நினைக்கிறேன்!

அமுதவல்லி: மூன்று மாதங்களுக்கு முன்புதான், அப்புலவர் குழுவிற்குப் பாண்டியமன்னர்வரவேற்புவிழாநடத்தினார். என்னுடைய ஆசான் மதுரை மருதனிள நாகனாருடன், நானும் அவ்விழாவிற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது திருவள்ளுவர் இயற்றியுள்ள திருக்குறளின்,சிறப்பினைப் புலவர்கள் பலர் பாராட்டிப் பேசினர். எனக்கு அத்தகைய பெரும்புலவரைக் காண வேண்டும் என்ற பேராவல் உண்டாயிற்று...!

இளவரசன்: அவரைக் கண்டாயா?

அமுதவல்லி : (வருத்தத்துடன்) அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை! அரங்கேற்றம் முடிந்த சிலநாள்களுக்குப் பிறகு, அவர் தொண்டை நாட்டிலுள்ள மயிலைக்குச் சென்று விட்டதாகக் கேள்விப்பட்டேன்!

(ஏவலாளன் வருகின்றான்)

ஏவலாளன்: அரசே! நாளைக்குக் காலையில் வேந்தர் பெருமான் தங்களைச் சந்திக்க விரும்புகிறார்.

அயலரசிடமிருந்து திருமுகம் ஒன்றைத் தூதர்கள் கொண்டுவந்து இருக்கின்றார்கள்.

இளவரசன்: நல்லது! காலையில் காண்போம்.

(ஏவலாளன் திரும்பிச் செல்லுகிறான் .)

அமுதா! வேந்தர்பெருமானைச் சந்திப்பதற்குமுன் அயல் நாட்டு வாணிகக் குழுவினரைக் கண்டு பேச வேண்டும். வருகிறேன் ...!

(அமுதவல்லி கண்களாலேயே விடையளிக்கிறாள். இளவரசர் அருகில் வந்து, அவள் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு விரைந்து செல்லுகிறார்.)

காட்சி 9

இடம் : அரசவை.

நேரம் : காலை.,

மாந்தர்: மாவண்கோ, இளவரசர், ஐம்பெருங்குழுவினர், காவலர்.

இளவரசன்: வாழ்க எங்கோ!

மாவண்கோ: வருக வில்லவா! ஐம்பெருங்குழுவினை உடனடியாகக் கூட்டி, கலந்து பேசினேன் ...! இளவரசரை எதிர்நோக்கிக் குழுவினர் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இளவரசன்: மன்னிக்கவேண்டும் அரசே! வணிகர்கள் சிலர் அயல்நாட்டிலிருந்து வந்துள்ளனர். அளவளாவிக் கொண்டிருந்தேன்...! அவர்களுடன்

மாவண்கோ : அமைச்சரே! திருமுகத்தை வில்லவனிடம் கொடுங்கள்!

இளவரசன்: யாரிடம் இருந்து வந்து இருக்கிறது?

அமைச்சர்: பாண்டிய மன்னர் உக்கிரப்பெருவழுதி திருமுகம் அனுப்பியுள்ளார்.

[திருமுகத்தை இளவரசரிடம் அமைச்சர் கொடுக்கிறார்]

இளவரசன்: (அதை ஏற்றுப் படிக்கிறார்] நூல் அரங்கேற் றமாம்....? உருத்திரசன்மர் தொகுத்ததாம்...? அதற்கு நம்மை அழைத்து இருக்கிறார்...! இவ்வளவுதானா..?

மாவண்கோ: இல்லை! இன்னொரு முடங்கலும் பாண்டிய மன்னரிடமிருந்து வந்திருக்கிறது! [அதை இளவரசரிடம் கொடுக்கிறார்]

(இளவரசர் படிக்கும்பொழுதே அவருடைய முகத்தில் வியப்பும், திகைப்பும் உண்டாகின்றன . அதை மெல்ல மறைத்துக் கொண்டு)

இளவரசன்: அவருடைய மகளைக் காணவில்லையாம். அதற்கு நாம் என்ன செய்வது? பெண்ணைப் பெண்ணாக வளர்க்காமல் ஆண்பிள்ளையைப்போல் வளர்த்து விட்டார் அவர். அதற்குரிய தண்டனையை அனுபவிக்கிறார் இப்பொழுது...! நாம் அனுப்பிய திருமுகத்திற்கு மாற்றம் உரைக்காத மன்னர், இப்பொழுது நம்முடை ய உதவியை நாடுகிறார்! கடுகடுத்த குரலில்] இவருடைய மகளை நாம் எதற்குத் தேடதேண்டும்?

மாவண்கோ: [பரிவுடன்] வில்லவா! வழுதி பொறுமையின் நிலைக்களன். தம் மகளுடைய மனக்கருத்தை அறிந்து, தம் முடிவினைத் தெரிவிக்கலாம் என்று காலம் தாழ்த்தி யிருப்பார்! அதற்காக நாம் அவரிடம் சீற்றங்கொள்வது தவறு!

மேலும், தாய் இல்லாக் குழந்தையாகிய அப் பெண்ணைச், செல்வமாகப் போற்றி ஆண்மகனைப் போன்று அவர் வளர்த்திருக்கிறார். எனவே அவர் திருமணம் என்றவுடன் தயக்கம் கொள்வது இயல்புதானே!

இளவரசன்: நாம் என்ன செய்யலாம் சொல்லுங்கள்? தங்கள் ஆணைப்படி பணிபுரிய சேரநாடு ஆயத்தமாக இருக்கிறது.

மாவண்கோ: நூல் அரங்கேற்றத்திற்குப் போகவேண்டியது நம்முடைய கடமையல்லவா? நம்முடைய புலவர் குழு

ஒன்று. முன்பே மதுரையில் இருக்கிறது. இப்பொழுது புலவர் பொய்கையாரும், வேறு புலவர் சிலரும் அரங்கேற்று விழாவிற்கு, நமது அரசின் சார்பில் செல்லுவார்கள். அவர்களோடு நாமும் சென்றால்தானே சிறப்பு. அதனால், நீயும் உன்னுடைய வீரர்கள் சிலரும், பாண்டியநாட்டிற்குச் சென்று, விழாவில் கலந்து கொள்ளவேண்டும் என ஐம்பெருங்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

இளவரசன்: நல்லது வேந்தே! விழாவிற்கு இன்னும் ஐந்தே நாள்கள் உள்ளன. நாளைக்குப் புறப்பட்டால்தான், விழாவன்று காலை மதுரையை அடைய முடியும்...!

மாவண்கோ : மற்றொன்று!

(சுற்றுமுற்றும் சேரவேந்தர் பார்க்கிறார். ஐம்பெரும் குழுவினர் அவ்விடத்தைவிட்டு அகலுகின்றனர்.]

பாண்டியருடைய மகள் கழைக்கூத்தாடுபவள் போல் மாறுவேடம் பூண்டு, நம்முடைய அரண்மனைக்கு வந்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்...!

இளவரசன்: வரவில்லை என்று யாரும் மறுக்கவில்லையே!

மாவண்கோ : பதற்றம் வேண்டாம்! பொறுமையாகக் கேள்! அப்பெண்ணை அழைத்துச் சென்று வழுதியிடம் சேர்த்து விடு. பின்னர், அவர் திருமண விழாவிற்கு அழைப்பு அனுப்புவார். நம்முடைய பரிவாரங்களோடு நான் பாண்டிய நாட்டிற்கு வருகிறேன்.

இளவரசன்: இதற்கா ஐம்பெருங் குழுவினைக் கூட்டினீர்!

மாவண்கோ: ஆம்! உம்முடைய வருங்காலத்தைப் பற்றிய கவலையால்தான்.....!

இளவரசன்: (புன்முறுவலுடன்) கவலைப்படுமாறு அவள் நம்மை விட்டுவிடவில்லை!

மாவண்கோ: எல்லாம் அமைச்சர் வாயிலாக அறிந்தேன். நாளைக்கே புறப்படுவதற்கு ஆயத்தம் செய். இன்றைக்கே. என்னுடைய முடங்கல் ஒன்றைப் பாண்டிய மன்னருக்கு அனுப்பிவைக்கிறேன்

(அரசர் கைகளைத் தட்டுகிறார். ஏவலர் வருகின்றனர்) அமைச்சரையும், திருவாய்க் கேள்வியையும் அழைத்து வருக.

(ஏவலர் விரைந்து செல்கின்றர்)

இளவரசன்: விடை பெறுகிறேன் வேந்தே! நாளைக் காலை மதுரைக்குப் புறப்படுகிறேன்.

மாவண்கோ: நான் கூறியவற்றைக் கருத்தில் கொள்க! அந்தப் பெண்ணை யாரும் அறிந்துகொள்ளாத வகையில் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டும்!

அமைச்சர் வருகிறார்; இளவரசர் தந்தையை வணங்கிவிட்டுச் செல்கிறார்.)

காட்சி 10

இடம் : சேர நாட்டு அரண்மனையின் அந்தப்புரத்தில் உள்ள சோலை .

நேரம்: மாலை

மாந்தர்: மங்கை, அமுதவல்லி, இளவரசர், படைவீரர்.

(அமுதவல்லி பாடிக்கொண்டு இருக்கிறாள்)

செங்கதிரோன் போய்மறையச் செவ்வா னேகத்
திங்களிளம் பிறைநுதலைத் தெரியக் காட்டிக்
கங்குலெனப் புலவர்சொலும் இரவுப் பெண்ணும்
காரிருளாம் குழல் விரித்துக் களிக்கை வீசிப்
பொங்கொளிரும் விண்மீன்களெனும் முத்துப் பற்கள்
புறந்தோன்ற சிரித்துப் போந்தாள் ; போந்த
மங்கையவள் புன்னகையால் மயங்கி யிந்த
வையகமே ஆழ்துயிலில் வைகிற்றம்மா!

இளவரசன்: கழைக்கூத்திக்குப் பாடக்கூடத் தெரியுமோ?

அமுதவல்லி: (சிரித்துக் கொண்டே) பாண்டிய நாட்டுப் பாவையர் முத்தமிழிலும் வல்லவர்கள் என்பது உங்களுக்குத் தெரியாதோ?

[**இளவரசன்:** தெரிந்து கொள்ளத்தான் நாளைக்கு 'நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும்' மதுரை மாநகருக்குப் புறப்படுகிறேன்!

அமுதவல்லி: (குறும்பாக) நீங்கள் மட்டுமா?

இளவரசன்: இல்லை! என்னுடைய வில்லேர் உழவர்களும், சொல்லேர் உழவர்களும் உடன் வருகின்றனர்.

அமுதவல்லி: கழைக்கூத்தியைக் கைவிட்டுவிட்டீரா?

இளவரசன்: ஆம்! பாண்டி மாதேவியைப் பத்திரமாக அழைத்துச் சென்று வழுதியிடம் சேர்க்கப் போகிறேன்!

அமுதவல்லி: பாண்டிய நாட்டு இளவரசி, தன் நாட்டிற்குத் திரும்பி வர மறுத்தால்...!

இளவரசன்: சேரவேந்தரின் படைவீரர்கள் பாண்டி மாதேவியைத் தூக்கிக் கொண்டு போய், உக்கிரப்பெருவழுதியின் முன்னர் நிறுத்துவார்கள்!

அமுதவல்லி: (திகைப்புடன்) என்ன புதிர் போடுகிறீர்கள்?

இளவரசன்: புதிரல்ல தாயே! உம்முடைய தந்தையார், மகளைக் காணாமல் மனக்கலக்கம் அடைந்திருக்கிறாராம்...! அவருடைய மனக்கலக்கத்தை மாற்றுவதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 'அகநானூறு' எனும் புதியதோர் இலக்கியத்தை அரங்கேற்றம் செய்யப் போகிறார்களாம்...! அழைப்பு வந்திருக்கிறது!

அமுதவல்லி: உருத்திரசன்மர் அல்லவா 'அகநானூற்றை'த் தொகுக்கும் அரும்பணியில் ஈடுபட்டிருந்தார்! வழுதி மிகச் சிறந்த முறையில் திட்டமிட்டுத் தொகுக்கவேண்டும் என்று ஆறு மாதங்களுக்கு முன்பு அறிவித்தார். அவ்வரிய பணி முடிவடைந்து விட்டது குறித்துப் பெருமகிழ்ச்சி.

ஆனால் என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லையே! என் ஆசானுடைய அனுமதியைப் பெற்றுதானே நான் என் நாட்டை விட்டுப் புறப்பட்டேன்!'

இளவரசன்: ஓகோ உன்னுடைய கள்ளத்தனத்திற்கு உன்னுடைய ஆசான் வேறு உடந்தையா?

அமுதவல்லி (புன்முறுவலுடன்) என்னுடைய வளர்ப்புத் தந்தைக்கு, என்னுடைய நல்வாழ்வில் அக்கறை இருப்பது இயற்கைதானே!

இளவரசன்: இதுவரை பாண்டிய மன்னருடைய மகள் என்று தானே நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் பாவேந்தரின் பாவை என்பதை அறிந்தேன்!

அமுதவல்லி: எங்கள் பாட்டனாரின் அவைக்களப் புலவராகிய மாங்குடி மருதனார் என் தந்தைக்கு ஆசானாகவும் அறிவுத் தந்தையாகவும் இருந்தார். அவருடைய மகனான **மருதனிள நாகனார்** என்னுடைய ஆசானாகவும், தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராகவும் இருந்து வருகிறார்!

இளவரசன்: வாழ்க உங்கள் தமிழ்த் தொண்டு! வளர்க உங்கள் புகழ் !

அமுதவல்லி: போதும் உங்கள் புகழுரை! எப்பொழுது புறப்படப் போகிறீர்?

இளவரசன்: நாளை வைகறைப் பொழுதில் புறப்படுமாறு வேந்தர் கட்டளை இட்டுள்ளார்.

அமுதவல்லி: உண்மையாகத்தானே புறப்படப் போகிறீர்?

இளவரசன்: பொய் வேறு சொல்லுகிறேனா!

அமுதவல்லி: நீங்கள் பொய் பேசுவதில் வல்லவராயிற்றே! ஒரு முறை எளிதில் ஏமாற்றப்பட்டதைப் போல, மறுமுறையும் நான் ஏமாறமாட்டேன்.

இளவரசன்: நீ தான் பொய் பேசக் கற்றுக் கொண்டாய்! உன் வாளுக்கு ஏன் சொல்லிக் கொடுக்கவில்லை?

அமுதவல்லி: வாளா?

இளவரசன்: ஆமாம்! உன் உடைவாள்! (தன் உறையிலுள்ள வாளையுருவி அமுதாவிடம் காட்டுகிறான்.)

எல்லைப்புறத்தில் என்னோடு வாட்போரிட்டாயே! அப்பொழுது வாள்கள் உறை மாறிவிட்டன. இங்கு வந்த பிறகே, அதை உணர்ந்தேன். உன் வாளில் பொறிக்கப்பட்டிருந்த பாண்டிய அரசின் இலச்சினையும், உன்னுடைய பெயரும் நீ யார் என்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டன.

அமுதவல்லி: அடடா! ஏமாந்துவிட்டேனே!

(அப்போது **மங்கை** வருகிறாள்)

மங்கை: வாள் தானாகத் தவறி இடம் மாறவில்லை. உங்களுக்குத் தண்ணீர் தரும்போது, வாள்களை மாற்றியது இந்தக் கைகள் தாம்!

இளவரசன்: எங்கள் கைகளை இணைத்த உன் கைகளுக்கு என்ன பரிசு அளிப்பது?

அமுதவல்லி: நம்மிரண்டு உள்ளங்களையும் இணையுமாறு செய்வதற்குப் பாடுபட்ட கைகள் இரண்டல்ல இளவரசே! நான்கு! (அப்போது அழகன் வருகிறான். அவனைக் காட்டி) இவருக்கும் அதில் பங்குண்டு!

இளவரசன்: அப்படியா? அழகன் இனி என் மெய்காப்பாளன்!

அமுதவல்லி! **மங்கை** என் ஆருயிர்த் தோழி:

மங்கை: பூ அதே பதவிதானே!

(அனைவரும் சிரிக்கின்றனர்)

அமுதவல்லி: (அழகனைச் சுட்டிக்காட்டி) ஊமை ஊரைக் 'கெடுக்கும் என்பார்கள்! இவர் எனக்கு உயிர் அளித்தார்!

இளவரசன்: (அழகனைக் காட்டி) இவன் ஊமையா? யார் சொன்னது? இவன் பெரிய வாயாடி ஆயிற்றே!

(மறுபடியும் எல்லாரும் சிரிக்கின்றனர்)

அமுதவல்லி: ஐயோ! நான் ஏமாந்து போய்விட்டேனே!

இளவரசன்: இது எத்தனையாவது ஏமாற்றம்?

மங்கை: (திடீரென்று) முதல் ஏமாற்றம்! எங்கள் நாட்டு எதிர்கால அரசியாரே! உங்களைக் காணாமல் உங்கள் தந்தை வருந்துவார். உடனடியாகப் புறப்படுங்கள் மதுரைக்கு!

அமுதவல்லி: ஏன் இப்படி விரட்டுகிறீர்? நான் இங்கிருப்பது பிடிக்கவில்லையா?

மங்கை: எங்கள் தொழிலுக்குப் போட்டியாக வந்துவிட்டீரே அம்மா...! அதனால் தான் அஞ்சுகிறன்.

அமுதவல்லி:நான் ஆடாதபொழுதே உங்களுக்குப் போட்டியாக வந்துவிட்டேன் என்கிறீர்கள் ! ஆடத் தொடங்கினால் என்ன சொல்லுவீர்களோ?

இளவரசன்: கண்டு மகிழ்வோம்! கலைச்செல்வியென்று பட்டம் சூட்டிப் போற்றிப் பாராட்டுவோம்!

மங்கை : இல்லை! நாங்களும் உங்களுடன் சேர்ந்து ஆடுவோம்.

இளவரசன்: ஒருமுறை உன் நடனத்தைக் கண்டு மகிழலாமே!

(உடனே மங்கை பாடத் தொடங்குகிறாள். அதற்கேற்ப அமுத வல்லி அபிநயம் பிடித்து ஆடுகிறாள். பாட்டிற்கேற்பக் காண்பார் கருத்தைக் கவரும் வகையில் பொற்கொடி போல அமுதவல்லி ஆடி முடிக்கிறாள். எல்லாரும் மகிழ்ச்சியினால் பாராட்டுகின்றனர்.)

இளவரசன்: அருமை! அருமை! பூம்புகாரின் பொற்கொடி மாதவியே அமுதவல்லியாகச் சேரநாட்டிற்கு வந்திருக்கிறாள்...!

அமுதவல்லி: (நாணத்துடன்) போதும் உங்கள் முகமன். கலையைப் போற்றுங்கள். கன்னியரைப் புகழவேண்டாம்.

காட்சி 11

இடம்: மதுரைத் தமிழ்ச் சங்கம்.

நேரம்: முற்பகல்

மாந்தர்: நக்கீரர், உருத்திரசன்மர், மருதனிள நாகனார் முதலிய புலவர்களும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, சேரநாட்டு இளவரசன் முதலிய மன்னர்களும், பாண்டிய நாட்டு இளவரசியும், ஐம்பெருங்குழுவினரும் எண்பேராயத்தினரும் நாட்டு மக்கள் பிறருமாவர்.

(முரசுகள் முழங்குகின்றன. சங்குகள் ஒலிக்கின்றன.

பாண்டிய மன்னர் பரிவாரங்களோடு மன்றத்திற்குள் நுழைகிறார்.

வாழ்க பாண்டிய மன்னர்! வாழ்க வழுதி!
கன்னித் தமிழ் வளர்க்கும் காவலர் வாழ்க!
வாழ்க தமிழ்! வாழ்க தமிழக வேந்தர்கள்!

எனும் வாழ்த்தொலி விண்ணை இடிக்கின்றது. புலவர் பெருமக்கள் உக்கிரப்பெருவழுதியை வரவேற்கின்றனர்.)

நக்கீரர்: இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழுகூடல் தண்கோல் வேந்தே! வருக!
வையம் காவலர் வழிமொழிந்து ஒழுக
நாளும் நற்றமிழ் வளர்க்கும் நாடாளும் வேந்தே வருக!

(பாண்டியன் வணங்குகிறான்)

வழுதி: அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் பெருமக்களே! இம்மாமன்றத்தில் குழுமியுள்ள மன்னர்களே! மாண்புமிகு

கலைஞர்களே! சான்றோர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பு கலந்த வணக்கம் உரித்தாகுக!

இந்நாள் தமிழகத்தின் வரலாற்றிலே ஒரு பொன்னாள்! இப்பொன்னாளில் – வரலாறு காணாத சிறப்புமிக்க இத்திருநாளில் உங்கள் அனைவரையும் தமிழ்ச் சங்கத்தின் புரவலன் என்னும் முறையில் 'வருக! வருக!' என்று வரவேற்கின்றேன்.

தொன்று நிகழ்ந்தவை அனைத்தையும் நன்கு உணர்ந்திடும் கலைவாணர்களும், இவள் என்று பிறந்தவள் என்றுணர முடியாத இயல்பினளாக நம் தமிழ் அன்னை விளங்குகிறாள். அவள் கன்னித் தமிழாய், மூவாத முத்தமிழாய்ச் சங்கமெனும் தொட்டிலில் வளர்ந்து வருகிறாள். மதிநுட்பம் உடைய புலவர்களும், அறிவுத்திறன் வாய்ந்த அறிஞர்களும் அவளை, அல்லும் பகலும் அயராது போற்றி, வளர்த்து வருகின்றனர். அவ்வரிய பணியில் அடியேனுக்கும் ஒரு சிறு பங்குண்டு...!

(இடையில் மக்கள் 'வாழ்க வழுதியர் கோன்' என்று வாழ்த்தொலி எழுப்புகின்றனர்)

வழுதி: சில திங்களுக்கு முன் நடைபெற்ற விழாவொன்றில் கலந்துகொண்ட புலவர் பெருமக்கள் சில கருத்துகளைத் தெரிவித்தனர். தமிழ் கூறும் நல்லுலகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து, மறைந்த புலவர்கள் பலராவர். அவர்கள் இயற்றிய பாடல்களையும், வாழுகின்ற புலவர்கள் இயற்றியுள்ள பாடல்களையும் திரட்டி, நூல்களாகத் தொகுப்பதற்கு, நம்முடைய தமிழ்ச் சங்கம் முன்வர வேண்டுமென்று அவர்கள் அறிவித்தனர்.

அவ்வரும் பணியை, நான், நக்கீரர் பெருமானிடத்து ஒப்படைத்தேன். தம்முடைய மாணவர் உருத்திரசன்மருக்கு, அவர் ஊக்கம் அளிக்கும் வகையில் இப்பணியை ஒப்படைத்தார். சங்கத்துச் சான்றோர்களின்

ஒத்துழைப்பினால், முதன் முதலாகத் தொகுக்கப்பெற்ற நூலினை இன்று அரங்கேற்றம் செய்கிறோம். இத்தகைய அரும்பெரும் பணிகளைச் செய்து முடிக்க தமிழக வேந்தர்களின் ஒத்துழைப்பும், தமிழ் மக்களின் குன்றாத ஆர்வமும், குறையாத ஆதரவும் எனக்கு என்றும் உறுதுணையாக இருக்குமாறு உதவவேண்டும் என்பது, இவ்விழாவில் யான் விடுக்கும் வேண்டு கோளாகும்.

அடுத்து, நமது தமிழ்ச் சங்கத்தின் தனிப்பெருந் தலைவரும், முத்தமிழ் வித்தகருமான **நக்கீரர்** பெருமான், அரங்கேற்றம் செய்யப்படும் நூலினை அறிமுகம் செய்து வைப்பார்.

(மக்கள் எல்லாரும் " வாழ்க வழுதி! வாழ்க தமிழ் மொழி!" என வாழ்த்துகின்றனர். நக்கீரர் எழுந்து நிற்கின்றார். மக்கள் 'நாளும் நற்றமிழ்த் தொண்டாற்றும் நக்கீரர் வாழ்க!' என முழங்குகின்றனர்.)

நக்கீரர்: (கைகளை அமர்த்தி) 'பொதிய மலை பிறந்தமொழி வாழ்வறியும் காலமெல்லாம்' புலவர் பெருமக்களால் போற்றத்தக்க சிறப்புவாய்த்தது பாண்டியர்குடி! அக்குடியினை வீறுபெற்று விளங்கச் செய்யும் உக்கிரப்பெருவழுதியே! பிற மண்டிலங்களின் மன்னர்களே! சான்றோர்களே!

தமிழ்மொழியின் வரலாற்றில்– ஏன்?– தமிழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய அரும்பெரும் பணியை, இன்று தமது தமிழ்ச் சங்கம்ஆற்றிஇருக்கிறது!அறநெறிபிறழாதுஆட்சிபுரியும் பாண்டியரின் ஆதரவில் இயங்கிவரும் தமிழ்ச்சங்கத்தில், அறிவு குடிகொண்டிருக்கும் செறிவுடைய மனத்தவரும். பெரும்புகழ் வாய்ந்தவருமான சான்றோர்கள் முத்தமிழினை ஆராய்ந்து வருகின்றனர். அவர்களுள் மதுரை உப்பூரிகுடிகிழார் முதுபெரும் புலவராவார்! எம் கெழுதகை நண்பருமாவார். அவருடைய திருமகனாரும்,

எம்முடைய மாணாக்கருமான உருத்திர சன்மர் கருவில் திருவுடையவராவர். அவர் 'நெடுந்தொகை'யெனும் இவ்வகநானூற்றைத் தொகுத்துள்ளார். இன்று அவ்வருந் தமிழ் நூலை வழுதியார் பெருமகன் தலைமையில், அரங்கேற்றம் செய்ய இம்மாமன்றத்தில் மட்டற்ற மகிழ்ச்சியோடு நாம் குழுமியுள்ளோம்...!

(மக்கள் வாழ்க தமிழ்! வளர்க வழுதியின் புகழ்!" என வாழ்த்துகின்றனர்.)

நக்கீரர்: நம்முடைய முன்னோர்கள் வகுத்த பொருள் இலக் கணத்துள் அகப் பொருள் இலக்கண மரபிற்கு இணங்க, நமது தமிழ்ச்சான்றோர்கள் பலர், பல்வேறு காலத்தில், அகப்பொருள் பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளனர். அவற்றை வகைப்படுத்தித் தொகுத்து 'அகநானூறு' என்னும் நூல் வடிவில், தமிழ்கூறும் நல்லுலகிற்கு இன்று நாம் அளிக்கின்றோம்.

அகநானூற்றைத் தொகுத்து நமக்கு அளித்த உருத்திரசன்மரின் சார்பில், இந்நூலின் அருமை பெருமைகளை மருதனிள நாகனார் இப்பொழுது எடுத்தியம்புவார்.

(நக்கீரர் எல்லாருக்கும் வணக்கம் தெரிவித்து அமருகிறார் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்)

மருதனிள நாகனார்: தேன்பருகும் சோலை தென்னவன் வளநாட்டில் வாழைவடக்கீனும்; வான்கமுகு தெற்கீனும்; கட்டுக் கலங்காணும்; கதிருழக்கு நெற்காணும்! எனப் போற்றப்படும் வளமார் பாண்டிய நாட்டின் தன்னிகரற்ற தனிப்பெருந்தலைவ! சான்றோர்களே!

அனைவருக்கும் என்னுடைய அன்புகனிந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் நம்முடைய அமிழ்தினும் இனிய தமிழ்மொழியை, நமது சான்றோர்கள் செந்தமிழ்,

இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ், அருந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ்,செழுந்தமிழ், உயர்தமிழ். கோதில் தமிழ், ஒண்தமிழ் என்றெல்லாம் போற்றிப் பாராட்டியுள்ளனர். இவ்வரிய தமிழ் மொழியில், தொன்மை) சிறப்பும் இலக்கிய நயமும் வாய்ந்த இலக்கியங்கள் பல தொன்றுதொட்டு இயற்றப்பட்டுள்ளன.

அவ்விலக்கியமரபைஅடியொற்றிஇயற்றப்பட்டபாடல்கள் பல்லாயிரக்கணக்கானவை. அவற்றுள் அடியளவானும், கருத்துவகையானும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட நானூறு பாடல்களைக்கொண்டு, நம் இளம்புலவர் உருத்திரசன்மரால் தொகுக்கப்பெற்றதே 'அகநானூறு' என்னும் இந்நூலாகும். இந்நூலின் பாடல்களை 158 புலவர்கள் பாடியுள்ளனர். அவர்களுள் பெண்பால் புலவர்கள் ஒன்பதின்மர் என்பதும், அரசப் புலவர்கள் பதின்மர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும்.

நமது நக்கீரர் பெருமான் பாடிய 17 பாடல்களும், நமது பெருவழுதி பாடிய ஒரு பாடலும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அவையோருக்கு அறிவிக்க விரும்புகின்றேன். வாய் பேச இயலாத உருத்திரசன்மர் இயற்றியுள்ள பாடலை அவையோரின் திருமுன் படைக்கிறேன்...!

(இந்நிலையில் ஒற்றர் தலைவன் அவையினுள் நுழைகிறான். அரசரிடம் அவன் சுருள் மடல் ஒன்றைத் தருகிறான் அரசன் அதனை விரித்துப் படிக்கின்றான் அப்பொழுது அவன் முகத்தில் வியப்பும் திகைப்பும் தோன்றுகின்றன.)

வழுதி: வெள்ளம்போல் இன்று தமிழர் கூட்டம் ஒன்றாகக்கூடி, நமதுதமிழன்னைக்குவிழாவெடுக்கும்வேளையில்,தமிழ் நாட்டின் வடபகுதி சோழநாடுவரை மாற்றார் கைக்குமாறி விட்டது என்ற அதிர்ச்சி தரத்தக்க செய்திவந்திருக்கிறது. அவையோர்களே! உடலைப் புல்லரிக்கும் செய்தி!

உள்ளத்தைச் சுக்குநூறாக உடைத்தெறியும் செய்தி!

எனினும், நாம் அஞ்சுவதும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை!" விரைவில் இதற்கோர் முடிவு காண்போம்! விழாவிற்கு நமது முதுபெரும் புலவர் நக்கீரர் பெருமான், என் சார்பில் தலைமையேற்று, எஞ்சிய நிதழ்ச்சிகளைச் சிறப்புற நடத்தித் தருவார். நான் விடைபெறுகிறேன்; இரவு நடைபெறவிருக்கும் விருந்தில் சந்திப்போம். அனைவருக்கும் எனது அன்புகலந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகுக!

(மன்னன் தமிழ்ச் சங்க மண்டபத்தை விட்டுப் புறப்படுகிறான்; அவையினர் வாழ்த்தொலியெழுப்பி ஆரவாரம் செய்கின்றனர்

காட்சி 12

இடம்: அரண்மனையிலுள்ள ஒரு சோலை

நேரம்: இரவு

மாந்தர்: அமுதவல்லி; வில்லவன்கோதை; கொள்ளைக்காரர்.

அமுதவல்லி: விருந்துண்டவுடன் நேராக இங்கு வருவீர் என்றல்லவா எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். உங்களுடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து ஒருத்தி காத்துக்கொண்டிருப்பாள் என்பதையே மறந்துவிட்டீர்களா?

இளவரசன்: மறப்பேனா? மறந்தால் என்னுடைய தலையைத் தான் நீ விட்டு வைப்பாயா?

அமுதவல்லி: (சிறிது சீற்றத்துடன்) போதும் உங்கள் விளையாட்டு! என்னுடைய வேதனை உங்களுக்கு விளையாட்டாக இருக்கிறது!

இளவரசன்: இளவரசி! விருந்துண்டதும் நான் தேவியின் தரிசனத்திற்குப் புறப்பட்டது உண்மை! வழியில்...! ஆனால்...

அமுதவல்லி: வழியில் காணாதன கண்டீரோ?

இளவரசன்: இல்லை! மதிமயங்கக்கூடிய ஒரு செய்தியைக் கேள்வியுற்றேன்.

அமுதவல்லி: (சலிப்போடு) பிறகு ஏன் இங்குவந்தீர்? மயக்கம் தெளிந்து விட்டதா?

இளவரசன்: மயக்கத்தைத் தெளிவிக்கும் மாமருந்து இங்கிருக்கும்பொழுது எப்படி என் மயக்கம் தெளியும்?

அமுதவல்லி: போதும் உங்கள் பசப்பு மொழிகள்! பாண்டிய நாட்டுப் பாவையர், பசப்புமொழியில் மயங்கிவிடும் மடவார்கள் இல்லை என்பதை இனியாகிலும் தெரிந்து கொள்ளுங்கள்!

இளவரசன்:(புன்முறுவலுடன்) பொய்! முற்றிலும் பொய்! பாண்டி மாதேவியே இதற்குச் சான்றாயிற்றே!

அமுதவல்லி : பொய்யும் மெய்யும் என்னவென்பது உங்களுக்குத் தெரியுமா? ஏன் என்னை வீணாக வதைகிறீர்கள்?

இளவரசன்: திருமணத்தைப் பற்றி நகரில் ஒரே பேச்சாக இருக்கிறது. நல்லவேளையாக, நான் யார் என்பதை மக்கள் அறியாவண்ணம் மாறுவேடம் பூண்டு அரண்மனைக்கு வெளியே சென்றிருந்தேன். 'எல்லாரும் இளவரசியின் திருமணம் எப்போது?' என்பதைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்!

அமுதவல்லி (அலட்சியமாக) அவ்வளவுதானே! அதற்கா மதிமயங்கிவிட்டீர்! நீங்கள் திருமணத்தைப் பற்றி நினைக்காதபொழுது, ஊரார் பேச்சைக்கேட்டா மயங்கிவிட்டீர்? என்னைச் சோதித்துப் பார்க்க விரும்பும் சூழ்ச்சியா!

இளவரசன்: சோதிக்க வேண்டியநேரம் இதுவன்று! நான் சோதிக்க வேண்டியவர்களை, சோதிக்க வேண்டிய இடத்தில், அன்றைக்கே சோதித்துவிட்டேன்.

அமுதவல்லி: சோதனையின் முடிவினை எனக்கு அறிவிக்க மாட்டீர்களா?

இளவரசன்: அறிவிக்க வேண்டிய இடத்தில் அறிவித்து

விட்டேன்! அதைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம்!

(அவளுடைய கைகளைக் குலுக்குகிறான்.)

அமுதவல்லி: எனக்கு என்னமோ அச்சமாக இருக்கிறது. இன்று விழா முடிவடைவதற்குள் வழுதி எழுந்து சென்றதிலிருந்து, என் உள்ளத்தில் ஒருவகையான கலக்கம் உண்டாகிவிட்டது. துன்ப உணர்வாகிய அலைகள் உள்ளத்தைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன.

இளவரசன்: நான் அருகிலிருக்கின்ற பொழுது நீ எதற்காக அஞ்சவேண்டும்? அரசியல் கடமை காரணமாக, ஒற்றர் தலைவரிடத்துத் தனிமையில் பேசவேண்டி, பாண்டிய மன்னர் மன்றத்தை விட்டுச் சென்றார். அதைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்?

அமுதவல்லி: (கண்ணீருடன்) இல்லை...! உங்கள் சொற்களால் என் மனம் ஆறுதல் அடையவில்லை! ஏதோ ஒரு பெரிய தீங்கு உண்டாகப் போகிறது! என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள்! என் உள்ளமும் உடலும் நடுங்குகின்றன.

இளவரன் : (அமுதாவின் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே) அதெல்லாம் ஒன்றும் இல்லை! பல நாட்களாக உனக்கு மனம் சரியில்லை. போதாக்குறைக்குப் பயணத்தால் உண்டான களைப்பு! தந்தை சரியாகப் பேசவில்லையே என்ற மனச்சோர்வு! அதனால் வருத்தப்படுகிறாய்! கவலைப்படாதே! அரண்மனை மருத்துவரை அழைத்துவரச் சொல்லுகிறேன்.

அமுதவல்லி: வேண்டாம்.! வேண்டாம்! நீங்கள் அருகிலிருந்தாலே போதும்!

(இளவரசரின் தோள்களின்மீது அமுதா சாய்கிறாள்.)

இளவரசன்: இதென்ன போர்முரசம் கேட்கிறது? சங்குகள் ஒலிக்கின்றனவே?

அமுதவல்லி: (சற்று விழிகளைத் திறந்து) ஆ! போரா?

(ஓவென்று அலறி மூர்ச்சித்துவிடுகிறாள் அமுதா. உடனே வில்லவன் கோதை அவளைத் தோளில் போட்டுக் கொண்டு, உருவிய வாளுடன் செல்லுகிறான். தீவட்டியுடன் இங்குமங்கும் பலர் ஓடுகின்றனர்.

யாரோ பின்னால் இருந்து தாக்குகின்றனர். பாயும் அம்புகளைத்தன் வாளைக் கொண்டு தட்டி வீழ்த்துகிறான் வில்லவன்கோதை. அவனைப் போருக்கு அழைக்கின்றான் கருநிற ஆடை அணிந்த ஒருவன்.)

இளவரசன்: யாரடா நீ! இங்கு ஏன் வந்தாய்? கருநிற...மனிதன்: உங்களுடைய கனவை நினைவாக்க வந்தேன்?

இளவரசன்: எந்தக் கனவை?

கருநிற மனிதன்: ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்கும் கனவை !

இளவரசன்: ஆ!ஆ! அப்படியா? நீ யார் என்பதைச் சொல்! பின்னர் உன்னிடம் போரிடத் தேவையா என்பதைச் சொல்லுகின்றேன்...!

கருநிற...மனிதன்: சேரவேந்தனின் செம்மலே! நான் யார்...? நான் யார்? தெரியாதா... உனக்கு? இன்று தமிழ்ச் சங்கத்து விழாவில் என்னைச் சந்தித்தாயே ! நினைவு இல்லையா?

இளவரசன்: கேட்டதைச் சொல்! வீண்கதை அளக்காதே !

கருநிற... மனிதன் : வீண்கதை அளக்கவில்லை! வீணனே! கதம் பர்களை ஒழித்து விட்டதாக வீண்பெருமை அடித்துக் கொண்டானே உன் பாட்டன்! அந்தக் கதம்பர்களின் மரபில் வந்த 'கார்மேகன்' நான். களப்பிரரின் தூசிப் படைக்குத் தலைவனாக வந்திருக்கிறேன் !

இளவரசன்: எடு வாளை! பார்ப்போம் உன் வீரத்தை!

கருநிற...மனிதன்: பொறுமை! பொறுமை!' அருமைக் காதலியைத் தோளில் சுமந்து கொண்டிருக்கும்

இந்நிலையிலா போரிடப்போகிறாய்?பாவம்!...வேண்டாம்...?
இவளை முதலில் ...!

இளவரசன் : எதற்காக இவளைக் கொலைசெய்ய முயலுகிறாய்?

கருநிற... மனிதன்: இவளுடைய தலைமையில் அல்லவா ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்கும் திட்டம் செயல்படப் போகிறது! அதற்காகத்தான், முதலில் இவளைக் களப்பலி கொடுக்கப் போகிறோம்.

இளவரசன்: ஆ! (வாளை ஓங்கி வீசுகிறான். தாக்குண்ட கார்மேகன் தரையில் விழுகிறான்.

அதற்குள் பாண்டிய வீரர்கள் பலர் கருநிற உடையணிந்தவனைச் சிறைப்படுத்துகின்றனர்)

காட்சி 13

இடம் : மதுரை நகருக்கு வெளியே வைகை ஆற்றங்கரையோரம்.

நேரம் : பிற்பகல்

மாந்தர்: திருப்பரங்குன்றத்திற்குச்செல்லும் மக்கள்.

முதல் மனிதன் : (இரண்டாம் மனிதனைப் பார்த்து] என்ன அண்ணே! எங்க இப்படிப் புறப்பட்டுவிட்ட?

இரண்டாம் மனிதன்: நாலு நாள்களா என் மனமே சரியில்லை தம்பி! நம்ப அரசருக்கு இந்தக் 'கதி'யா உண்டாகணும்? என்ன அருமையா அந்த விழாவில் பேசினாரு? தம்மையெல்லாம் விருந்துக்கு அழைத்தாரு...ம்ம்...!

முதல் மனிதன் : நீங்க விழாவிற்குப் போய் இருந்தீங்களா? எனக்கு என் வயிற்றுப் பிழைப்பைக் கவனிக்கவே சரியாப் போச்சு! நானும் வந்திருந்தால் கடைசியா ஒரு முறை பாண்டியரைப் பார்த்திருப்பேன் என்னமோ போ அண்ணே! நம் மருதையில் நாமெல்லாம் கேட்டதே இல்ல இந்த மாதிரி அதியாயத்தே!

இரண்டாம் மனிதன்: யாரப்பா எதிர்பார்த்தாங்க? அன்று அவர் ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்கவேண்டும் நாமெல்லாம் ஒன்றுகூடிக் களப்பிரர் என்னும் காட்டு மிராண்டிகளைத் தமிழ் நாட்டிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார். அப்போ அவர்

முகத்தில் களைதட்டியிருந்ததை நினைத்தா எனக்கு என்னவோ, பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கு

முதல் மனிதன் : இரவு விருந்தை முடித்துவந்தபொழுது அரண்மனை வரையில் பெரிய கூட்டம் அவரைத் தொடர்ந்து வந்ததாமே?

இரண்டாம் மனிதன்: அதை ஏன் கேட்கிற? வத்திருந்த விருந்தினர்களையும், புலவர்களையும் தனித்தனியே சந்தித்துப் பேசி, அவர்களை அவரவர் தங்கும் இடங்களுக்கு அனுப்பிவிட்டு, கடைசியாகத் தன் மகளைக் காண அந்தப்புரம் நோக்கிப் போனாராம்.

முதல் மனிதன் : ஒரே பொண்ணு கண்ணே கண்ணுனு வளர்த்தாரே! பாவம்? அதற்கு மணம் முடிக்காமல் போயிட்டாரே!

இரண்டாம் மனிதன் : அதெல்லாம் ஏற்பாடு செய்திருக்காராம் இன்னும் பத்து நாள்களில் திருமணம் என்று சொன்னார்கள், அந்த மணமகன்கூட விழாவிற்கு வந்திருந்தாரு...

முதல் மனிதன்: யாரண்ணே! அந்த மாப்பிளே?

இரண்டாம் மனிதன்: சேர நாட்டு இளவரசராம். வீராதி வீரராம்

முதல் மனிதன் : அவர் அந்தக் காட்சியைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை...! ஆமாம் அண்ணே அரசரு மகளைப் பார்க்கப்போனாருனு சொன்னீங்க அப்புறம்...?

இரண்டாம் மனிதன் : என்ன தம்பி? நீ தான் அதற்குள்ளே என்னென்னவோ கேட்டுக்கொண்டு போகிறயே?

முதல் மனிதன் : இல்லை அண்ணே! நம்ம அரசகுமாரியை நினைச்சேன்... பரிதாபமாப் போச்சு!

இரண்டாம் மனிதன் : அவர் அந்தப்புரம் போறபொழுது போர் முரசு கொட்னாங்க! சங்கு ஊதினாங்க! அதைக் கேட்டவுடன், திரும்பி நம்ம அரசர் ஓடோடி வந்தார். அப்படி

வந்தவர் மார்மேல் யாரோ ஒரு கட்டாரியை வீசிட்டாங்க! அவ்வளவுதான்! எதிர்பாராத தாக்குதலுக்கு வழுதி பலியானார். அவரோடு பாண்டியருடைய வீரமும் தீரமும் சீரும் சிறப்பும் எல்லாம் போய்விட்டது!

முதல் மனிதன் : யார் அண்ணே அரசரைக் கொன்று இருப்பாங்க? அவருக்கு நம்ம ஊரிலே யாரு எதிரிகள்? ஒன்னும் தெரியலே...!

இரண்டாம் மனிதன் : தொண்டை நாட்டுக்குள் களப்பிரர் எனும் கொள்ளைக் கூட்டத்தாரு நுழைந்துவிட்டாங்க என்ற செய்தியைக் கேட்டவுடனே, நமது அரசர் ஒரு பெரிய சேனையைத் தென்வெள்ளாற்றங்கரைக்கு அனுப்பிக் காவல்காத்து வருமாறு செய்தார். அதனால், அந்தக் கொள்ளைக் கூட்டத்தினருக்கு அவரை ஒழித்துவிட வேண்டும்னு தோன்றியிருக்கும். அதனால், அந்தக் கூட்டத்தார்சிலர்,மாறுவேடத்தில்நம்முடையநாட்டிற்குள் நுழைந்து திரிந்து கொண்டிருந்தானுங்களாம்...!

முதல் மனிதன்: போயும் போயும் இந்தச்சமயத்திலா நாட்டில் இருக்கிறவங்களையெல்லாம் கூட்டி விழா நடத்துறது?

இரண்டாம் மனிதன்: அவங்க படையெடுத்து வந்தாப் 'போரிட்டுச் சமாளிக்கலாம்னு அரசர் காத்திருந்தார். அதனால் இந்தமாதிரி வஞ்சகச் செயல்களை அவர் எதிர் பார்க்கலை. இந்த எண்ணத்தோடு அவர் விழாவிற்கு ஏற்பாடு செய்தாரு.

ஆனால், நம்ம ஒற்றர்களை ஏமாற்றிவிட்டார்களே அந்தக் காட்டுமிராண்டிப் பயல்கள்!

முதல் மனிதன் : நம்ம உளவாளிகளை மட்டும் தானா? ஏன் நம்ம சேனாதிபதியையும் தான்...

இரண்டாம் மனிதன்: அரசரைக் கொன்றதோடு நிற்க வில்லையே அந்தச் சதிகாரப் பயல்கள்! அரசர் கொலை செய்யப்பட்டார் என்ற செய்திகேட்டு, கோட்டைவாயிலில் இருந்து ஓடிவந்த சேனாதிபதி செழியன் சேந்தனையாரோ பின்னால் இருந்து தாக்கிக் கொன்றுவிட்டாங்களாமே!

முதல் மனிதன் : அரசரும் போனார். சேனாதிபதியும் போயிட்டார். இனி என்ன நடக்குமோ தெரியலை...?

இரண்டாம் மனிதன் : நடக்கக் கூடாதது எல்லாம்தான் நடந்துபோச்சே! இனி என்ன இருக்கு?

(அப்பொழுது ஒரு பெரியவர் அவர்கள் அருகே வருகிறார்)

வாங்க பெரியவரே! பட்டணத்துப் பக்கம் போனீங்களா? ஏதாவது செய்தி தெரியுங்களா?

பெரியவர்: என்ன செய்தி இருக்கு தம்பி? அன்றிரவே எல்லாம் முடிந்து விட்டிருக்கும்! என்னமோ நம்ப நல்ல காலம், சேர் நாட்டு இளவரசர் அரண்மனையில் தங்கியிருந்தாரு. முரசு முழங்கியவுடனேயே அவர் நேராகக் கோட்டை வாயிலுக்கு ஓடிச் சென்று செய்தியை அறிந்து கிட்டாரு. தலைவாயில் தளபதியிடத்து கோட்டைக் கதவுகளை அடைத்துக் காவல் புரியுமாறு சொல்லி விட்டு ஓடிய பொழுது, அவரை விரட்டிக் கொண்டு யாரோ சிலர் ஓடி வந்தார்களாம். உடனே அவர் பதுங்கிப் பதுங்கிச் சென்று அவர்களை ஏமாற்றிவிட்டாராம்.

முதல் மனிதன்: அவரை விரட்டியவர்கள் யாரென்பது தெரியலையா?

பெரியவர்: அவர்களை ஏமாற்றிவிட்டுச் சேர நாட்டு இளவரசர் சென்று கொண்டிருந்த பொழுதுதான், நம்ம சேனாபதி வேகமாகக் குதிரையில் வந்தாராம். அவரை அந்தக் கொலைகாரர்கள் கொன்று விட்டார்கள்.

இரண்டாம் மனிதன்: இதெல்லாம் சொன்னாங்க! இதற்குமேல் ஏதாவது தெரியுங்களா?

பெரியவர்: சேர நாட்டு இளவரசர் அந்தக் காட்டுமிராண்டிகளில் மூன்று பேரைக் கொன்று விட்டாராம். ஒருவனை உயிரோடு சிறைப்படுத்தி இருக்கிறாராம். அதனால், நம் முடைய ஐம்பெருங்குழுவினர் நம்முடைய நாட்டுக்கு அவரைத் தற்காலிகத் தளபதியாக்கியிருக்கிறார்களாம்.

முதல் மனிதன்: (இரண்டாவது மனிதனைப் பார்த்து) என்ன அண்ணே! மருமகனாகப் போகிறவரைத் தளபதிபாக் கிட்டாங்களாமே...?

இரண்டாம் மனிதன்: திருமணம் நடைபெறுகிற வரையில் தளபதியாக இருப்பாரு! அப்புறம் அவரே அரசராவாரு!

பெரியவர்: சேரநாட்டு மன்னரின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறாங்க! அவர் வந்த பிறகு, அவரைக் கலந்து முடிவிற்கு வர வேண்டும் என்று நம் புலவரய்யா நக்கீரரும். அமைச்சர் நெடுமாறனும் கூறுகிறார்களாம்.

இரண்டாம் மனிதன்: வழுதி ஐயா ..மகளுக்கு மணம் செய்து பார்க்காமல் போய்'ட்டார்! பாவம்!

பெரியவர்: எப்பவோ நடத்திருக்க வேண்டிய திருமணம். அந்தப் பெண் பிடிவாதத்தால் அரசருக்குக் கூட மனவருத்தமாம்...!

இரண்டாம் மனிதன்: தாயில்லாப் பெண்...! அதைப் பற்றி அவர் அதிகக் கவலைப்பட்டிருப்பாரு...!

முதல் மனிதன்: அதோ பார் அண்ணே! ஒரே கூட்டமா இருக்கு அங்கே! நான் அங்கே போய்ப் பார்த்துட்டுவரேன்!

இரண்டாம் மனிதன்: சரி தம்பி! நான் கூட வீட்டுக்குப் போகணும் (பெரியவைரைப் பார்த்து) வாங்க போகலாம்...! (எல்லாரும் போகின்றனர்.)

காட்சி 14

இடம்: பாண்டிய நாட்டுக் கொலு மண்டபம்

நேரம்: காலை

மாந்தர்: சேர வேந்தர்; சிற்றரசர்; பெருங்குடி மக்கள்; அமைச்சர்; நக்கீரர் முதலியோர். (அமுதவல்லியின் முடிசூட்டு விழாவினைக் கண்டுகளிக்கின்றனர்.)

நக்கீரர். (அரசுகட்டிலில் வீற்றிருக்கும் சேரநாட்டு இளவரசருக்கும் அமுதவல்லிக்கும் நக்கீரர் முடிகளைச் சூட்டுகின்றார். ஒரே ஆரவாரம். வாழ்த்தொலி!) மாண்புமிக்க வேந்தர்களே ! பெரியோர்களே! அன்பிற்குரிய பாண்டிய நாட்டு மக்களே! நம்முடைய அரசிளங்குமரி அமுதவல்லியின் திருமணத்தை நாம் நடத்திவைக்கும் நிலையில் இருக்கிறோம்...! இதைப் போன்றே முடிசூட்டு விழாவினையும் நம்மையே நடத்துமாறு, நம் வழுதியர்கோன் நம்மை எல்லாம் துன்பத்தில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்து சென்றார்.

அவருடைய கனவு இன்று நனவாகிவிட்டது ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்க அல்லும் பகலும் அயராது பாடுபட்டார் அவர். கடல் சூழ்ந்த தமிழகம். முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வருவதைவிட மூவேந்தர்களையும் உறவுமுறையால் ஒன்றுபடுத்திப்

பேராற்றல் மிக்கதொரு பேரரசைத் தென்னாட்டில் நிறுவ வேண்டும் என்று அவர் ஓயாது முயன்றார். அம்முயற்சியின் ஒரு பகுதி இன்று வெற்றிபெற்று விட்டது. இனிக் குமரிநாட்டையும் சேரநாட்டையும் ஆளப்போகின்ற பொறுப்புச் சேரநாட்டு இளவரசர்– நம்நாட்டு மருகர் கோதைக்கே உரியதாகும். இத்தகைய பெரும் பொறுப்பை ஏற்கும் அவருக்கு, நம்முடைய இளவரசி உறுதுணையாக விளங்குவார்கள் என்னும் நம்பிக்கை நமக்கெல்லாம் என்றும் உண்டு!

பெரியோர்களே! புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் இம் மணமக்களை,

அங்கண் விசும்பின் ஆரிருள் அகற்றும் வெங்கதிர்ச் செல்வன் போன்றும் தண்கதிர் மதியம் போன்றும் நிலையியர் இந்நில மிசை யானே!

என வாயார வாழ்த்தி, மனமாரப் போற்றுகின்றேன்.

(வாழ்க மணமக்கள்! பாண்டியரும் சேரரும் பாரில் புகழ்பெற்று விளங்குக!... எனும் வாழ்த்தொலி தொடர்ந்து ஒலிக்கிறது)

வில்லவன்கோதை: மதிப்பிற்குரிய பெரியோர்களே! எங்கள் மணவிழாவில் கலந்துகொண்டு மகிழ்ச்சியுற, மறத்தமிழர் மாவீரன் வழுதியர்கோன் இல்லாக் காரணத்தால் நம்மிடையே மகிழ்ச்சியில்லை! ஆனால், மனவெழுச்சி இருக்கிறது! கண்ணீரைத் துடைத்துக் கடமையைச் செய்ய, நாட்டினை வஞ்சகர்களின் வலையில் சிக்கவிடாமல் காக்க மேற்கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கையாக இந்த முடிசூட்டு விழாவினை நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள்! உங்கள் அனை வருக்கும் எங்களுடைய அன்பு கலந்த வணக்கத்தையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்!

பாண்டிய நாட்டு மரபிற்கு இணங்கப் புலவர் பெருந் தகை நக்கீரர் திருமுடி சூட்டி எங்களை வாழ்த்தியருளினார். அவருடைய வாழ்த்துதலுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்குப் பெருந்திரளாகக் கூடியிருந்து இவ்விழாவினைச் சிறப்புறச் செய்த தமிழ் மக்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றி என்றும் உரியதாகும்.

இந்நன்னாளில் நான் சில கருத்துகளைத் தங்கள் திருமுன்பு வைத்து, அவற்றிற்குத் தங்களுடைய முழு ஆதரவினையும் நல்குமாறு வேண்டுகின்றேன்!

''வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும் விசை ஒடிந்த உடலில் வன்மை வேண்டும்!' சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும் காழ்ச்சிந்தை, மறச் செயல்கள் மிகவும் வேண்டும்! கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்" என்பதில் இங்குள்ள யாருக்கும் சிறிதளவும் ஐயமிருக்காது என நினைக்கின்றேன்.

நம்முடைய அறிவையும் ஆற்றலையும் நன்கு பயன் படுத்தி, நம்முடைய ஆற்றலைச் சிதறவிடாமல் ஒரு முகப்படுத்தி, நமக்கிடையே உள்ள போட்டியையும் பொறாமையையும் போக்கி ஒற்றுமையுடன் முயன்றால். ஒன்றுபட்ட தமிழகத்தை உருவாக்க இயலுமென நம்புகின்றேன்! அதற்கு, இன்று நாம் கால்கோள்விழா நடத்தியிருப்பதாகக் கூறினால் அது தவறாகாது! நாம் கடமையுணர்வோடு, கட்டுப்பாடுடையவராய், கண்ணியத்துடன் நடந்து கொள்ளுவோமானால், நம்மை எவராலும் வீழ்த்த இயலாது. இது உண்மை; வெறும் கற்பனை அன்று!

எனவே, இன்று முதல் தமிழினத்தின் சங்க நாதம் விந்தியத்தின் விளிம்பிலே, இமயத்தின் சிகரத்திலே

எதிரொலிக்கட்டும்! 'துஞ்சாக் கண்ண வடபுலத்தரசே!" என்று பாடினார் அன்றொரு புலவர்! இன்று 'துஞ்சாக் கண்ண தென்புலத் தரசே!" என்பதை உலகமறியுமாறு செய்ய வேண்டியது நம் கடமையாகும்.

ஆகவே, அன்பிற்குரிய அறிஞர்களே! மதிப்பிற்குரிய மன்னர்களே! உங்களுடைய அன்பையும் ஆதரவையும் அடிப்படையாகக் கொண்டே, இன்று நான் ஒன்றுபட்ட தமிழகத்திற்குக் கால்கோள் விழா நடத்துகின்றேன்! தமிழன்னைக்கு 'அடிமை விலங்கு' பூட்டப் படாமல் காக்க–தடுக்க. நம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் உவகையோடு அளிக்க முன்வருவோமாக!

(ஒரே ஆரவாரம் ! வாழ்த்தொலி]

மும்மலை வாழ்க! முந்நாடு வாழ்க!
மும்முரசு வாழ்க! முத்தமிழ் வாழ்க!
முக்கொடி வாழ்க!' மும்மாவும் வாழ்க!
பார்புகழ் பாண்டியன் பாவை வாழ்க!
தார் வேந்தன் கொற்றம் வாழ்க!
தரணிபுகழ் தமிழ் வாழ்க!
தமிழ்த்திரு தாடு வாழ்க' வாழ்கவே!

என்று புலவர்கள் வாழ்த்துகின்றனர்; மக்கள் உடன் சேர்ந்து வாழ்த்துகின்றனர்

(2)

இருளில் ஒளி

க.த. திருநாவுக்கரசு

வரலாற்று ஒளி

கி.பி.மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைத் தமிழக வரலாற்றில் இருண்ட காலம்' என்பர். ஆனால், இன்று, இக்கருத்துப் 'பொய்யாய்ப் பழங்கதையாய்ப்' போய்விட்டது!

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இன்றைக்குப் பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர், பௌத்த சமயம் தமிழகத்தில் தழைத்து ஓங்கியது! காஞ்சி (கச்சி) மாநகர், தேரவாத (ஈனயான) பௌத்த சமயத்தின் வளர்ப்புப் பண்ணையாக உலகப் புகழ் பெற்று ஒளிர்ந்தது! அச்சமயத்தில்தான். தொண்டை நாட்டின் வடக்குப் பகுதியைப் பல்லவர்கள் தாக்கிக் கொண்டிருந்தனர். தொண்டைமான் மரபினரே, தொண்டை நாட்டை ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலம் அது! தொண்டைமான்கள் ஆட்சியின் கடைசிக் காலக்கட்டத்தை இந்நாடகம் சித்திரிக்கிறது.

இந்நாடகத்திற்குரிய கருவினை, அமராவதி பௌத்த ஸ்தூபியின் தூண் ஒன்றில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்று தந்துதவியது.

தமிளா கணஸ பாதுணம் சுலகணஸ
தாகாய ச(தா)ன மஹாசே
தியபாத மூலே உதம்பதோச•[1]

என்பது கல்வெட்டு வாசகம் இக்கல்வெட்டு பாலிமொழியில் வரையப்பட்டு, பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

•1 Archaeological urvery of India, No. 80, p. 20.. Notes on the Amaravati Stupa by J. Burgess, 1882.

"தமிழன் கண்ணனும், அவன் தம்பி இளங்கண்ணனும், இவர்கள் தங்கை நாகை என்பவளும் சேர்ந்து இந்தத் தூண் திருப்பணியைச் செய்துள்ளனர்" என்பது இக்கல்வெட்டின் பொருளாகும். (சுபஸ சுண்ண இளம் (சிறிய) கண்ணன் : உதம்பதம்தூண்கல்) இக்கல்வெட்டின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகும்.

அமராவதியில், தமிழகத்து உடன்பிறப்புகள் மூவர் செய்த இத்திருப்பணியை, இன்றைய தமிழ் மக்கள் அறிய வேண்டும் எனும் நோக்கத்தோடு இருளில் ஒளி* எனும் இந்நாடகம் புனையப்பட்டுள்ளது. மேலும் இந்நாடகம் பௌத்த சமயச் சார்புடையது; புத்ததத்த மகாதேரர் எனும் புகழ் பூத்த தமிழ்ச் சான்றோர் ஒருவரின் அருட் பணியை – மக்கள் தொண்டின் மாட்சியை – உலகிற்கு எடுத்தியம்ப முயலுகிறது.

தமிழக வரலாற்றின் பொற்காலமான சங்கக் காலத்திற்கு (கி.பி.800க்கு)ப் பிறகு, சமய எழுச்சிக் காலமாகிய பல்லவர் ஆட்சிக்கு முன்னர் (கி. பி. 600) தமிழகம் எவ்வாறு இருந்தது என்பதை இந்நாடகம் ஓரளவிற்குக் கோடி காட்டுகிறது.

இவ்வகையில், இந்நூலின் முதல் நாடகமாகிய அடிமை விலங்கோடு'. 'இருளில் ஒளி' எனும் இந்நாடகம் காலத்தாலும். வரலாற்று நிகழ்ச்சிகளாலும் நெருங்கிய தொடர்புடையது. முதல் நாடகம் தமிழ் மண்ணில் 'களப்பிரர்' எனும் கலியரசர் புகுந்த காலச் சூழலைப் படம்பிடித்துக் காட்டுவது; இரண்டாவது தாடகம் 'பல்லவர்' எனும் வடவர் தமிழகத்தில் நுழைந்த பொழுது தமிழகம் எவ்வாறு இருந்தது என்பதை நம் கண்முன்னால் கொண்டு வந்து நிறுத்துகிறது.

இந்நாடகம் நடிப்பதற்காகவே எழுதப்பட்டது. எனினும், இலக்கிய மணம் கமழத்தக்க வகையில் இந்நாடகம் படைக்கப்பட்டுள்ளதைப் படிப்போர் எளிதில் உணரலாம்.

நாடக மாந்தர்

நாகை : தொண்டை நாட்டு அமைச்சர் கண்ணனின் **தங்கை :** படைத் தலைவர் பனம்பாரனுடைய காதலி.

கண்ணன் : தொண்டையர் கோனின் அமைச்சன்

இளங்கண்ணன் : அமைச்சரின் இளவல்; அருந்தமிழ்ப் புலவன்.

பனம்பாரன் : தொண்டை நாட்டின் தளபதி.

புத்ததத்த மகாதேரர் : கச்சி மாநகர் மகாபோதி சங்கத்தின் தலைவர்; பௌத்த சமயத்தின் கலைஞானங்களில் உலகப் புகழ் பெற்ற அறவோர்.

தொண்டைமான் : தொண்டை நாட்டின் அரசன்.

தருமபாலர் : கச்சி மகாபோதி சங்கத்தின் துடிப்புமிகு இளந்துறவி.

தருமசீலர் : அமராவதி மகாபோதி சங்கத்தின் தலைவர்.

தாமரை: நாகையின் தோழி.

[மற்றும் துறவிகள், படை வீரர், ஏவலர் முதலியோர்]

காட்சி 1

இடம்: கச்சி (காஞ்சி) மாநகரின் வடமேற்கு வாயில் அருகில் உள்ள புத்த விகாரை

நேரம்: காலை

மாந்தர்: புத்ததத்த மகாதேரர், அவருடைய சீடர்கள் பொதுமக்கள்

(மணியொலி கேட்கிறது. அதற்கு இடையே

புத்தம் சரணம் கச்சாமி!
சங்கம் சரணம் கச்சாமி!
தம்மம் சரணம் கச்சாமி!

எனும் வழிபாட்டுப் பாடல் ஒலி எழுகிறது. பிறகு அந்தப் புத்த விகாரையின் தலைவரும் மாபெரும் பௌத்த துறவியுமான புத்ததத்த மகாதேரர் அருளுரை வழங்குகிறார்.

புத்ததத்தர் : அன்பர்களே!

போதி நிழலின் புனிதன் பொலங்கழல்
ஆதி உலகிற்கு அரண்

என்பது ஆன்றோர் வாக்கு. இந்த உலகில் மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டிய பெருந்தகை புத்தன் பெருமான். மனித இனத்தை வாட்டி வதைக்கும் பசி, பட்டினி, வறுமை, நோய், அறியாமை போன்றவற்றைப் போக்குவதற்கும் நீக்குவதற்கும்

வழிகாட்டிய வான் பொருள் நம் குருதேவர்! அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குவோம்! அவர் காட்டிய அருளற நெறியில் நின்று, மனித குலத்தின் துன்பத்தைத் துடைக்க முயலுவோமாக!

அண்ணலின் அன்பு நெறியை – அருளறத் தொண்டு நெறியை உலகம் உணர்ந்து போற்றும் நாள் நெருங்கிக் கொண்டு இருக்கிறது! அந்தப் புத்தஞாயிற்றின் பேரொளி, காரிருள் சூழ்ந்த உலகியலில் அல்லலுறும் மனித இனத்திற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக என்றும் விளங்கும்!

அந்த அருளொளியினைப் பெற்றுள்ள அன்பர்களே! நாம் 'வித்தகம் பேசாது பணி செய' முயலுவோமாக !

காணார், கேளார், கால்முடப்பட்டோர்,
பேணுநர் இல்லோர், பிணிநடுக் குற்றோர்

ஆகத் துன்புறும் மக்களுக்குச் செய்யும் தொண்டே நம் பெருமானுக்கு உகந்த தொண்டாகும். இத்தொண்டு நெறியில், நம்மை ஈடுபடுத்திக் கொள்ளுவதே போதி மாதவன் புனித நெறியைப் போற்றும் செயலின் முதற் படியாகும்!

எனவே நாம் அந்நெறி நிற்க – அன்பர்பணி செய முயல்வோமாக!

வாழ்க போதிமாதவனின் பொன்னடிகள்!
வளர்க பௌத்த தருமம்!
பரப்புக தொண்டு நெறியை!

(உடனே 'புத்தம் சரணம் கச்சாமி!' எனும் வாழ்த்து ஒலி எழுகிறது!]

இளந்துறவி : தேரர் பெருமானே! வணக்கம். ஆந்திர நாட்டிலிருந்து நம் சமயச் சான்றோர்கள் சிலர் வந்துள் ளனர்; தங்களைக் காண விரும்புகின்றனர்.

புத்ததத்தர்: உடனே அழைத்து வருக!

புதியதுறவிகள்: புத்தம் சரணம்! சங்கம் சரணம்! தம்மம் சரணம்!

எனக் கூறி வணங்குகின்றனர்.

புத்ததத்தர்: (எழுந்து நின்று] போதிமாதவன் திருவடிகள் போற்றி! பௌத்த சங்கப் பெரியோர்களே! உங்கள் அனைவருக்கும் கச்சியம்பதி மகாபோதி சங்கத்தின் சார்பில் நல்வரவு கூறி, வரவேற்கின்றேன். வருக அருள் நெறித் தொண்டர்களே! அமர்க இப்பீடத்தில்!

[வந்த துறவிகள் புத்ததத்த மகாதேரரின் திருவடிகளைத் தொட்டு வணங்குகின்றனர். புத்ததத்தர் அவர்களை வாரி அணைத்து இருக்கையில் அமர்த்துகிறார்)

புந்ததத்தர்: சானறோர்களே! ஐயனின் திருச்செய்தியை உலகு எங்கும் பரப்பும் திருப்பணி எவ்வாறு உள்ளது? ஆந்திர நாட்டில் சாதவாகனப் பேரரசர்கள் நெடுங் காலம் பௌத்த தருமம் தழைக்க அரும்பணியாற்றி யுள்ளனர்! ஆனால்...!

புதிய துறவிகளின் தலைவர்: தாங்கள் அறியாதது ஒன்றும் இல்லை! தங்கள் திருவுள்ளத்தில் ஏதோ குறை ஒன்று உள்ளது போல் உணருகிறோம் ஐயா!

புத்ததத்தர்: குறையாகக் கருதமாட்டேன்! என்னுடைய ஆர்வத்திற்கேற்ற வகையில், அரும்பணியாற்ற இந்த நாட்டில் வாய்ப்பு இல்லை! ஈழத்திற்குச் சென்று, அங்குள்ள நம் சங்கத் தோழர்களுடைய திருத்தொண்டின் மாட்சியைக் கண்ட பிறகு, இந்த மண்ணில் நம் பெருமானின் நற்செய்தியை நல்ல முறையில் பரப்புவதற்குத் திட்டமிட்டேன்...!

பு.து. தலைவர் : கச்சிமா நகரின் பௌத்த சங்கம் தங்களால் அல்லவா சிறந்து விளங்குகிறது அடிகள்!

புத்ததத்தர்: கச்சி மகாபோதி சங்கம், முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அறவண அடிகளால் தொடங்கப்பட்டது. ஆனால், அவருக்குப் பிறகு எதிர்பார்த்த அளவிற்கு, நம் சங்கம் வளரவும் இல்லை! சேவை செய்யவும் இல்லை!

புதியதுறவிகளில் ஒருவர் : தாங்கள் செய்துள்ள / செய்து வருகிற திருத்தொண்டின் மாட்சியைச் சொற்களால் சொல்ல இயலாதே !

தரும தேவனாகிய புத்தபகவானுடைய அவதாரத்தை 'அபிதம்ம அவதாரம்' எனும் அரிய நூலாக இயற்றியுள்ளீரே! அது ஒன்று போதுமே தலைவா!

புத்ததத்தர்: நூல் இயற்றுவதில் என்ன இருக்கிறது? அண்ணலின் அருள்நெறியை மக்களுக்குப் புரியுமாறு சொல்ல முயன்றேன். முயற்சியில் வெற்றி பெற இயலவில்லை! நம் சங்கத்தின் புனித மொழியான பாலியில் அத்திருநூலை இயற்றினேன். நம்பிக்குகள், நாட்டுமக்களுக்கு அந்நூலின் செய்திகளை எடுத்துரைப்பதில் இடர்ப்படுகின்றனர். 'மக்கள் மொழியில்' எழுதப் பெறாததால் உண்டான குறை!

பு.து. தலைவர்: அதற்கென்ன அடிகள்! தமிழில் எழுதிவிட்டால் போகிறது. நாங்களும்....

புத்ததத்தர்: ஆம். நானும் அப்படித்தான் செய்துவருகிறேன். கச்சியம்பதி மகாபோதி சங்கத்தின் துடிப்புமிகு இளந் துறவியான "தருமபாலரை' எங்கள் மொழியில் – இந்த நாட்டு மொழியான தமிழில் – மொழியாக்கம் செய்யுமாறு பணித்துள்ளேன். மக்களிடையே முதலில் உபதேசம் செய்து பார்த்து, பிறகு அவர்கள் உள்ளம்கொள்ளத்தக்க வகையில் அவர் தமிழாக்கம் செய்து வருகிறார். ஆமாம்! நீங்கள் இங்கு எழுந்தருளியதன் நோக்கம் யாதென அறியாலாமா?

பு.து. தலைவர்: நாங்கள் இரண்டு பணிகளைக் கருத்தில் கொண்டு தங்களைக் காண வந்துள்ளோம்!

புத்ததத்தர்: அப்படியா? மிக்க மகிழ்ச்சி! அண்ணலின் அறநெறியைப் பரப்ப அடியேனுக்கும் வாய்ப்புக் கொடுப்பீர் என நம்புகின்றேன்!

பு.து, தலைவர்: தங்கள் திருநூலை – அபிதம்ம அவதாரத்தைப் படியெடுத்துச் செல்லவே நாங்கள் வந்துள்ளோம். பத்து

ஆண்டுகளுக்கு முன்னர்க் காவிரிப்பூம்பட்டினத்தில் தாங்கள் அந்நூலின் சில பகுதிகளை எங்கள் குருதேவருக்குப் படித்துக் காட்டினீர்களாம்.

புத்ததத்தர்: ஆம்! அவருடைய ஆலோசனையைக் கேட்டேன். நூலை முடிப்பதற்குள் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்டுவிட்டது! அதனால் சிறிது தடை உண்டாயிற்று. மூன்று ஆண்டுகள் கழித்தே 'அபிதம்மாவதாரம்' நிறைவுற்றது!

பு.து.தலைவர்: எங்கள் குருநாதர் தருமசீலர் 'அபிதம் மாவதாரத்தை'ப் படிஎடுத்துவருமாறு பணித்துள்ளார். மற்றும், அதனை மக்கள் மொழியில் பெயர்த்து எழுதவும் அனுமதி வேண்டியுள்ளார். இதோ அவர் கொடுத்தனுப்பியுள்ள திருமுகம்!

[ஓலைச்சுருளைப் பணிவுடன் புத்ததத்தரிடம் கொடுக்கின்றார் மகிழ்வுடன் புத்ததத்தர் திருமுகத்தைத் தாமே படித்துக் கொள்ளுகின்றார்]

புத்ததத்தர்: (புன்முறுவலுடன்) வேறொரு முக்கியச் செய்தியையும் சுட்டியுள்ளாரே! அமராவதி ஸ்தூபியைப் புதுப்பிக்கும் திருப்பணியில் காஞ்சி மகாபோதி சங்கம் ஆர்வம் காட்ட வேண்டுமாம்! உண்மைதான்! அவர் குறைப்படுவதில் உண்மை இல்லாமல் போகவில்லை !

பு.து. தலைவர்: குறையாகச் சொல்லவில்லை அடிகளே! வேண்டுகோள்! அன்பான வேண்டுகோள்! தட்சணப் பிரதேசத்தில் நெடுங்காலமாகச் சிறந்து விளங்கும் ஒரே ஸ்தூபி! – எம்பெருமானின் ஒரே நினைவுச் சின்னம் அமராவதி ஸ்தூபி ஆயிற்றே! அதனைப் புதுப்பிக்கும் அரும்பணியில் திரமிள தேசத்தாரும் பங்கு கொண்டால், இன்னும் சிறப்பாகத் திருப்பணி அமையுமே என்னும் ஆர்வத்தால்...!

புத்ததத்தர்: ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர்

அமராவதி ஸ்தூபியின் அளியினை நாகார்ச்சுனர் முதன் முதலாக அமைத்தார். அப்பொழுது, கச்சியிலிருந்த அறவண அடிகள் பெரும்பொருள் திரட்டி உதவினார்.

மேலும், தமிழகத்தின் தலைசிறந்த சிற்பிகளின் குடும்பங்கள் சிலவற்றை அங்குக் குடியேற்றி, திருப்பணியில் ஈடுபடுமாறு அவர் செய்ததாகச் சொல்லுவார்கள்...!"

இப்பொழுது நடைபெறும் திருப்பணிக்குக் கச்சியம்பதி மகாபோதி சங்கம் மட்டும் அல்லாமல், பல செல்வர்களையும், அரசியலதிகாரிகளையும் உதவி செய்யுமாறு செய்கிறேன்!

பு.து. தலைவர்: இதைவிட முக்கியமான பணி எங்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது பெருமானே! தங்கள் திருநூலைப் படி எடுத்துச் செல்லவேண்டும். அதை மக்கள் மொழியில் பெயர்த்து எழுதத் தங்கள் அனுமதியும் வேண்டும்...!

புத்ததத்தர்: (பரிவுடன்) போதிமாதவரின் நற்செய்தியை உலகெங்கும் பரப்புவதற்காகத்தான் 'அபிதம்ம அவதாரத்தை' இயற்றினேன். அமராவதி மகாபோதி சங்கம் அதனை,உலகிற்கு அறிமுகப்படுத்த முன்வருவது குறித்து மெத்த மகிழ்ச்சி! என்னுடைய அனுமதி எதற்கு? நாவலந்தீவின் பதினெட்டு மொழிகளில்மட்டும் அல்லாமல், சீனம், சிங்களம் போன்ற உலக மொழிகள் எதில் வேண்டுமானாலும் இதனை நம் சங்கத்தினர் மொழியாக்கம் செய்யலாம்! இந்நூல் என்னுடைய சொத்து அன்று!நம் சங்கத்தின் சொத்து! புத்தர் பெருமானின் நெறியில் நிற்கும் உலக மக்களின் சொத்து!

பு.து. தலைவர்:(தம்முடன் வந்துள்ள இருவரைச் சுட்டி)இவர்கள் நூல்களைப் படி யெடுப்பதில் வல்லவர்கள்! (வேறு இருவரைச்சுட்டி) அவர்கள் இருவரும் பாலி மொழியிலும்

ஆந்திரத்தின் மக்கள் மொழியான வடுகிலும் வல்லவர்கள்! அடிகளே! இன்றே எங்கள் பணியைத் தொடங்குகிறோம்! மூன்று பௌர்ணமிக்குள் திரும்பவேண்டும்!

புத்ததத்தர்: [தம் கையைத்தட்டி ஓர் இளந்துறவியை அழைத்து] எங்கே நம் சங்கக் கண்காணிப்பாளர்? அவரையும் தருமபாலரையும் அழைத்து வாருங்கள்!

[சிறிது நேரத்திற்குள் அவ்விருவரும் வந்து வணக்கம் தெரிவிக்கின்றனர். அவர்களை அறிமுகப்படுத்திய வண்ணம்]

(சங்கக் கண்காணிப்பாளரை நோக்கி) ஆந்திரத்தில் இருந்து வந்துள்ள இவ்வடியார்கள் மூன்று உவாக்கள் வரை இங்குத் தங்குவார்கள். அவர்கள் தங்குவதற்குரிய வசதிகளைச் செய்து தருக!

(தருமபாலரை நோக்கி)

தருமபாலரே! இவர்கள் நம் பெருமானின் வரலாற்று நூலைப் படி எடுக்க வேண்டுமாம்! உடனிருந்து அவர்களுடைய ஐயங்களைப் போக்கி, பிழையின்றிப் படியெடுக்க உதவுக!

பு.து தலைவர்: பெருமான் திருவருள் புரிவாராக!

புத்ததத்தர்: வாருங்கள்! ஐயனின் திருவடிகளை வணங்கி விடைபெறுவோம்!

[சங்கத்தை அடுத்துள்ள சோலையில் புத்தர் பெருமானின் திருவடிகள் அமைந்த சைத்தியம் இருக்கிறது. அதன் வாயிலில் அனைவரும் சென்று நின்று வணங்குகின்றனர்.]

(அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுகின்றனர்]

அருளாழி நயந்தோய் நீஇ!
அறவாழி பயந்தோய் நீஇ !
மருளாழி துறந்தோய் நீஇ!
மறையாழி புரந்தோய் நீஇ!
மாதவரின் மாதவன் நீஇ!
வானவருள் வானவன் நீஇ!

போதனரின் போதனன் நீஇ!
புண்ணியருள் புண்ணிய நீஇ நின்
பொன்னடிகள் போற்றி! போற்றி!

(பின்னர் அமைதியாகச் சிறிது நேரம் தியானத்தில் அனைவரும் அமருகின்றனர்]

காட்சி 2

இடம் : கச்சிமா நகரில் அமைச்சர் கண்ணனின் மாளிகையை அடுத்துள்ள சோலை.

நேரம்: மாலை

மாந்தர்: படைத்தலைவன் பனம்பாரன்; அமைச்சரின் தங்கை **நாகை**.

[நாகை தன் காதலன் வரவிற்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடக்கிறாள். நேரம் செல்லச் செல்லப் பொறுமையின்றிப் பூத்துக்குலுங்கும் செடிகொடிகளைப் பிடித்துப் பார்த்தவண்ணம் பாடுகிறாள்)

கன்னல்நேர் சுவைப் பொருளோ? காதல். இன்னமுதக்
கவின்பாகோ? காரிகையர்தம் கருத்து அழிக்கும்
மின்னொளிர் திருத்தோள்கள்? மாண்புமிகு
மன்னவனோ? மறவர்குலத் தோன்றல்தானோ?

[கைகளைத் தட்டும் ஓசை கேட்கிறது! நாகை ஒலிவந்த திசை நோக்கித் திரும்பிப் பார்க்கிறாள்]

நாகை: ஓ! படைத்தலைவர் ஒற்று வேலை பார்க்கிறாரோ? நேர்வழியில் வாராது. குறுக்கு வழியில் சோலைக்குள் நுழைந்து, பதுங்கி தின்று. இங்கு யாரை உளவறியப் பார்க்கின்றாரோ?

ப. பனம்பாரன்: அமைச்சருடைய மாளிகைக்குள் நேராக நுழைய முடியுமோ? காவலர்கள் அமைச்சரிடம் அல்லவா அழைத்துச் செல்லுவார்கள்?

நாகை : கள்ளமனம் துள்ளுகிறது...! அமைச்சர், வீட்டில் இல்லாத நேரம்பார்த்து, உளவறிய வரும் வீராதி வீரரே! ஏன் வீண்பேச்சு? ஏன் என்னை இவ்வளவு நேரம் காக்க வைத்தீர்? (பொருமுகிறாள்)

ப. பனம்பாரன்: என் அன்பிற்குரிய நாகமே! உன் நினைவால் வாடுகிறேன் எந்நேரமே? அதனால் உள்ளத்தில் வளர்வது சோகமே! எப்படித்தான் அடக்குவேன் என் தாபமே!

நாகை : போதும்! போதும்! நிறுத்துங்கள்!தேற்று எங்காகிலும் நாடகம் பார்த்துவிட்டு வந்தீரா? அல்லது அடுத்துவரும் புதுப்புனல் விழாவில் அரங்கேற்றம் செய்ய நாடக ஒத்திகை பார்த்துவிட்டு வந்தீரா? நான் கேட்டதற்கு மாற்றம் உரைக்காமல் மழுப்ப வேண்டா!

ப. பனம்பாரன்: உள்ளதைச் சொன்னால் நீ ஏன் நம்பமாட்டேன் என்கிறாய்? என் உள்ளத்து உணர்வுகளைச் சொற்களில் வெளிப்படுத்தினேன் ! நீ நம்பாவிட்டால் நான் என்ன செய்வது?

(அவள் முன்னர் மண்டியிட்டு)

ஆரிடத்து உரைப்பேன்?
ஆரொடு நோவேன்?
ஆண்ட நீ அருளிலையானால்...?

நாகை : நன்றாக இருக்கிறது! எழுந்திருங்கள்! யாராவது பார்த்தால், படைத்தலைவர் பனம்பாரனார் மானம் கப்பல் ஏறிவிடும்..! (சலிப்புடன்). ஆண்களே இப்படித்தான் இருப்பார்களோ? நம்மை நாள் கணக்காய்க் காக்கவைத்து வதைப்பார்கள்..! கேட்டால்...? உடனே குழைவார்கள்! 'தேவி! பராசக்தி! எல்லாம் நீ தான்!" என்று காலைப் பிடிப்பார்கள்! வெட்கம், மானம் எல்லாவற்றையும் எளிதில் காற்றில் விட்டு விடுவார்கள்!

ப. பனம்பாரன்: நாகத்தின் முன்னால் நான் சீறமுடியுமா? நாகம் சீறினால் என்கதி என்ன ஆகும்...!

நாகை : ஏன், நான் என்ன அவ்வளவு கொடியவளா?

ப, பனம்பாரன்: நீ மட்டும் அல்ல...! உன்னைச் சூழ்ந்துள்ள எல்லாருமே கருநாகங்கள் ஆயிற்றே..!

நாகை: (சீற்றத்துடன்) பிறகு ஏன் என்னை நாடி வருகிறீர்கள்? கருநாகத்தைக் கண்டு அஞ்சுகிறவர் இங்கு ஏன் வர வேண்டும்?

ப, பனம்பாரன்: கருநாகங்கள் இடையே கருத்தைக் கவரும் மனத்தை மயக்கும் நாகமணி இருக்கிறதே! அந்த மணியை மாணிக்கத்தைப் பெறுவதற்காகவே உயிரைத் துச்சமாகக் கருதி, இங்கு வருகிறேன்.

நாகை: இங்கு நாகமும் இல்லை; நாகமணியும் இல்லை. அமைச்சர் கண்ணனாரின் அருமைத் தங்கை நாகைதான் இருக்கிறாள்.! நீங்களாக ஏதோ கற்பனை செய்து கொண்டு எங்களைப் பழிக்க வேண்டா!

ப. பனம்பாரன்: ஏன் இவ்வளவு வெறுப்பும் சலிப்பும்? உன் அண்ணன்மார், நான் இங்கு வந்துபோவதைப் பாம்புக் கண்ணர்களாக எப்படியோ பார்த்துவிடுகின்றனர். அதனால்....

நாகை: அச்சமாக இருக்கிறதா? இதற்கெல்லாம் அச்சப்படுகிறவர் இந்த நாகையை எப்படிப் பெறப்போகிறீர் போர்க்களத்தில் புறமுதுகிடாமல் போரிட்டால் போதுமா? வாழ்க்கைப் போரைக் கண்டு அஞ்சுகின்றவர், போர்க்களத்தில் வாகைகள் பல சூடுவதால் என்னபயன்?

ப. பனம்பாரன்: நீ..போர் என்றவுடன் எனக்குப் போரைப் பற்றிய நினைவு வந்துவிட்டது' நம் மன்னர், தொண்டை நாட்டின் வடகிழக்குப் பகுதியைக் காக்க, எல்லைக் காவல் படை ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும் என்று

திட்டமிட்டுள்ளார். வட எல்லைப் பகுதியிலிருந்து வந்த ஒற்றர்கள் 'பல்லவர்' எனும் ஆந்திர நாட்டுக் குறுநிலத் தலைவர்கள் தங்கள் ஆட்சியைத் தெற்கே–வேங் கடத்திற்குத் தெற்கே பரப்ப முயலுவதாகச் சொன்னார்கள்

நாகை: மீண்டும் தொண்டை நாட்டு அரசியல் வானில் போர் மேகங்கள் சூழத்தொடங்கி விட்டனவா...?.

ப. பனம்பாரன்:அயலார் படையெடுப்பில் இருந்து நாட்டைக் காக்க, நாம் போருக்கு ஆயத்தம் செய்தாக வேண்டும்!

நாகை :அப்படியானால் ...! இனி இந்த மண்டலத்தின் தளபதியை, இந்தப் பக்கம் காண இயலாது என்று சொல்லுங்கள்.

ப. பனம்பாரன்: ஆமாம்...! நெருக்கடி நிலை உண்டாகிவிட்டால். படைத் தலைவனுக்கு உண்ணவோ உறங்கவோ நேரம் ஏது?

நாகை : (விம்முகிறாள்) தான் ஒருத்தி காத்திருப்பேன் என்ற நினைவு உங்களுக்கு எங்கே இருக்கப்போகிறது? என் எண்ணத்தில் எழுச்சி உண்டாவதற்குள் இத்தகைய சோதனையா?

ப. பனம்பாரன்: அழாதே!இதற்குள் கண்கலங்கத் தொடங்கி விட்டாயே! அப்படி ஒரு நெருக்கடி வரலாம் என்றுதான் சொன்னேன்; வந்துவிட்டது என்று சொல்லவில்லையே!

நாகை : இன்றைக்கு 'வரலாம்' என்பீர்! நாளைக்கு வந்து "விட்டது' என்பீர்! இரண்டுக்கும் வேற்றுமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை போர் நெருக்கடி உண்டாகாமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்...! (தேம்புகிறாள்)

ப. பனம்பாரன்: (அவளைத் தேற்றியவண்ணம்) உன்னைப் போன்ற பெண்களைக் காணுகின்ற பொழுது,

மின்னலொடு இடியின்றிப் பெய்யெனப் பெய்யும்
கண்ணீர் மழையினள் பெண்.

எனப் புதுக்குறள் ஒன்றைப் படைக்கலாம்போல் தோன்றுகிறது!

நாகை : அப்படியானால் (தேம்பிக் கொண்டே) நீங்கள் எத் தனையோ பெண்களோடு பழ...கு... கி...றீ...ர்..களா...? (அழுகிறாள்)

ப. பனம்பாரன்: (சேர்த்துப் பிடித்தவண்ணம்) இது என்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகிவிட்டதே..! நாகு...!' என்மீது நம்பிக்கை இல்லையா? நீ தானே என் அன்புக்குரியவள்! உன்னைத்தவிர வேறொரு பெண்ணையும் நான் கனவிலும் கருதியது இல்லையே! பொதுவாகப் பெண்களே, இப்படித்தான் இருப்பார்களோ!' என்று சொன்னேன்.

நாகை : இல்லை... முற்றிலும் பொய்!

ப. பனம்பாரன்: இந்த முடிவிற்கு நீ வந்தது தவறு! உன்னைப் போன்ற பெண்கள் நிறைய இருந்திருப்பார்கள்! அவர்களிடத்தில் என்னைப் போன்ற ஆடவர் எத்தனை பேர் எவ்வெவ்வாறு அவதிப்பட்டனரோ?

நாகை : (கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) என்னங்க அது? புதிர் போடுகிறீர்? திருவள்ளுவரை ஏன் இங்கு வம்புக்கு இழுக்கிறீர்?

ப. பனம்பாரன்: ஓ...! உனக்குத் தெரியாதா? உங்கள் அண்ணா இளங்கண்ணன் பெரும்புலவர் ஆயிற்றே! இதை உனக்குச் சொன்னது இல்லையா?

நாகை: என் அண்ணன்மார் இருவருமே திருக்குறளை நாள் தோறும் ஓதுவார்கள்! அதிலும் இந்த நாட்டின் அமைச்சராக இருக்கும் என பெரிய அண்ணா, அரசியல் சிக்கல்களையும், நெருக்கடிகளையும் திருக்குறளைக் கொண்டு, திருவள்ளுவருடைய தெளிந்த அரசியல் அறிவுரைகளைக் கொண்டு தீர்த்து வருவதாகப் பெருமிதத்தோடு கூறுவார்.

ப. பனம்பாரன்: அப்படியானால் நீ திருக்குறளைப் படித்தது இல்லையா?

நாகை : ஏன் படிக்கவில்லை? இளமையிலேயே கச்சிப்பேட்டுப் புலவர் சேந்தனார், எனக்குத் திருக்குறளைக் கற்பித்தாரே...! 'முப்பாலில் மூன்றாவது பால் இப்பொழுது தேவையில்லை! உனக்கு வயது வந்த பிறகு நீயே படித்துப்புரிந்து கொள்ளலாம்!" என்று அவர் அப்பொழுது அறிவித்தார். எங்கள் சின்ன அண்ணாவும், 'அவர் சொன்னபடியே செய்" என்று சொன்னார்...! அதனால்...!

ப. பனம்பாரன் : அதனால் நீ காமத்துப்பாலைப் படிக்கவில்லையா...?

நாகை : (புன்முறுவலுடன்) இப்பொழுது நீங்கள்தான் சொல்லிக் கொடுங்களேன்...! நான் கற்பதற்குத் தயாராக இருக்கிறேன். நீங்கள்தான்....!

ப. பனம்பாரன்: எதை? காமத்துப்பாலையா? காதல் வாழ்க்கையையா?

நாகை: இரண்டையும்தாம்...!

ப. பனம்பாரன் : உம்... ! காலம் கனியும் பொழுது பார்ப்போம்..!

நாகை : (கிண்டலாக) இப்பொழுது என்னவாம் காலத்திற்கு...? இந்த மாலைக் காலம் ஏற்றது இல்லையோ?

ப. பனம்பாரன்: உன்னுடைய பருவத் துடிப்புப் பவனிவரும் இந்நேரத்தில், எண்ண எழுச்சிகள் எக்காளமிடும் இந் நேரத்தில், இதயத்தின் இதழ்கள் மலர்ந்து மணம் பரப்பும் இச்சமயத்தில் உன் கற்பென்னும் பொற்பேழையைச் குறையாட நான் தயாராக இல்லை!

நான் இந்த நாட்டின் தளபதி! நீயோ அமைச்சரின் அன்புத் தங்கை ! எல்லாம் முறையாக நடக்க வேண்டும். அதற்கு முதலில் நீதான் முயல வேண்டும்!

நாகை : நான் கேட்டது ஒன்று! அதை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீரோ? எனக்கும் பொறுப்புணர்ச்சி இருக்கிறது! நான் இந்த நாட்டின் புகழ்மிகு தலைமை அமைச்சர் காலஞ்சென்ற அருளாளரின் அருந்தவச் செல்வி என்பதை மறந்து விடவில்லை

நீங்கள் திருக்குறளில் இருந்து எடுத்துரைத்த கருத்தை விளக்குமாறு வேண்டினேன்! அதை, வருங் காலத்தில் நம் இல்வாழ்க்கையில் இனிது கடைப்பிடிக்க முயலலாம் என்னும் எண்ணத்தோடு 'இரண்டையும் தான்' எனச் சொல்லிவிட்டேன்.

இப்பொழுது அதைத் திருத்திக் கொள்ளுகிறேன்...! இப்பொழுது சொல்லுங்கள் ...! அதென்ன குறள் ...?

ப. பனம்பாரன்: எத்தனையோ குறட்பாக்களில் உன்னைப் போன்ற பெண்களின் மனநிலையைத் திருவள்ளுவர் படம் பிடித்துக் காட்டுகிறார்!

யாரினும் காதலம் ' என்றேனா, ஊடினாள்
'யாரினும் யாரினும் ' என்று!

இதை உனக்காகவே வள்ளுவர் பாடிவிட்டுப் போனதைப் போல் தோன்றுகிறது! (ஒரே சிரிப்பொலி)

காட்சி 3

இடம்: தொண்டைமானின் அரசவை.

நேரம்: காலை

மாந்தர்: தொன்டைமான், அமைச்சர், படைத்தலைவர். ஊராட்சி மன்றத்தினர், புத்ததத்த மகாதேரர், ஆந்திர நாட்டிலிருந்து வந்துள்ள பௌத்த**துறவிகள்**, காவலர்.

(நாட்டில் உண்டாகியுள்ள பஞ்சத்தைப் பற்றி அரசரும் அமைச்சரும் கலந்து உரையாடுகின்றனர்]

தொண்டைமான் : ' தவம் விளைத்திடும் காஞ்சியைத் தன்னிடத்து இருத்தி, தவம் விளைத்திடும் பெருமை பூண்ட' இத்தொண்டை நாட்டில் பஞ்சமா? பாலியாறு பெருக்கெடுத்து ஓடும் இத்திருநாட்டிலா பஞ்சம்?

அமைச்சரே! நம் ஊராட்சி மன்றங்கள் இந்நாள் வரை என்ன செய்து கொண்டு இருந்தன?

அ. கண்ணன் : தொடர்ந்து நான்கு ஆண்டுகளாகப் பருவ மழை பெய்யாமல் போனதால், தொண்டை நாட்டின் உழவுத் தொழில் நலிந்து போய்விட்டது அரசே! ஊராட்சி மன்றங்கள் ஏரிகளையும், குளங்களையும் நன்கு கண்காணித்து வருகின்றன. ஆனால்...!

தொண்டைமான் : ஆனால்...! என்ன?

அ. கண்ணன் : தொடர்ந்து மழை பெய்யாமையால் பாசனத்துக்கும் போதிய நீர் கிடைக்கவில்லை! அத்துடன்

பாலியாற்றில் நீர் வறண்டுவிட்டது. ஆடு மாடுகளுக்குப் போதிய நீர் கிடைக்காமற் போனாலும் போகலாம்...!

தொண்டைமான் : ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கலந்தீரா? பஞ்சத்தை உடனடியாகப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

கண்ணன் : வாழ்க எங்கோ! கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள நம் களஞ்சியங்களில் மூன்று ஆண்டுகளுக்குத் தேவையான தானியங்கள் சேமித்து வைக்கப் பட்டுள்ளன. அவற்றில் ஒரு பகுதியைக் கோட்டத் தலைவர்களிடம் ஒப்படைத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கஞ்சி வார்க்குமாறு ஆணை பிறப்பிக்கலாம்...!

ப.பனம்பாரன்: கஞ்சி வார்த்தால் மட்டும் போதுமா?

தொண்டைமான் : நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்?

ப. பனம்பாரன் : வாழ்க நின் கொற்றம்! அடிக்கடி நடை பெற்ற அயலாரின் தாக்குதல்களால், நம் மண்டலத்தின் உழவுத் தொழில் சீரழிந்து போய் விட்டது அரசே! நம் மண்டலத்தின் எல்லைப் புறங்களில் உள்ள மக்கள், அரும் பாடுபட்டுப் பயிரிட்ட வயல்களை எதிரிகள் திடீர்த்தாக்குதல்களின் பொழுது அழித்து விடுவதை, முன்னரே தங்கள் திருச்செவியில் சாற்றியுள்ளேன் அரசே!

தொண்டைமான் : ஆம்! மனத்திற்கு வேதனை தரும் செய்தி! நம் நாட்டுப் போர் முறையை அறியாதவர் அந்தக் கயவர்கள்! காட்டுவாழ் மக்களைப்போல், விளை நிலங்களை அழித்து, எல்லைப்புற மக்களைத் துன்புறுத்துகின்றனர்! பிறகு ஓடி ஒளிந்து கொள்ளுகின்றனர்! பேடிகள்! வீரம் இருக்குமானால், நேராகப் படையெடுத்து வரலாமே!

ப. பனம்பாரன்: ஆம் அரசே! முதலில் நம்மை ஏமாற்றி விட்டனர். அப்படிப்பினைக்குப் பிறகு. நம் வீரர்கள் எல்லைப்புறப்

பகுதிகளைக் கண்களை இமை காப்பதுபோல் காத்து வருகின்றனர்!

தொண்டைமான் : எல்லைப்புறப் பகுதிகளில்தானே இப்பொழுது பஞ்சம் உண்டாகி இருக்கிறது ...!

அ. கண்ணன் : வடகிழக்கு எல்லைப் பகுதி...! அமராவதிக்குப் போகும் பெருவழியில் உள்ள ஊர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன மன்னா!

தொண்டைமான் : இயற்கையிலேயே வறட்சியான நிலப்பகுதி அது!

ப.பனம்பாரன்: ஆயினும், அங்கு வாழும் நம் மக்கள் உள்ளவுரமும் அகத்தெழுச்சியும் வாய்ந்தவர்கள்! 'எதையும் தாங்கும் இதயம்' படைத்தவர்கள்!

அ.கண்ணன்: அரசே! உடனடியாக நாம் பஞ்ச ஒழிப்புப் பணியில் ஈடுபட வேண்டும்! உழவுத் தொழில் செய்வதற்கு வாய்ப்பின்றி உள்ள மக்களைத் திரட்டிப் பழைய ஏரிகளையும், குளங்களையும் ஆழப்படுத்தவும், செப்பம் செய்யவும் பயன்படுத்தலாம்! புதியதாக ஏரிகளைப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் அமைக்கலாம். மற்றும், பாலியாற்றிலிருந்து பாசனக் கால்வாய்கள் பலவற்றைப் புதியதாக வெட்டலாம். இப்பணிகள் மூலம் மக்களுக்கு வேலையும் கிடைக்கும்; கூலியும் கிடைக்கும். கூலியாகத் தானியங்களையே படியளக்கலாம்!

தொண்டைமான் : ஆம்! நல்ல திட்டம் அமைச்சரே! சென்ற மாதம் புலவர் இளங்கண்ணனும் நானும் மாறுவேடத்தில் திரையனூருக்குச் சென்று வந்தோம்; அங்குள்ள திரையன் ஏரிக்குள் இறங்கிப் பார்வையிட்டோம்...! பரப்பளவால் பெரிய ஏரிதான் அது! ஆனால், வண்டல் படிந்து, ஆழம் இல்லாமல் தூர்ந்து போய் இருக்கிறது!

பு இ.கண்ணன்: தொண்டையர் பெருமானே ! அப்பொழுதே, அதை ஆழப்படுத்த வேண்டும் என்று தங்களிடம் முறையிட்டேன்.

தொண்டைமான்: நன்றாக நினைவிருக்கிறது புலவர் பெருமானே! புறநானூற்றுப் பாடல் ஒன்றையும் மேற் கோள்காட்டி, உடனடியாக அப்பணியைச் செய்யுமாறு வற்புறுத்தினீர்!

வடவருடைய படையெடுப்பில் இருந்து நாட்டைக் காக்க, தற்காப்புப் பணிகளில் உடனடியாக ஈடுபட்டு விட்டேன்.

பு. இ. கண்ணன்: இதுவே தக்க தருணம் அரசே! பஞ்ச ஒழிப்புப் பணிகளில் முதன்மையானது இது. ஏரிகளை ஆழப்படுத்துவதும்.புதியதாக அமைப்பதும் போற்றத்தக்க செயல்கள்!

இவற்றோடு பாலியாற்றில் இருந்தும் பொன் முகலியாற்றில் இருந்தும் பல பாசனக் கால்வாய்கள் வெட்ட வேண்டும். அவற்றிற்குத் 'தொண்டைமான் கால்வாய்கள்' என்றே பெயரிடலாம்...!

தொண்டைமான்: வேண்டாம் புலவரே! வேண்டாம்! என் பெயர் எதற்கு? எந்தெந்த ஊராட்சி மன்றங்கள் அந்தப் பணியில் ஈடுபடுகின்றனவோ அவற்றின் பெயர்களைபே இடுதல் நாட்டிற்கு நல்லது...!

[காவலன் வருகின்றான் அரசரிடம் புத்ததத்த மகாதேரர் வத்திருப்பதாகச் சொல்லுகின்றான். உடனே அவரை அழைத்து வருமாறு காவலனை அரசன் ஏவுகிறான்}

அமைச்சரே! உடனடியாகக் கோட்டத் தலைவர்களுக்குப் பஞ்ச ஒழிப்புப் பணியினை மேற்கொள்ளுமாறு ஆணை அனுப்புக!

நாம் நாளை இரவு அப்பகுதிகளைக் காணப் புறப்பட்டுச் செல்லுவோம்! நேரில் கண்டு மக்களின் துன்பத்தைத் துடைக்க முயலுவோம்!

(புத்ததத்த மகாதேரர் ஆந்திர நாட்டுத் துறவிகளோடு அவைக்குள் நுழைகிறார். அரசன் அரியணையை விட்டு இறங்கி, அவையின் வாயிலை நோக்கிக் கை கூப்பி வணங்கி நிற்கிறான்)

புத்ததத்தர்: அறநெறி பிறழாத் தொண்டைமானே!

வாழ்க நின் கொற்றம்!

வளர்க நின் புகழ்!

அண்ணலின் அருள் நெறியால்

அனைத்துலகும் அன்பொளியில்

தழைப்பதாக!

தொண்டைமான் : அடிகளின் திருவடிகளுக்கு வணக்கம்! ஐயன்மீர் இந்த இருக்கையில் எழுந்தருளுக!

(வந்த துறவிகள் அனைவரும் இருக்கையில் அமருகின்றனர். அரசன் அரியணைக்குத் திரும்பிச் சென்று அமருகிறான்]

பெருமானே! தக்க சமயத்தில், தாங்கள் இங்கு எழுந்தருளியமை என் செய்தவப் பயனே!

புத்ததத்தர் : எதைப்பற்றி இப்பொழுது நீங்கள் மந்திர ஆலோசனை செய்கிறீர் என்பது எனக்குத் தெரியாது...! நான். சில நாள்களுக்கு முன்பே அரசரைக் காண விழைந்தேன்...! இன்றுதான் என் விருப்பம் கைகூடிற்று!

தொண்டைமான்: தங்கள் வருகை நான் பெற்ற பெரும் பேறு பெருமானே! தாங்கள் தொண்டைமானைச் சந்திக்க விரும்புவதாகச் செல்லி அனுப்பி இருந்தால்...!

புத்ததந்தர் : அது முறை அன்று அரசே! நாடாளும் வேந்தருக்கு எத்தனையோ பொறுப்புகள்!

மேலும், தனிப்பட்ட ஒருசமயத் தலைவரைத் தேடி அரசர் செல்லுவது...!

தொண்டைமான் : தவறில்லை மகாதேரரே! காவலனுக்கு "அறிவுரை வழங்கச் சான்றோர்கள் விரும்பினால்,

காவலனை அழைத்து அறிவுறுத்துவது நம் நாட்டு மரபு அல்லவா?

புத்ததத்தர் : அது அக்காலத்திய மரபு! இன்று காலம் மாறி விட்டது! சமயப்பூசல்கள் தலைதூக்கத் தொடங்கிவிட்டன அரசே! அதனால்தான், நான் அரசரை நாடி வந்தேன். தாங்கள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தீர்கள் போல் தோன்றுகிறது! நான் இடையில் புகுந்து...!

தொண்டைமான் : அதெல்லாம் ஒன்றும் இல்லை!' நம் குடிமக்களின் துன்பத்தைக் களைய - கண்ணீரைத் துடைக்க வழி வகைகளைக் காண்பதற்கு...!

புத்ததத்தர் : மன்னர் மன்ன ! நம் நாட்டு மக்கள் நலம்பல பெற்று நல்வாழ்வு வாழ்வதால், அவர்கள் கண்ணீர் வடித்து,'எம் இறை, கொடியன்' எனத் தூற்றுவது இல்லையே!

தொண்டைமான்: பகைவர்களின் தாக்குதல்களாலும், பருவ மழை பல ஆண்டுகளாகப் பொய்த்துப் போனமை யாலும் எல்லைப்புறத்தில் வாழும் நம் மக்கள் பெரிதும் அல்லற்படுகின்றனர்...! அவர்களுடைய துன்பத்தை...

புத்ததத்தர் : போதிமாதவரின் திருவருள் கைகூட்டும்...! கலங்க வேண்டா அரசே! 'எல்லைப் புறத்தில் வறட்சி! அதனால் உணவுப் பற்றாக் குறை! மக்கள் இடம் பெயரத் தொடங்கி விட்டனர்!' என்னும் செய்திகளைக் கேள்வியுற்றேன் அரசே ! அதனாலேயே உம்மிடம் வந்தேன்!

தொண்டைமான் : நன்று பெருமானே! தாங்கள் திருவுள் ளத்தில் கொண்டுள்ள கருத்து யாதோ?

யுத்ததந்தர் :

மண்திணி ஞாலந்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

என்பது ஆன்றோர் வாய்மொழி. புத்தர் பெருமான் போதித்த அறங்கள் அனைத்துமே மனிதனை மனிதனாக

வாழ வழிகாட்டுவன! அவற்றுள் தலையாயது—ஒப்பற்றது. —அரும்பசியை—மனித இனத்தின் கொடிய நோயாகிய பசிப்பிணியைப் போக்குவதே யாகும். இக்கச்சி மாநகரில் பௌத்த சமயத்தைப் பரப்பிய அறவண அடிகள்.

மக்கள் தேவர் எனஇரு சாரர்க்கும்
ஒத்த முடிவின ஓரறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் ஒன்றே...

என்று அன்று அறிவுறுத்தியதை, இன்று இவ் அவையினர்க்கு நினைவூட்ட விரும்புகிறேன் !

தொண்டைமான்: அதனால்தான் உடனடியாக இவ் அவையைக் கூட்டினேன்.

புத்ததத்தர் : நன்று! தனிமனிதன் பசியால் வாடுவதே பெருந் துன்பம்! திரளான மக்கள் கூட்டம், உண்ண உணவு இல்லாமல் வருந்தி மடியக் கூடாது அரசே!

அதற்காக நம் சங்கத்தின் சார்பில் வடகிழக்கு எல்லைப் பகுதியில் தண்ணீர்ப் பந்தல்களும் கஞ்சித்தொட்டிகளும் நிறுவ ஏற்பாடு செய்துள்ளேன்...! நூற்றுக்கு மேற்பட்ட நம் **துறவிகள்** இத்திருப்பணியில் ஈடுபடுவதற்குப் புறப்பட்டுக் கொண்டுள்ளனர், அவர்களுக்கு அரசு அலுவலர்கள் உதவிபுரிய வேண்டும். இன்று நம் சங்கத்தின் துணைத் தலைவர் தருமபாலர் அப்பகுதிக்குப் புறப்படுகிறார். தங்கள் பரிந்துரை ஆணை ஒன்றைக் கச்சி மகாபோதி சங்கத்திற்கு அளிக்குமாறு வேண்டுகின்றேன். மன்னரைக் காணவந்தேன்! அதற்காகவே

தொண்டைமான்: (எழுந்து நின்று வணங்கி) அடிகளே? தங்கள் திட்டத்தையே நாங்கள் செய்வதற்கு முனைந்துள்ளோம்; கோட்டத் தலைவர்களுக்கும், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளோம். தாங்கள்

எங்களுக்கு உதவிபுரிய முன் வந்தமைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்!

புத்ததத்தர்: மகிழ்ச்சி மன்னவா!

தொண்டைமான்: (அமைச்சரை நோக்கி) உடனடியாக நம் இலச்சினை பொறித்த ஆணையை அடிகளிடம் சேர்க்கவும்!

அ. கண்ணன்: நல்லது அரசே! (அமைச்சர் வெளியே செல்லுகிறார்)

தொண்டைமான் : மகாதேரரே! தங்களுடன் வந்துள்ள துறவிகள் புதியவர்களாகத் தோன்றுகின்றனரே?

புத்ததத்தர் : ஆம்! இவர்கள் ஆந்திர நாட்டில் அமராவதி சங்கத்திலிருந்து வந்துள்ளனர். அமராவதி பௌத்த ஸ்தூபி திருப்பணி நடை பெற்றுவருகிறது. அதற்கு நிதி...!

தொண்டைமான்: கச்சியம்பதி மட்டும் என்ன? தமிழகத்தின் மண்டலாதிபதிகள் யாவருமே உதவி செய்வார்கள்...! நம் அரசின் சார்பில் தங்கள் சங்கமே ஆவன செய்ய உதவுகிறேன்...!

பு.து. தலைவர் : மன்னவா! இதைவிட முக்கியமான வேறோர் பணியைச் செய்வதற்காகவும் நாங்கள் வந்துள்ளோம்...!

தொண்டைமான்: அதை நான் அறிந்து கொள்ளலாமா?

புத்ததத்தர் : (இடைமறித்து) ஒன்றும் இல்லை அரசே!

பு.து.தலைவர் : நம் புத்ததத்த மகாதேரரின் திருநூலான 'அபிதம்ம அவதாரத்தை'ப் பிற மொழிகளில் மொழிபெயர்க்க எங்கள் குருநாதர் தருமசீலர் விரும்புகிறார். அதற்கு இவருடைய இசைவைப் பெற வந்துள்ளோம்.

தொண்டைமான் :

மகிழ்ச்சி! அடிகளின் அரும்பணி
உலகெங்கும் பரவட்டும்!
கச்சியம்பதி மகாபோதி சங்கத்தின்
தொண்டினை உலகம் போற்றட்டும்!

(அமைச்சர் புத்ததத்தரிடம் பட்டயம் ஒன்றைக் கொடுக்கிறார். சான்றோர்களுக்கு அரசன் வணக்கம் கூறி, வழியனுப்புகிறான்)

காட்சி 4

இடம் : அமைச்சர் கண்ணன் மாளிகையை அடுத்துள்ள சோலை.

நேரம் : மாலை

மாந்தர் : **நாகை**, ப. பனம்பாரன், புவலர் இளங்கண்ணன்

நாகை: (தன் மேல் விழுந்த மலரை எடுத்து) மாதவி பூம்பந்தல் கீழ், மணிக்கவிதை ஒன்று எழுதத் தோன்றாதா என்று ஏங்கும் எனக்கு, நல்ல பரிசாக நீ கிடைத்தாய்?

உன்னை 'மாதவி' என்று யார் முதன் முதல் பெயரிட்டு வழங்கினரோ தெரியவில்லை...! (அம்மலரை மோந்து மகிழ்கிறாள்!) ஆனால், மாதரின் காதல் வேட்கையை அவிக்காமல் – குறைக்காமல் இது உனக்குப் பொருந்துமா? மிகுதிபடுத்துகிறாயே?

(மீண்டும் வேறொரு மலர் அவள் மீது பின்புறமாக இருந்து வந்து விழுகிறது. அவள் திடுக்கிடுகிறாள்]

யார் அங்கே?

ப.பனம்பாரன்: (புதருக்குப் பின்னால் இருந்து வெளிவந்து கொண்டே) அமைச்சரின் அந்தப்புரத்திற்கு யார் வரு வார்கள்? என்னைப் போன்ற வீரன்தான் வருவான்?

நாகை: விளையாட்டு போதும் படைத் தலைவரே! சிறிது நேரத்தில் பதைபதைக்கச் செய்துவிட்டீரே!

ப.பனம்பாரன்: அது என் தவறு இல்லையே! சோலைக்குள் நுழைகின்ற கன்னிப்பெண்கள், சோலையினுள் வேறு

யாராகிலும் இருக்கின்றனரா என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா?

நாகை : அதனால்...?

ப.பனம்பாரன்: அதனால்தான் அமைச்சருடைய தங்கையின் நெஞ்சுரத்தைச் சோதிக்கத் துணிந்தேன்....!

நாகை : சோதனை போதும்! என்னுடைய வேதனையைப் புரிந்து கொள்ளுங்கள்!

ப.பனம்பாரன்: வேதனையா...? காதல் வேதனையைப் போக்கத் தானே நான் ஓடோடி வந்தேன்...!

நாகை : உங்களுக்கு அதைத்தவிர வேறொன்றும் தெரியா தோ?

ப.பனம்பாரன்: எனக்குப் போரிடத் தெரியுமே!இதுவரை பதினாறு விழுப்புண்களை என் மார்பகத்தில் தாங்கிக் கொண்டிருக்கிறேனே அது தெரியாதா உனக்கு?

நாகை : போதும்..! உங்கள் பசப்பு மொழிகள் கசக்கத் தொடங்கிவிட்டன. எந்நேரமும் காதலைப் பற்றிய பேச்சு....அதை விட்டால் போரைப் பற்றியும் வீரத்தைப் பற்றியும் தான் பேசுவீர் இவற்றைத் தவிர வேறென்ன உங்களுக்குத் தெரியும்?

ப. பனம்பாரன் : வேறென்ன தெரிய வேண்டும்? உலகமே காதலையும் வீரத்தையுமே சுற்றிச் சுழலுகிறது! சிறந்த வீரர்கள் எல்லாம், நல்ல காதலர்களாகப் புகழ் பெற்று இருக்கிறார்களே உனக்குத் தெரியுமா?

நாகை : பொய்! அப்பட்டமான பொய்! சிறந்த வீரர்கள் நல்ல காதலர்களாக இருக்க இயலாது! சிறந்த காதலர் நல்ல வீரர்களாக என்றுமே இருந்ததில்லை...?

ப.பனம்பாரன்: ஏன் அப்படி நினைக்கிறாப்? உன் நினைப்புத் தவறு! திருமாவளவன் மாவீரன்! வெற்றிமேல் வெற்றிகள் பெற்ற மாபெரும் வெற்றிவீரன்! அவன் நாங்கூர்

வேண்மாளைக் காதலித்து மணம்புரிந்து கொண்டு, இன்ப வாழ்க்கை நடத்தவில்லையா?

நாகை: அதெல்லாம் வெறும் கதை! திருமாவளவன் வேண்மாளைக் காதலித்ததைவிட, வெற்றித் திருமகளையே பெரிதும் காதலித்தான்! இதற்குப் பாலைபாடிய உருத்திரங் கண்ணனாரே சான்று பகர்ந்துள்ளார்! இது தெரியாதோ உங்களுக்கு...?

ப. பனம்பாரன் : நான் புலவருடைய தங்கை இல்லை...! சரி நீ சொல்லுவதே உண்மை எனக் கொள்ளுவோம்! தலையாலங்கானப் போரில் மாபெரும் வெற்றி பெற்ற நெடுஞ்செழியன். ஒப்பாருமிக்காருமற்ற மாவீரன் அல்லவா? அவன் சிறந்த காதலனாக விளங்கவில்லையா?

நாகை : (புன்முறுவலுடன்) செயமகளைத்தவிர வேறொருத்தியையும் அவன் காதலித்தது இல்லையே! போர்வெறி கொண்ட அவனுக்கு, இல்லறத்தின் – காதல் மனையாளோடு களிப்புடன் வாழும் வாழ்க்கையின் – சிறப்பை எடுத்துரைக்கவே மாங்குடிமருதனார் 'மதுரைக்காஞ்சி'யைப் பாடினார்! அவர் பாண்டியனுக்குக் கூறிய அறிவுரை உங்களுக்குத் தெரியாதோ?

பொற்பு விளங்கு புகழ் அவை நிற்புகழ்ந்து ஏத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணம்கமழ் தேறல் மடுப்ப, நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி பெரும்!
வரைந்து நீ பெற்ற நல்ஊழி யையயே!

என்பதுதான் அந்தப் பொன்னான அறிவுரை! இதிலிருந்து அவனைச் சிறந்த காதலன் எனக் கருத இயலுமா? நீங்களே சொல்லுங்கள்!

ப. பனம்பாரன்:போதும் தாயே! மாவீரர்களை எல்லாம் காதலிக்கத் தெரியாதவர்கள் என்று சொல்லுகிறாய்! என்னால் நம்ப முடியவில்லை...! உன்னுடைய நிகண்டில் யார்தான் சிறந்த காதலர்கள்? அல்லது சிறந்த வீரர்களாகவும் நல்ல காதலர்களாகவும் விளங்கியவர்கள் யார், யார் என்பதைச் சொல்ல இயலுமா?

நாகை : (கலகல எனச் சிரிக்கிறாள்) இப்படி வாருங்கள் வழிக்கு! என்னுடைய கருத்துப்படி நம் நட்டில் இரு பெரு வேந்தர்களே மாவீரர்களாகவும், சிறப்புமிகு காதலர் களாகவும் விளங்கினார்கள்...! சோழன் நலங்கிள்ளியும் பூதப்பாண்டியனுமே அவர்கள்! மற்றவர்கள் எல்லாம் காதலைவிட வீரத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தனர். இதனால், அவர்கள் எல்லாம் காதல் வாழ்க்கையில் படுதோல்வி அடைந்தனர்!

ப. பனம்பாரன்: அந்த இருபெரும் வேந்தர்கள் மட்டும் இரண்டிலும் சிறந்து விளங்கினரோ?

நாகை: (புன்முறுவலுடன்) புகழ் ஆசை பிடித்த உங்களுக்கு வீரம்தான் பெரியது! முதன்மையானது! அதற்காக எதையும் தியாகம் செய்யத் தயங்கமாட்டீர்! நான் சொல்லுவது உண்மைதானே!

ப.பனம்பாரன்:நான் என் காதலியை விட்டுப் பிரியமாட் டேன்! இதுதான் உண்மை!

நாகை : அதைத்தான் – அந்தப் புதிய காட்சியை இந்தப் பழைய கண்களால் காணப் போகிறேனே! என்னிடத்தில் ஏன் சூளுரைக்கிறீர்?

ப.பனம்பாரன்: அதை அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது ஏன் இந்த வீண் வம்பு?

நாகை : உண்மை எப்பொழுதும் கசப்பாகத்தான் இருக்கும்...! திருமணத்தைப் பற்றிய பேச்சையே காணோம்...!

நாளைக் கடத்திக் கொண்டே போவீர்கள்! திடுமெனப் போர் வந்து விட்டால், உடனே எல்லாவற்றையும் – ஏன் ஆருயிர்க் காதலியையும் மறந்துவிடுவீர்! இந்த வீரர்களைக் காதலிப்பது, விட்டில் பூச்சிகள் விளக்கினை முத்தமிடுவதைப் போன்ற தற்கொலை முயற்சிதான் ...!

ப.பனம்பாரன்: ஏன் இவ்வாறு பேசுகிறாய்? காலம் கனிய வேண்டாமா? பொறுப்பான பதவியில் உள்ளவன் நான்...! எனவே, என் விருப்பம் போல் எதையும் செய்து முடிக்க இயலாது!

நாகை : (சலிப்புடன்) தெரியும்! எனக்கு நன்றாகத் தெரியும்! உங்களுக்கு எல்லாம் கடமைதான் பெரிது!

பத்து நாள்களாகிறது! பஞ்ச ஒழிப்புப் பணிக்காகச் சென்றர் பெரிய அண்ணன்: இன்னும் இந்தப் பக்கம்

அமைச்சருக்கு நாட்டுப் பணியே பெரிது!
புலவருக்கு அறிவுப் பணிக்கே நேரம் காணவில்லை!
உங்களுக்கோ படை திரட்டுவதே வேலை..!

இத்தகைய ஆண்கள் இடையே சிக்கிக்கொண்டு தத்தளிக்கும் என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க யார் இருக்கிறர்கள் ...? (அழுகிறான்),

ப. பனம்பாரன்: அழாதே நாகு! எவ்லாவற்றிற்கும் காலம், நேரம் வர வேண்டாமா?

நாகை: அதற்குள் எனக்குக் காலன் வந்துவிடுவான்...! பெற்றோர்கள் இல்லாத பெண்களைப் பற்றிக் கவலைப்படுவார் உலகில் யாரும் கிடையாதே!

ப. பனம்பாரன்: (சிரித்தவண்ணம்) நான் ஒருவன் இருக் கிறேன் என்பதையே மறந்து விட்டாயா?

நாகை: நீங்கள் பொழுது போக்கிற்காக இந்தப் பூஞ் சோலைக்கு வந்து போகிறவர் ஆயிற்றே...! இந்தப் பெண்ணைப் பற்றி ஏது உங்களுக்குக் கவலை?

பு.இ.கண்ணன் : (வந்து கொண்டே) நான் இருக்கிறபொழுது ஏன் அம்மா நீ கலங்குகிறா?

நாகை: இதைச் சொல்லுவதற்கு ஓர் அண்ணன் இருக்கிறாயே...! இது போதும்...!

பு. இ.கண்ணன் : உனக்கென்னம்மா குறை! தொண்டை நாட்டின் அமைச்சரே உன் அண்ணன்! படைத்தலைவரே உன் காதலர்! நாடுபோற்றும் நற்றமிழ்ப் புலவன் இந்த அண்ணன்! இத்தகைய பேறு. யாருக்கு அம்மா கிடைக்கும்?

நாகை : போதும் அண்ணா...! போதும்! இந்த வீண் பெருமைக்கு என்ன குறைச்சல்? 'தேன்' என்று ஓலையில் எழுதிச் சுவைத்தால் இனிக்குமா அண்ணே?

(இடையில் ப. பனம்பாரன் நழுவப் பார்க்கிறான்!)

பு.இ.கண்ணன்: நழுவாதீர் தளபதியாரே! **நாகையின்** கேள்விக்கு மாற்றம் உரைத்துவிட்டுச் செல்க!

ப. பனம்பாரன் : முறைப்படி விரைவில் ஆவன செய்கிறேன்

பு.இ. கண்ணன் : அப்படிச் சொல்லும்! காலத்தைக் கடத்துவது பெருந்தீங்காக முடியும்! 'விரைவில் என்றால் அடுத்த வாரத்திலா? அடுத்த மாதத்திலா என்பதைச் சொல்லும் நான் அண்ணனிடம் கலந்து ஆவன செய்கிறேன்!

நாகை : அவருடைய நிகண்டில் 'விரைவு' எனும் சொல்லிற்கு 'இரண்டு மூன்று ஆண்டுகள்' என்பது பொருள் அண்ணே!

ப.பனம்பாரன்: நீயும் உன்அண்ணனுடன் சேர்ந்து என் காலை வாங்குகிறாயா!

நாகை: முதன் முதல் நீங்கள் என்னை எப்பொழுது சந்தித்தீர்கள்? என் தந்தை மறைந்த சமயத்தில் அல்லவா? அப்பொழுது என்ன சொன்னீர்! விரைவில் திருமணம் செய்து கொள்ளுகிறேன் என்று சொன்னீர்!

ப. பனம்பாரன் : அன்று கொடுத்த உறுதிமொழியை நான் மறுக்கவில்லையே!

பு.இ.கண்ணன் : மறுக்கவில்லை..உண்மைதான்! இப்பொழுது எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

நாகை : நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன ! 'கட்டுண்டோம்! பொறுத்து இருப்போம்! காலம் வரும்" என்று காத்திருந்ததுதான் மிச்சம்'

ப.பனம்பாரன் : இப்பொழுது ஒன்றும் முழுகிப் போய் விடவில்லையே!

பு.இ.கண்ணன் : மங்கையாக இருந்த என் தங்கை. இப்பொழுது மடந்தையாகி விட்டாளே! நீங்கள் போகிற போக்கில் விட்டால், அவள் பேரிளம் பெண்ணாக– ஒளவைப் பாட்டியாக ஆகிவிடுவாளே...!

(எல்லாரும் சிரிக்கின்றனர்)

ப.பனம்பாரன் : உங்களோடு பேச என்னால் இயலாது!

பு. இ கண்ணன் : "நான் வில்லினால் பேசவல்லேன்!' வாளினால் பேசவல்லேன்! வாயினால் பேச அறியேன்" என்கிறீரோ?

நாகை : [சிரித்துக் கொண்டே) போதும் அண்ணா! அப்புறம் அவர் வாளை உருவிக் கொள்ளப் போகிறார் [சிரிப்பு]

ப.பனம்பாரன் : என்னைப் பைத்தியக்காரன் என்று இருவரும் நினைத்து விட்டீர்களா?

பு.இ. கண்ணன் : காதலர்கள் எல்லாமே பைத்தியக்காரர்கள் தானே! [ஒரே சிரிப்பு ஆரவாரம்]

காட்சி 5

இடம்: பஞ்ச ஒழிப்புப் பணிமனை

நேரம்: பிற்பகல்

மாந்தர் : தருமபாலரும், வேறுசில பௌத்த துறவிகளும்

தருமபாலர்: (இரு துறவிகளையும் நோக்கி) எப்பொழுது நீங்கள் காளத்தி மலைப்பகுதியில் இருந்து வந்தீர்?

துறவிகள்: இன்று காலைதான் இங்குவந்தோம் அடிகள்!

தருமபாலர்: அந்தப் பகுதியில் நம் சங்கத்தின் பஞ்ச ஒழிப்புப் பணி எவ்வாறுள்ளது? மக்களின் பசியைப் போக்க இயலுகிறதா?

துறவிகள் புத்தர் பெருமானின் திருவருளால் ஓர் அளவிற்கு மக்கள் படும் துன்பம் குறைந்து விட்டது. ஆனால்...?

தருமபாலர்: ஆனால்... என்ன? உணவுப் பொருள்கள் போதவில்லையா? போதிய அளவிற்குத் தொண்டைமான் அரசியல் அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லையா....?

துறவிகள் : உணவுப் பொருள்கள் வந்து சேர்வதில்தான் திடீரென்று சென்ற வாரம் தடங்கல் உண்டாயிற்று...! அதனால்...!

தருமபாலர்: ஏன் தடை உண்டாயிற்று? அரசியல் அதிகாரிகள் அக்கறை காட்டவில்லையா!

துறவிகள் : இல்லை...! போதிய பாதுகாப்பு இல்லாமல் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தன. காளத்தி மலைக்குத்

தென்கிழக்கே உள்ள காட்டுவழியில் கொள்ளைக் கூட்டத்தினர், உணவுப் பொருள்களைக் கொண்டு வந்த வண்டிகளைச் சூறையாடினர். பிறகு காட்டினுள் ஓடி ஒளிந்து கொண்டனராம்...!

தருமபாலர் : அப்படியா நடந்தது? யார் அந்தக் கொள்ளைக் காரர்கள்? தொண்டைமான் படைவீரர்கள் அவர்களைக் கொன்று குவித்து இருப்பார்களே!

துறவிகள் : முதலில் அவர்கள் எளிதில் ஏமாந்தனர். இப்பொழுது தக்க பாதுகாப்போடு உணவுப் பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன.

தருமபாலர்: கொள்ளைக் கூட்டத்தாரைக் கண்டுபிடித்தனரா...?

துறவிகள் : அவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்குக் கொள்ளை அடிப்பவர்கள் இல்லையாம்! தொண்டை மண்டலத்தில், தங்கள் அரசியல் ஆதிக்கத்தினை நிலைநாட்ட விரும்பும் குறுநிலத் தலைவர்களாம்.

தருமபாலர் : ஆந்திர நாட்டினரா? அல்லது...

துறவிகள் : ஆந்திர நாட்டில் படை வீரர்களாகவும் படைத் தலைவர்களாகவும் இருந்து, சாதவாகனப் பேரரசு அழிந்த பிறகு, அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களாம். அவர்கள் 'பல்லவர்' எனும் குலத்தைச் சேர்ந்தவர்களாகச் சொல்லிக் கொள்ளுகிறார்களாம்.

தருமபாலர் : அவர்களை அடக்கியொடுக்க வேண்டுமானால் தொண்டைமான் மீண்டும் போருக்குத் தயாராக வேண்டுமே!

துறவிகள் : அப்படித்தான் தோன்றுகிறது! தலைநகரில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டு விட்டதாகச் சொல்லுகிறார்கள்! கோட்டை வாயில்கள் மூடப்பட்டு விட்டனவாம்!

தருமபாலர் : அவ்வாறு நெருக்கடி நிலை மூண்டு விட்டடிருந் தால். இந்நேரம் நம் குருநாதரிடமிருந்து நமக்குப் புதிய கட்டளைகள் பிறந்திருக்குமே!

துறவிகள் : அதைப்பற்றி அறிந்து செல்லவே, நாங்கள் வந்துள்ளோம்.

தருமபாலர் : 'காளத்தி மலைப்பகுதியில் இருந்து நம் பணியின் முன்னேற்றம்பற்றிச் செய்திகள் ஒன்றும் வரவில்லையே!" என்று எண்ணி இருந்தேன். உங்கள் வருகையால் பல செய்திகள் தெரியவந்தன.

துறவிகள் : இந்தப் பகுதியில் தங்கள் பணி எவ்வாறு இருக் கிறது?

தருமபாலர் : மக்களின் துன்பத்தைக் குறைக்க முடிகிறது. ஆனால், காட்டுத் தீப்போல் பஞ்சம்தான் எல்லைப்புறப்பகுதிகளில் இருந்து உள்நாடு எங்கும் பரவத் தொடங்கி விட்டது! அதனால், பல புதிய நோய்கள் தோன்றியுள்ளன. அவற்றால் மக்கள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

துறவிகள் : வழியில் சில கோரக் காட்சிகளைக் கண்டோம்! அவற்றோடு நம் பௌத்த பிட்சுகள் நடத்தும் வைத்திய விடுதிகள் இரண்டினையும் பார்த்தோம்!

தருமபாலர்: ஆம்! கஞ்சிவார்க்கும் அறச்சாலைகளை அங்கங்கே அமைத்ததோடு, இரண்டு வாரங்களாகப் பத்துக்கு மேற்பட்ட மருத்துவ விடுதிகளைத் திறந்துள்ளோம்.

அவற்றிற்கு வேண்டிய பச்சிலை மருந்து, மூலிகை களையும், மருத்துவப் பயிற்சிபெற்ற நம் துறவிகள் சிலரையும் இங்கு அனுப்பி வைக்குமாறு குருதேவருக்குத் திருமுகம் அனுப்பி ஒரு வாரம் ஆகப்போகிறது. அங்கிருந்து துறவிகளின் வருகையை எதிர் நோக்கிக் கொண்டுள்ளேன்.

துறவிகள் : நல்ல காலம்! எங்கள் பகுதியில் நோய் நொடி ஒன்றும் இல்லை! பஞ்ச ஒழிப்புப் பணிகளால் மக்கள் பிழைத்துக் கொண்டனர். ஓரிரு திங்களுள் அந்தப் பகுதிகளில் பழையநிலை திரும்பிவிடுமென நம்புகின்றோம் அடிகள்!

தருமபாலர் : போதிமாதவரின் திருவருள் துணைபுரிவதாக!

இதற்கு இடையில் போர் மூளாமல் இருந்தால் மக்கள் பஞ்சத்தின் கொடிய பிடியிலிருந்து தப்புவர்! நம் நாடும், பசியும் பிணியும் இன்றி, வசியும் வளனும் பெற்றுத் தழைக்கும்!

துறவிகள் : புத்தர் பெருமானின் திருவருளே துணை நிற்கும் அடிகள்! நம்முடைய சங்கத்தின் தொண்டால் மக்கள் துன்பக் கடலில் இருந்து விரைவில் கரையேறுவர்!

[அப்பொழுது போர் முரசு கேட்கிறது; குதிரைகளின் ஓட்டமும் படை வீரர்களின் ஆரவாரமும் காதுகளைத் துளைக்கின்றன. அமராவதிப் பெருவழியில் பஞ்ச ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த **துறவிகள்** ஓடோடி வருகின்றனர்]

தருமபாலர்: (துறவிகளின் பதற்றத்தைக் கண்டு) பதற்றம் வேண்டாம்! அஞ்சற்க! என்ன நிகழ்ந்தது சோதரர்களே?

புதிய துறவிகள் : எல்லைப் புறப்பகுதியில் தொண்டைமானின் படைகள் குவிக்கப்படுகின்றன. பல்லவரின் திடீர்த் தாக்கு தல்களை முறியடிக்க, நம் படைகள் அங்கு அனுப்பப்படு கின்றனவாம்....!

தருமபாலர் : பெருமான் அருள் பாலிப்பாராக! தற்காப்பிற்காகச் செல்லும்படையா இது? போரால் மனித சமுதாயம் அழிந்தது போதாதா? உலகில் என்றுதான் 'அடுதீ அல்லது சுடுதீயை' அறியாத இனிய வாழ்க்கை அமையப் போகிறதோ? மக்கள் எல்லாம் 'திருவில் அல்லது கொலை வில்' காணாத திருநாள் என்று வரப் போகிறதோ? அந்த நாள்தான், மனித இனத்தின் வரலாற்றில் புதியதொரு திருப்பு மையத்தை

உண்டாக்கும் பொன்னாளாக அமையும்! அந்தநாள் எந்த நாளோ?

பொருந்து போதியில்
இருந்த மாதவர்
திருந்து சேவடி
மருந்து மாகுமே!

எனும் உண்மையை உலகிற்கு உணர்த்துவோம்!

காட்சி 6

இடம்: சுச்சி மகாபோதி சங்கம்

நேரம்: முற்பகல்

மாந்தர் அமைச்சர் கண்ணன், புலவர் இளங்கண்ணன், நாகை, பௌத்த துறவிகள்.

புத்ததத்தர் :[திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் அமைச்சர் குடும்பத்தினரை வாழ்த்துகிறார்]

அருணெறியால் பாரமிதை
 ஆறைந்தும் உடனடக்கிப்
பொருள்முழுதும் போதியின்கீழ்
 முழுதுணர்ந்த முனிவரன்தன்
அருள்மொழியான் நல்வாய்மை
 அறிந்தவரே பிறப்பறுப்பார்
மருள்ஒழிந்து அன்னவரே
 மகிழ்வோடு பணிபுரிவார்.

அன்பர்களே! புத்தர் பெருமானின் அருள் ஒளியில், உங்கள் உள்ளத்து இருள் நீங்கிவிட்டதை உங்கள் முகப் பொலிவே உணர்த்துகிறது! எழுந்திருங்கள்! அண்ணலின் அடிகளை அடைக்கலம் அடைந்தோர். அன்பர்பணி செய்வதில் தங்கள் துன்பத்தைக் கரைத்து விடுவர். அதனால் மனக்கவலை இன்றிப் பிறவிப் பெருங்கடலை நீந்துவர்!

அ.கண்ணன் : ஐயனே! தாங்கள் காட்டிய வழியில் எங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கிவிட்டோம்...! அண்ணலின் திருவருளால் எங்கள் குடும்பத்திற்கு உண்டான பெருந்துன்பம்,கதிரவன் எழக் கடும்பனி மறைவதைப் போன்று, இருக்கும் இடம் தெரியாமல் என்றோ மறைந்து விட்டது! ஆம்! என் தங்கையின் பேதுற்ற மனம் தெளியத் தொடங்கிவிட்டது! வாழ்க்கையின் உட்பொருள் என்னவென்பதை நாகை புரிந்து கொண்டுவிட்டாள்!

இனி அவள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்க மாட்டாள்! போரில் மடிந்துவிட்ட, தன் காதலனை நினைந்து நினைந்து,எண்ணாத எண்ணமெலாம் எண்ணி, இனி தற்கொலை முயற்சியில் அவள் ஈடுபடமாட்டாள் என நம்புகிறேன் அடிகள்!

யுத்ததத்தர் : குழந்தாய்! புத்தர் பெருமானின் திருவடிகளை அடைக்கலம் அடைந்தவர்க்கு மனக்கவலை மறைந்து போகும்!

அனுபவத்தில் நீயும் அதைக் கண்டு இருப்பாயே அம்மா!

நாகை: (குனிந்த தலைநிமிராமல்) ஆம் அண்ணலே!

யுத்ததத்தர் : நம் கச்சி மகாபோதி சங்கத்தில் துறவியாகச் சேருவதற்கு முன்னால், உனக்கு மனமாற்றம் உண்டாக வேண்டும்! அறிவில் தெளிவு உண்டாகவேண்டும்! இந்தப் பரந்த உலகில், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான துன்பம் உண்டாவது இயற்கை என்பதை இந்த நிலையில் நீ புரிந்து கொள்ள வேண்டும்! இவை யாவற்றையும்விட "வையகத்தில் பிறப்புளதேல் இறப்புமுண்டு; மாற்றரிய விதியிது " என்பதைக் குழந்தாய் நீ உணர வேண்டும்! இந்த நோக்கத்துடனேயே உங்கள் மூவரையும், அமராவதிக்குச் சென்று அண்ணலின் அருளைப்பெற்று வருமாறு அனுப்பினேன்.

பு. இளங்கண்ணன் : தேரர்பெருமானே! நெடுந் தொலைவு சென்று அறியாத தங்கை நாகைக்கு, இந்த நீண்டநாள் பயணமும், இடமாற்றமும் மனமாற்றத்திற்குப் பேருதவியாக அமைந்தன. இவை யாவற்றையும்விட அமராவதி ஸ்தூபியின் அமைப்பும், அழகும் அவளுடைய சிந்தனைக்கு நல்விருந்தாயின.

புத்ததத்தர் : குழந்தாய்! குருதேவர் தருமசீலரைக் கண்டாயா? அண்ணல் காட்டிய அருள் நெறியின் மாட்சியை அவர் வாயிலாகக் கேட்டுணர்ந்தாயா?

நாகை: (கலங்கிய கண்களுடன்) ஐயனே! தாங்கள் அறிவுறுத்திய

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது! பின்னது
அற்றோர் உறுவது!

எனும் அறவுரையைப், பல கதைகள் வாயிலாக அவர் விளக்கினார். துன்பத்தை மறக்க, தொண்டு புரிவதே சிறந்தவழி என்பதை அவர் எடுத்துரைத்தார்.

புத்ததத்தர்: போதிமாதவரின் திருச்செய்தியைப் புரிந்து கொண்டாய் அல்லவா?

நாகை : (தயக்கத்துடன்) என்னுடைய சிற்றறிவிற்கு எட்டிய முறையில் புரிந்து கொள்ள முயல்கிறேன் அடிகள்!

புத்ததத்தர்: நல்லது மகளே! இந்தத் தெளிவு வந்தால் போதும்! "மெய்யை மெய்யாகவும், பொய்யைப் பொய்யாகவும் காணும்தெளிவுடையார்.மெய்ப்பொருளைஅடைவார்கள். அவர்களே மெய்யான வேட்கையுடையவர்கள் " என்று பகவான் தம்மபதத்தில் கூறுவது முற்றிலும் உண்மை என்பதை நீ விரைவில் உணர்வாய்!

நாகை : வாழ்க்கையை இழந்த இந்தச் சிறு பெண்ணிற்கு, உலகம் முழுவதும் இருள் சூழ்ந்து தோன்றியது. அதனால் அதிர்ச்சியுற்றேன்! கலக்கமுற்றேன்! உயிர் வாழ்வதை விட, இறப்பதே மேல் என்னும் முடிவிற்கு வந்தேன்...! ஆனால், தங்கள் அறவுரை, இருளில் மூழ்கிய என் உள்ளத்தில் அருளற ஒளியைச் சுடர்விட்டு ஒளிருமாறு செய்துவிட்டது அண்ணலே! (பொருமுகிறாள்)

புத்ததத்தர் : கலங்காதே அம்மா! இந்த உள்ளொளியைக் கொண்டு, உலகமெலாம் நீ சாக்கிய முனிவரின் திருச் செய்தியைப் பரப்பும் திருப்பணியில் ஈடுபடுவாயாக! அப்பொழுது இப்பிறப்பின் உயர்வினை–சிறப்பினை–புனிதத் தன்மையை நன்கு உணர்வாய்! அப்பொழுது "அறிவாளி, விடாமுயற்சியால் மடிமையை விரட்டிவிட்டு, ஞானமாகிய கோபுரத்தில் ஏறித் துன்பமற்ற நிலையில் நின்று,கீழே துன்பத்தில் ஆழ்ந்துள்ள மக்களைக் காண்பான் ; மலையிலிருந்து கீழே சமவெளியைப் பார்ப்பதுபோல் அவன் மற்றவர்களைக் காண்பான்" எனும் அறவுரையின் உட்பொருளை நன்குணர்வாய்!

அ. கண்ணன் : தங்கள் அருளுரையும், புத்தர் பெருமானின் அறநெறியும் இனி என் தங்கையின் வாழ்வைப் பயனுடையதாக ஒளிபெறச் செய்யும் என நம்புகிறேன் அடிகள்!

புத்ததத்தர்: என் செய்யலாம்? வாழ்வில் உட்பொருளைக் கண்டவர் யார்? படைத்தலைவர் பனம்பாரனுக்கு எல்லைப் புறப்போரில் இத்தகைய அவலமுடிவு உண்டாகும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லையே!

இந்தப் பேரின்னலை – பேரிழப்பை அரசராலேயே தாங்கிக் கொள்ள இயலவில்லையே! இப்பேதைப் பெண் காதல்வயப்பட்ட கன்னிப் பெண் – தன் வாழ்க்கை மலர்ந்து மணம் வீசவேண்டிய நேரத்தில், கருகிய மொட்டாகப்

போவதைப் பொறுத்துக் கொண்டு வாழ இயலுமா? அதனால்தான் ...!

பு. இளங்கண்ணன்: அதனால்தான் பௌத்த தருமத்தை அடைக்கலம் அடைந்தோம்...!

புத்ததத்தர்: அன்றே "துன்பம்; துன்பகாரணம்; துன்பநீக்கம்; துன்ப நீக்கத்திற்குரிய நெறி " என்பனவற்றைக் கண்டு. உலகிற்கு உணர்த்தினார், நம் பெருமான். அக்கருணைக் கடலின் அருள்நெறியில் நின்று, அனைத்துயிரும் இன்பமுற ஒல்லும் வகையெலாம் ஓயாது பணிசெய்வோம்! "சேரவாரும் செகத்தீரே!' என நான் உங்களை அழைக் கின்றேன் !

நாகை: குருதேவா! என்னையும் தங்கள் சங்கத்தின் துறவியருள் – தொண்டருள் ஒருத்தியாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்!

புத்ததத்தர் : (அமைச்சரை நோக்கி) அம்மையின் எண்ணம் ஈடேற அறவாழி பயந்தோன் அருள்புரிவாராக!

அமராவதியின் திருப்பணி, நிறைவுறும் நிலையை எய்தி விட்டதா? தருமசீலர் விடுத்த செய்திகள் யாதாகிலும் உண்டா?

அ. கண்ணன் : அடிகளே! தங்கள் திருநூல் ஆந்திர மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு விட்டதாம் விரைவில் பிற மொழிகளிலும் எழுதப்படும் எனத் தெரிகிறது ஐயனே!

பு. இளங்கண்ணன்: தேரர் பெருமானே! புத்தர் பெருமானின் வாழ்க்கையையும் ஜாதகக் கதைகளையும் அங்குக் கண்கவர் சிற்பங்களாகச் செதுக்கியுள்ளனர். அவற்றைக் 'காணாத கண் என்ன கண்ணே?' எனக் கூறும்படி அவ்வளவு நேர்த்தியாக உள்ளன.

நாகை : 'சித்தார்த்தரின் துறவுக் காட்சி' நெஞ்சை நெகிழ் விக்கும் இனிய காட்சி! சுஜாதை அன்புடன் அளித்த

பால் சோற்றைப் பகவான் உண்ணும் காட்சி இன்னும் என் மனக்கண்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு காட்சியாகும்! என் வாழ்நாள் முழுவதையும் அங்கேயே கழித்துவிடலாம் போல் தோன்றுகிறது!

புத்ததத்தர் : நம் பேரருளாளனுடைய பெருஞ்சிறப்பு அது! நம் மனக்கவலையை மாற்றும் மாமருந்தாக அவனுடைய வாழ்வும் தொண்டும் அமைந்துவிட்டன!

அ. கண்ணன் : அண்ணலே! **நாகையின்** பேரால் அமராவதி ஸ்தூபியை ஒட்டி நிறுவப்பட்டு வரும் அர்த்த மண்டபத்தில், தூண் ஒன்றினை நாட்டும் திருப்பணியைச் செய்துள்ளோம்.

புத்ததத்தர் : மகிழ்ச்சி மக்களே! புத்தஞாயிற்றின் பொன்னொளி உங்கள் இருள் சூழ்ந்த வாழ்க்கையில் புத்தொளி பரப்பட்டும்! மகளே அடுத்த உவாநாளன்று உன்னை இச் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுகிறேன்.

புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி!

(முற்றும்)

நூலாசிரியரின் நூல்கள்

தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் – தமிழிணையம் – இணையத் தளத்தில் [https://www.tamil/digitallibrary.in] புத்தகங்களைக் காணலாம்.

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளி தரும் ஒளி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் வாழ்வும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு முதல் பகுதி –"விடி வெள்ளி" தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975,
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1976.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு. சங்கக் காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, the Great, Madras Publications, 1984.
11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.
12. Chieftains of the Sangam Age, 2001.

13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.
14. தமிழ்நாட்டு வரலாறு சங்கக்காலம்–வாழ்வியல் (நாகரிகமும், பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.
15. History of Tamilnadu (A Birds Eye View) Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம் :

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.
17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981.

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974–இல் பெற்ற நூல்)
19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.
21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.
22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.
23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.
24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு)) பாரி நிலையம், சென்னை, 1979.
25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.
26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம்,1984.
27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.
28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைகழகம், 2001.
29. திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.
33. Historical Heritage of the Tamils, Vol. I. International Institute of Tamil Studies, Madras, 1983.
34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–1 (பதினெண் கீழ்க்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
35. திறனாய்வு அணுகுமுறைகள் (கத.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1971.
37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1972.
38. Tributes and Translations of Tirukkural, 1986.
39. Historical Heritag of the Tamils
Dr.S.V. Subramaniyan & Dr.K.D. Thirunavukkarasu IITS, Tharamani, 1985

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1965,
41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு–3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.
42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

தமிழில் வெளியிட்ட கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.

2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:–

3. முல்லை சிரித்தது

4. பெண்ணா? பேயா?

5. மின்னிகரிடையான்

6. கள்வன் மகன்

7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952–53.

8. ஆன்ம நேயம்

9. மருந்து

10. பெரும்பிணி

11. பொய்யும் மெய்யும்

12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953

14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.

15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.

16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954

17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.

18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954

19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.

21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955

22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" – ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956

23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.

24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.

26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்றுக் கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.

27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.

28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.

30. தமிழகததில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.

31. ரோமானியர் கண்ட தமிழகம், எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)

32. மருதனாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் – அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்கக் காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத், 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார

சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியசு கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963. (நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி –5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பானம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.

63. நெடுநல்வாடை – திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.

64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.

65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.

67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.

68. இன்பம், கல்வி, சென்னை, 1966.

69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.

70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125 ஆவது விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

72. சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

73. பரணியின் பல்சுவை – இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.

74. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

75. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

76. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

77. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

78. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

79. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

80. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

81. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

82. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

83. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – 1, 1968.

1969

84. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

85. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

86. தமிழகத்தின் இசைக் கருவிகள், குழந்தை வீணை

காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

87. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

88. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1969.

89. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

90. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

91. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

92. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

93. திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

94. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

95. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

96. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

97. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

98. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை, 1969.

1970

99. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

100. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

101. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம்

திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

102. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

103. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

104. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு – திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

105. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

106. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

107. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

108. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

110. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

111. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப் பொன்விழா மலர், கழகம் சென்னை –1, 1970

112. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை –7, 1970.

1971

113. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை

1971

114. தமிழகத்தின் ஆண்டுக் கணக்குமறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

115. வரலாற்றின் எச்சரிக்கை விசய்நகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

116. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

117. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

118. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாசி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

119. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

120. வள்ளுவர் கண்ட மனிதன் – 1, தமிழியல்(JOTS) சென்னை, 1972.

121. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

122. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

123. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

124. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

125. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

126. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

127. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

128. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

129. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

130. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

131. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

132. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

133. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி 1973.

134. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

135. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

136. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

137. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

138. வள்ளுவர் கண்ட மனிதன் –2, தமிழியல், சென்னை, 1973.

139. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

140. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு – 1973.

141. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1973.

1974

142. சும்மா, மலைச்சாரல், சோளிங்க புரம், ஏப்ரல், 1974.

143. நூறாண்டு வாழ்க – திறனாய்வு, தமிழ்ப்பணி, 1974.

144. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

145. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

147. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

148. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

149. தாயா? தமக்கையா?, ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

150. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

151. எழிலோவியம் காணவாரீர்.

152. தமிழிற்கு ஓர் அறண்

153. அறிஞர் அறவாழி

154. சிலப்பதிகாரத்தின் மாண்பு

155. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை – 18, 1975.

1977

156. டாக்டர் மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை –30, 1977.

1978

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி

10, ஜூலை 1978

164. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பா; 1978

165. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 20, 1978.

166. நூல் அறிமுகம் – காளிதாசன் உவமைகள், புலமை தொகுதி –4, பகுதி 3,4, சென்னை –18, 1978.

167. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

168. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆண்டு 1979.

169. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

170. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010–ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

171. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை 12, தொகுதி 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

172. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

173. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை – 17.

174. மறுமலர்ச்சி

175. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

176. தமிழ் உரைநடை

177. உவமை

178. பொற்காலம்

179. பாவியலில் கற்பனை

180. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.3.1978.

181. கல்லணையைக் கட்டியது யார்?

182. பசி

183. பகை பிறந்தெறிதல்

184. நான்கண்ட அடியாருக்கு நல்லார் – தி.க.நாராயணசாமி நாயுடு 80–ஆம் ஆண்டு நினைவு விழா மலர்.

185. நன்னூல் உரை ஆசிரியர்கள்

186. சிறுநெறி

187. அறிவு என்பது என்ன?

188. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

189. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

190. தமிழரின் கலைக்கோட்பாடு, உ.த.ஆ. நிறுவனம் 9.2.87

191. மறுமலர்ச்சிப் பாடல்களில் கவிதை இன்பம்

192. முடமோசியார் – யவனரா?

193. பழியும், பாவமும்

194. வினையின் பயன்

195. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

196. இருட்டறை

197. மதுராந்தகம்

198. குறவஞ்சி

199. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

200. வேளிர்

201. மனம்

202. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

203. தேசீயம்

204. வரலாற்றுக் காலம்

205. வள்ளலார் காட்டிய வழி

206. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

207. வேதங்கள்

208. வீரயுகப் பாடல்கள்

1988

209. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர், 1988

210. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர், 1988

211. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

212. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

213. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும்

சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

214. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல் 1989

215. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

216. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

217. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

218. பழந்தமிழ்க்குடிகள், "முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

219. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை –4, நாள் 7.11.71

220. A Tamil Savant From the City of Madras (8.1.1901 to 27.8.1988)

221. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

222. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் – உ.த.க. நிறுவனம் 8.6.1977 83–ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

223. குறவஞ்சி

224. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுங்கங்களும்

225. இந்திய நாடகக் கலையின் தந்தை

226. படிமங்கள்

••••••••

வாழ்க்கைக் குறிப்பு

1)	தோற்றம் – மறைவு	20.11.1931 - 05.05.1989
2)	பிறந்த ஊர்	கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்
3)	கல்வி பள்ளிக்கல்வி	சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை
	புதுமுக வகுப்பு சென்னை	விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர்,
	இளங்கலை (ஹானர்ஸ்) தமிழ் பின்னர் முதுகலை (தமிழ்)	1951–1954 பச்சையப்பன் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல்நிலை
	முதுகலை வரலாறு	சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (1956)
	முதுகலை இலக்கிய ஆராய்ச்சி	"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்லைக்கழகம் (1963)

மொழியியல் பெருஞ்சான்று	அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)
முனைவர்பட்டம்	பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1979.
ஆசிரியர் பணி	1. 6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959. 2. 7 ஆண்டுகள், துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை 1962–1968 3. 2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968–1969 4. 3 ஆண்டுகள், திருக்குறள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம்," 1962–1972. 5. 19 ஆண்டுகள், இணைப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
தெரிந்த பிறமொழிகள்	சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1. சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம் 2. தி.ரு.வி.க விருது 1985

••••••••

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-78-3